உ

சிவமயம்.

காமாக்ஷியம்மன் றுணை.

இருபத்துநான்குமனையாராகிய

தேசாதிபதிகள்நாடகம்.

கோயம்புத்தூர்ஜில்லா

உடுமலைமாநகரம்,

அரங்கையசெட்டியாரவர்கள்

குமாரரும்,

சுப்புசெட்டியாரவர்கள்

சகோதரருமாகிய

திரிமூர்த்திக்கவிராஜஞான

பண்டிதரவர்களால்-இயற்றியது.

இஃது,

சென்னைமாநகரம்,

குளை - ஸ்ரீநிவாசபுரத்திலிருக்கும்

தருமகர்த்தா,

காவேட்டி - அருணகிரிசெட்டியாரவர்கள்குமாரர்

முநிசாமிசெட்டியாரவர்கள்

கேட்டுக்கொண்டபடி

புதுவை

க-சுப்பராயமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு

ஷை ஸ்ரீநிவாசபுரம்-செட்டிமை,

மக்கட-

துருகையசெட்டியாரவர்கள்

சகோதரர்

சூலையசெட்டியாரவர்களால்

கல்விக்களஞ்சிய அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இரக்தாக்ஷி௵ - ஆடிமீ.

~~149, 177~~

[illegible] —

1, 3, 6, 7, 17, 32, 35, 54, 65, 61, 131, 143,
149, 161, 177, 181, 185, 189

— [illegible]!

1, 3, 7, 54, 149, 177, 185

[illegible] ~~[illegible]~~

6, 180.

பொருளுதவிசெய்தபிரபுக்களின்

நாமதேயங்கள்.

பொ- ஆறுமுகன்செட்டியார்
பூ- சாரிசெட்டியார்
ஆ- சுப்பிசெட்டியார்
கொண்டன்செட்டியார்
வகையறுப் பேர்கள்
வடமலைசெட்டி
வகையறுப்பேர்கள்.
பள்ளபாளையம்.
நாராயணசாமிசெட்டியார்
சுப்பராயசெட்டியார்
ம- அவனாண்டிசெட்டியார்
இராமசாமிசெட்டியார்
முத்துச்சாமிசெட்டியார்
திரிமூர்த்திசெட்டியார்
பூ- கோனேரிசெட்டியார்
ஷெ- கஸ்தூரிசெட்டியார்
வா- அவனாண்டிசெட்டியார்
ஷெ- சின்னப்பசெட்டியார்
சி- ஷெ- இரங்கப்பசெட்டியா
தீ- க- கெட்டிமல்லிசெட்டியா
உ- செ- சின்னான்செட்டியார்
ஷெ- பெ- குமாரன்
சித்தன்செட்டியார்
க- அவனாண்டிசெட்டியார்
ப- அவனாண்டிசெட்டியார்
எ- வெங்கிளிசெட்டியார்
க- மணியகாரன்செட்டியார்
கொ- சு- சின்னையசெட்டியார்
ஷெ- குப்பக்காளிசெட்டியார்
கோ- சின்னுசெட்டியார்
ஷெ- திருமலைசெட்டியார்
ஷ- வீரன்செட்டியார்
ஷெ- சுப்பிசெட்டியார்
ஊறப்பட்டி

செ- செகநாதசெட்டியார்
பெ- சின்னாண்டிசெட்டியார்
பூசாரிசெட்டியார்
மணியகாரசெட்டியார்
பூளாவாடி.
ம- குமாரசாமிசெட்டியார்
ப- திருமலைசெட்டியார்
எர்ரசின்னன்செட்டியார்
அப்பையசெட்டியார்
பொன்னுசாமிசெட்டியார்
யானைமலை
செ- குமாரசுவாமிசெட்டியா
திரிமூர்த்திசெட்டியார்
ப- இராமசாமிசெட்டியார்
வேட்டைக்காரனூர்
செ- சீரங்கசெட்டியார்
பெ- குமாரன்செட்டியார்
திருமன்செட்டியார்
தாசன்செட்டியார்
தன்னேரிசெட்டியார்
எரிசெட்டி மூத்தன்செட்டி
வகையறுப்பேர்கள்
உடையகுளம்-சாமிசெட்டி
ஆத்துப்புள்ளாச்சி
செ- சீரங்கசெட்டியார்
குப்பன்செட்டியார்
சுப்பிசெட்டியார்
ஆங்கையசெட்டியார்
தத்தமங்கலம்
திருமலைமூத்தசெட்டியார்
குமாரன்செட்டியார்
மிருஞ்சான்செட்டியார்
சுள்ளன்செட்டியார்
வீரபத்திரசெட்டியார்

இவ்வுபகாரத்திற்குக்காரணத்தலைவர்
யானைமலை பெரியதனம் குப்பிச்சிசெட்டியாரவர்கள்

உ

சருணாம்பாள் துணை.

தலைப்புகளின் அட்டவணை.

தலைப்புகளின் அட்டவணை.

ஸ்ரீ

உ

காமாக்ஷியம்மன் துணை.

தேசாதிபதிகளின்

கோத்திரபேதநிவர்த்தி.

இவ்வம்ஸஸ்தர்களில் சிலவிடங்களிற் சிற்சிலர் அறுபத்து நாலு கோத்திரங்களுண்டென்பதாய்வழக்கஞ் செய்திருக்கின்றனர் அஃதை யாலோசிக்குமிடத்து-காரணம்-குறிப்பு - தொழில் - இடம் - பண்பு - முதலியவற்றால் வரும் வீட்டுப்பெயர்களைக் கோத்திரப்பெயர்களாகவைத்து - கொள்வன- கொடுப்பனசெய்துவருகிறதாகத் தெரியவருகின்றதாதலால் மேற்சொன்ன இருபத்துநாலு கோத்திரங்களே வாஸ்தவமாம் அக்காரணமுதலியவற்றால் வரும்பெயர்களுக்குத் திருஷ்டாந்த மியாதெனில் - மும்முடிக் கோத்திரத்தவர்களுக்கு - காரணத்தால தோட்டக்கூரக்காரரென்றும், குறிப்பால் - எர்ரபோகுலாரென்றும், தொழிலால் பிள்ளையாராரென்றும், இடத்தால்- வந்தவாசியாரென்றும், பண்பால்- சூரக்காரரென்றும், வழங்குகின்றதும், கோலகோத்திரத்தவருக்கு - காரணத்தால்- துப்பாக்கியாரென்றும், குறிப்பால் - ஜடகாவாரென்றும், தொழிலால்-தண்டுக்காரரென்றும், இடத்தால்-இராமகிரியாரென்றும், பண்பால் மூநிமுத்தாரென்றும் வழங்குகின்றதுமே திருஷ்டாந்தங்களாம் இதுபோன்ற இன்னம் அனேகம்பெயர்களிருக்கின்றதால் அறுபத்துநாலேயென்று எவ்வாறு அளவிடக்கூடும்- அநாதியாயுள்ள சாஸ்திர சாதனசம்மதக்கிரமமான இருபத்துநாலுமே எத்தேசத்தவர்களும் கைக்கொள்வதுமன்றி பேதவழக்கத்தைக்கைவிட்டு - நல்லொழுக்கம் - நற்கீர்த்தி - நன்னடக்கை- கல்வி- கேள்வி- பக்தி- அறிவு- ஞானமுதலிய வற்றிற்குரியவர்களாகி சாக்ஷாத்பரமேஸ்வரி - கஞ்சி- காமாக்ஷியம்மைதிருவடிகளுக்கு அன்புள்ளவர்களாவீர்களாக;

௲அகூ௫ ௵
ஜனவரி ௴

இங்ஙனம்.
தமதுவம்சஸ்தன்

திரிமூர்த்திக்கவிராஜ ஞானபண்டிதன்,

அரங்கேற்றியகாலத் தகமகிழ்ந் துரைத்தது:

தொட்டிக்கலைசமஸ்தானம்-ஓதுவார்

குமாரசாமிக்கவிராயர்-இயற்றியது.

சீர்கொண்டபரதகண்டத்தினிற்கச்சிநகர்............... *
தேவிகாமாக்ஷியன்பன்... ... ... *
திரிமூர்த்திகவிராஜஞானபண்டிதனெனுஞ் .. .. *
செந்தமிழ்ப்புலவரேறு ... ... *
ஏர்கொண்டநாலாறுமனையராயெங்கணு ... ... *
மிலங்குதேசாதிபதிக ... ... *
விசைகொள்மரபானநாடகமதனைநிலைபெற.......... *
வியற்றியச்சிற்பதித்துப்............ ... ... *
பேர்கொண்டசென்னைகுளைச்சீநிவாசபுர ... ... *
பெரியபஜனைச்சபைதனிற் .... *
பிரபலமிகுவித்வான்சபாபதிச்சுமுகனுற்............ *
பிரசங்கநலமாநடாத்திப் ... . *
பார்கொண்டரக்தாக்ஷிமார்கழித்தெய்தியிரு........... *
பான்மூன்றுகுருவின்வாரத்.. ... ... *
பகருமூலகுளபுலவர்மிகமகிழவெகுசிறப்...... ... ... *
பாயரங்கேற்றினனே............................ *

திருமுல்லைவாயில்- பசுபதிசிவயோகியார்மாணுக்கன்

த-வீ-சீதாராமமுதலியாரியற்றிய

(நேரிசைவெண்பா.)

கமலனரிநம்பனின்றாட்கலைமலர்வெற்பீந்தவரை'...... *
யமலநனுமார்பிடம்வைத்தார்களோ - உமைமகிழ்ந *
னேர்திரிமூர்த்திப்பிரமம்நிறைவுறுதேசாதிபதி... ... *
யார்புகழ்நாடகமருளலால்............................ *

பொருளுதவிசெய்தபிரபுக்களின்நாமதேயங்கள்.

நல்லூரார்	கணக்கம்பட்டியார்
புதூரார்	சிந்தலுவாடம்பட்டியார்
கோட்டூரார்	தெலுங்குபட்டியார்
துறையூரார்	கோதைமங்கலத்தார்
ஊற்றுக்குழியார்	ஆய்க்குடியார்
சங்கம்பாளையம்-சித்தூரார்	பூலக்காம்பட்டியார்
விளாமரத்துப்பட்டியார்	நாரணபுரத்தார்
இராகலவாவியார்	பவாநித் தாலூகாவினராகிய
பழநியூரார்	உ௬-மனையார்களாலும்

உ

சிவமயம்.

திரிமூர்த்திக்கவிராஜ ஞானபண்டிதர்

சரித்திரம்.

சுவஸ்தஸ்ரீ- விசையாத்புதகலியுகாப்தஹு - சக௲௭௱௨-ல்- சுபகிரு
துஹு-சகலவளங்களு நிறைந்த உடுமலைமாநகரத்தின் கண்வசிக்
கா நின்ற வாசவகோத்திராதிபதி சுப்புசெட்டியாருடைய கெர்ப்பா
வதாரரான - ம-ா-ா-ஸ்ரீ - அரங்கையசெட்டியாரவர்களுடைய
தபோ பலமே ஒருருவாகி அவரதுபத்தினியார் கருப்பந்தினின்ற
வதரித்துச் சுருதிநியமப்படி ஐந்துவயதில் நமசிவாயதேசிகரிடத்தி
ற் கல்விப்பயிற்சிபெற்று-அ- ஹுல்- தமதுபிதாபரகதியடையப்பி
ன்புமாதாவினுடையஅபேக்ஷயினால்அக்கல்வியைத் திரிகாலாநுஷ்
டானமாய்-௰௨- ஆண்டுவரையிலும் ஓதியுணர்ந்தனர்- அக்காலந்தம்
மாதாவும் சிவச்செயலாற்பரகதிபுக அம்மாதாவினையீன்றருளியமூ
தாதையாகிய குமாரஞ்செட்டியாருடையவும் அவரது பத்தினியாரு
டையவும் வாத்சல்யப்ரீதியாற் சவரக்ஷணை குறைவின்றி நடந்துகல்வி
ப்பயிற்சியின் முயற்சிக்கு அநுகூல மூண்டாக அக்கல்வியின்
முதிர்வால் தம்மையடைந்தோருக்குத்தருமார்த்தகாம மோக்ஷவிஷ
யங்களைப்போதிக்கவும் அவ்வாறு தாம்நடக்கவும் ஸ்நானவிரதசெ
பதப சிவ பூசைமுதலியவும் சர்வவிசேஷசற்குணங்களும் இவருட
ன்கூடவளருகிற- ௰௬- ஆண்டில்- சிவகடாக்ஷத்தாலும் பன்னூற்கரு
த்தையுணர்ந்த தெளிவினாலும் - பூர்வபிராரத்வ விசேஷத்தினாலும்
சிவபத்தி - குருசிரத்தை - வேதாந்தவிசுவாசம் மேலிட்டுச் சாதனசு
துட்டயமுதிர்ந்துதிவிரபக்குவத்துடனிருக்குங்காலத்துபிரமக்யான
ஈசுரபக்திபாசவைராக்யம் ஜீவகாருண்யமுதலியவைகளே ஒரு
வாயருளே திருமேனியாக்கொண்டு மௌன குருவாநந்தசுவாமிகள்
என்னு நாமதேயம்பொருந்தி யெழுந்தருளிய ஸ்ரீ பரம சற்குரு
வினாலருளிச்செய்யப்பட்ட மஹாவாக்யோபதேசம்பெற்று அந
ன்ற பரிபூரண சச்சிதானந்த சாக்ஷாத்பரப்பிரமமே தாமென்றெ
ளிதினுணர்ந் தங்ஙன மாராய்ந்தமைந்த, சாதுக்களின் சற்சங்கப்
பெருஞ்செல்வம் பெற்றவராய் தாம்வசித்த நகரத்திற்குச் சமீபி
த்த கோட்டேரியானை மலை காளியப்பகவுண்டனார் இவைகளில் தம்
மிடத்தில் வேதாந்தபாடங்கேட்ட மாணாக்கர்களின் வேண்டலா லவ்
விடங்களிற் சிலகாலம் வசிக்குங்காலத்தில் இவரவதரித்த சாதுவயி
சர்களென்னும் இருபத்துநான்குகோத்திரத்தார்களின் வேண்டுகலி

னுந்தாம்வழிபடுகடவுளாகியபராசத்தியான உமாமஹேஸ்வரிகரு
ணையினாலும்பிரமாண்டபுராணமுதலிய உபபலத்தினாலும் ௸ யார்
களைவிவேகக்யானசம்பந்தாளாகச்செய்யவேண்டுமென்னு மிவரது
விப்பிராயத்தாலும்அவர்களதுஉற்பத்திப்பிரபாவங்களாகியவருணாச்
சிரமதருமங்களைப்போதித்துப் பின்புதமது சித்தாந்தத்தைவெளி
ப்படுத்தலா மெனக்கருதிச் சொல்லப்புகுந்த விந்நூலைப்பாவின
மாக வியற்றிற் பலருக்கும்பயன்படாமைபற்றி நாடகத்தமிழிற்கீர்
த்தனரூபமாகச் செய்யத்துணிந்து இந்நூல் நிர்விக்கினமாய்நிறை
வேறும்பொருட்டுத் தாம்வழிபடு கடவுளுமிந்நூலுக்கேற்புடைக்க
டவுளுமாயிருக்கின்ற உமாமஹேஸ்வரியான ஸ்ரீகச்சிக்காமாக்ஷியம்
மனருட் பிரசாதத்தினால்வியாபாரகாலங்கடம்வனாயினு மியற்றிவருகி
ன்றவருக்கு அப்போது -உ௰- ஆண்டுநிறைவுற்றன- ஆயினும் பிற
நாயகனது சுகத்தையனுபவித்த கன்னிகை தனதுசொந்தநாயகன்
ஏவற்பணிவிடைகளில் மநம் பொருந்தி யிருக்கும்போதும் அப்
பிறநாயகனின்பத்தையே விரும்பினவளாத்தான் செய்யுங்கிரியைக
ளினுடன் பட்டுமுடன்படாமலிருக்கிறதுபோலும் ஓர்கழைக்கூத்த
னது செய்கைகாருடத்திலும் கருத்துடல்காப்பிலுமிருப்பதுபோ
லவேஇவரதுசெய்கைஇந்நாடகத்திலுங்கருத்துப்பிரமத்திலுமயிக்க
ப்பட்டிருப்பதுவுமன்றிஇல்லறவெறுப்புந்துறவுறவிருப்புமுண்டா
தலா லிக்கருத்தை இவரது பிரதமசிஷ்யர் கோவிந்த செட்டியாரு
ம்-உ-வதுசிஷ்யர் வெங்கடாசலம் பிள்ளையு மறிந்திவருடையதமய
னார்சுப்புச்செட்டியாருக்குத்தெரிவித்திக்கணமே விவாகத்தைநடத்
தினாலன்றிக் கூடாவென்னும் பிடிவாதத்தினாலும் இவரது -௯- வது
மாணாக்கர் வஞ்சியப்பக்கவுண்டருடைய பொருளுதவியாலுந்திருக்
கலியாணஞ்சம்பூரணஞ்செய்து ௸- ௯ - வது - மாணாக்கர் தம்பிட
த்திலேயே ஒன்றரைவருடகாலம்வைத்துச் சவரக்ஷணைசெய்து பாது
காத்துவருங்காலத்தில் தாமியற்றிய இத்தேசாதிபதிகள் நாடகம் மு
டிவுபெறாமையைத் தமையனாரது எச்சரிப்பினாலுணர்ந்து அன்று
முதலிதுமுபக்கிரமித்து வக்கமுண்டாய்ச் சோழனுக்குப்பெண்கொ
டுத்தகாண்டத்தைப் பாடிவரும்போதே இந்நூலையச்சிட்டரங்கேற்
றஞ்செய்யவேண்டுமென்கிற சித்தவிருத்திதோற்றமாய்இம்முயற்சி
திரவியானுகூலத்தா லாகவேண்டியதாதலால் இவ்வம்மிசஸ்தர்களுக்
கு இதுசங்கதிமுன்னமேதெரிந்திருந்தபோதிலும் இவரதுகருத்தை
புணாவிக்கும்பொருட்டு ௸யார்கள் வசிக்குமிடங்களுக்குச் சீட்டு
க்கவிமூலமாய்த்தெரிவித்தனர்.

தலைப்புகளின் அட்டவணை.

தலைப்புகளின் அட்டவணை - முற்றிற்று.

தி பிறந்து இவ்வளவுவிக்கினங்களும் வரச்செய்வது பரமேஸ்வரியாளை கருணாம்பாளன்றி வேறுபிறரால்வந்த தன்றெனத்தேர்ந்து தாம் நினைத்தவண்ணம்நிறைவேற்றிக் கடாக்ஷிக்கும் பரமதயாநிதியாகிய பராசத்தியை நிந்தாஸ்துதியாகத்தோத்திரஞ்செய்தனர்.

அத்தோத்திரமாவது.

கீர்த்தனம்- இராகம்-மோகனம்-அடதாளசாப்பு.

பல்லவி.

இந்தத்தாமதம் ஏனம்மா - காமாக்ஷிநான்
எண்ணியபடிசெய்யம்மா

அநுபல்லவி.

சொந்தத்தாயென்றுநம்பவும் - மைந்தன்மேலேநிறம்பவும்
தொந்தங்களையேன்விட்டனை - எந்தன்கையேன்தொட்டனை
இப்படியு.....முண்டா - சொன்னசொல்
தப்பிச்சொல லெண்டா - முன்னநீ
செப்பினது ...மிண்டா - அலதென்மேல்
தப்பிதமுங்... கண்டா - செய்தனை - (இந்த)

(சரணங்கள்.)

௧; கந்தக்கடவுளைப்பெற்று வளர்த்தலாற்
களைத்து இளைப்புண்டாச்சோ - இதற்குமுன்
கரிமுகனைப்பெற்றுப்பருவயிறுமிமெய்
காத்திரமாகிப்... போச்சோ
பிந்தித்தக்கன்வயிற்றிற்பிறந்ததிருவமும்
பெற்றதெப்படி...யாச்சோ - அதன்
பின்னேமலையரசன்றன்பாலேகியங்குப்
பிறந்துருவில ... தாச்சோ
தந்தைத்தக்கன்வேள்விசிந்தச்செய்ததில்மனஞ்
சலிப்புற்றோய்ந்து போச்சோ - மதுரைத்
தென்னவன்பாற்சிறுபிள்ளையாகும்போதுன்புத்தி
தவறிப்பேதைமை ... யாச்சோ
சந்த்ரமௌலியனுக்கிடப்பாகமானதால்
தயின்யங்கெட்டுப் போச்சோ - கங்கைச்
சக்களத்தியின்கூடநித்யம்வாதாடலால்
தடையுண்டாகிப் ... போச்சோ
அத்தையாகியஈசனுடன்சூதிட்டுத்தாமதித்தோ - அலதவ
ரிரண்டுகண்களைமூடப்பாவவ்வத்தேதித்தாமதித்தோ-அங்ஙனம்

வந்தபாவத்தைத்தீர்க்கப்போய்த்தவமாகித்தா மதித்தோ-தடுத்த
மகிடாசுரனொடெதிர்த்தப்போரில்மாறாடித்தாமதித்தோ-மற்றும்

எந்தத்தொந்தரைகள்வந்தது - சிந்தைக்கென்னிடர்கள்தந்தது
எந்தக்காரியமாயினும் - எந்தக்காரியம்போயினும்

இதற்குத்தடை... ... ...யேது - தடைவரில்
அதற்குத்திட...........மோது - உனைநம்பும்
சுதனொடினும்,..... ......வாது - செய்யாமல்
பதனமொடு..............யாது -காப்பதில்... (இந்த)

உ, சுப்ரமணியன்கணநாதன்அமுதுண்ணத்
தொடுத்துத்தடுத் ... ... திட்டாரோ - அதுவன்றிச்
சுந்தரமூர்த்திபால்தந்துபோவென்றோடிச்
சுழற்றிமறித் ... திட்டாரோ
அப்பர்வாதவூரர்திருஞானசம்பந்தர்
அடிகள்பிடித் .. திட்டாரோ - சதாகாலம்
அமரர்கள்முறைசொல்லியசுரர்கள்இம்சையை
அறிக்கையிட் ... டிட்டாரோ
செப்புதும்புருநாரதாதியர்சங்கீதஞ்
செவியிற்புகட் ... டிட்டாரோ - கணவனார்
ஸ்ரீகேளிசுரதசையோகத்திறலென்னைச்
சேரொன்றடுத் ... திட்டாரோ
தப்பாமல்நவகன்னிமார்கள்பிள்ளைகள்வந்து
தாயாதிகேட் ... டிட்டாரோ - வீரபத்திரர்
தமக்குள்ளபொருள்களைப்பகுத்துக்கொடுகொடென்று
தடுத்துப்பிடித் ... திட்டாரோ

எப்படிக்கிதனுக்குயோசனையென்று... ...இருந்தீரோ - உலகினில்
எவருக்கும்படியளக்கும்விஷயத்திலே யிருந்தீரோ - மூவருக்
குத்பத்திதிதிலயத்தைத்தெரிவித்துஉடன்பட்டிருந்தீரோ-துட்டரை
யொடுக்கும்வேலையைஅரிக்குக்கொடுத்ததற்குதவியிருந்தீரோ-ந
[ல்லது
அப்படிக்குண்டாகிலென்னையே-இப்பிரபந்தம்பாடென்றென்னையே
செப்பினையதுமறந்துபோயிற்றோ - இப்பவாகிலுங்கிருபையாயி
[ற்றோ

தினமுமிது ... தானோ - உனைநினைந்
தினமுமலை ... வேனோ - எளியனை
நினைகிலா ... தேனோ - கைவிடல்
எனாதுவிதி ... தானோ - அறிகிலன் (இந்த)

௩, கவிராஜபண்டிதர்சௌந்தரலகிரியைக்
கண்டின்பங் ... கொண்டாயோ - உவாவினிற்
கலைமதிவரக்கற்றஅபிராமிப்பட்டர்மேற்
காதலைக் ... ... கொண்டாயோ
குவிமுலைகௌரிப்பெண்கௌரிமந்திரம்ஓதக்
கொண்டாட்டங் ... கொண்டாயோ - தவம்பெற்ற
கும்பமுநிமுதல்பதினெட்டுப்பேர்கள்பாற்
குடியாகிக் ... கொண்டாயோ
புவிராஜர்பணிகாளிதாசன்கருணைத்தாசன்
புத்தியிடங் ... ... கொண்டாயோ - மற்றப்
புலவர்கம்பனொட்டக்கூத்தன்முதலியோர்பாற்
போயிருந்துக் ... கொண்டாயோ
இவர்கள்மேலிச்சைவைத்துக்கொண்டுநீயென்னைமறந்தாயோ- மற [ந்தால்
இரிசியாண்டிச்சிமொட்டுக்காரியென்றிடிப்பேனறிந்தாயோ- இது [தனை
எவர்களிடத்திலுஞ்சொல்லலாம்வாவிதுஎளிதென்றிருந்தாயோ-இதை [க்குறித்
தென்னசெய்வனிவன்பார்ப்பமென்றென்மேல்எசல்புரிந்தாயோ [சரிசரி
எவைகள்செய்யினுமுன்னைவிடுவனோ-இவைகள்விடவேறுவேலைதொ [டுவனோ
அவமதாய்விடவுனக்குத்தருமமோ - சிவசொரூபியேதினமும்வரு [டமோர்
அருளைத்தா ... வேண்டும் - தடையன்றிப்
பொருளும்வர... வேண்டும் - சிலர்செயுஞ்
சூனிகெட... ...வேண்டும் - விக்கினத்
திரளையட........வேண்டும் - கிருபைசெய் (இந்த)

இத்துதிபாடியருளிய இரவில் இவரது கனவிற்பரமேஸ்வரிபிரசன்னமாய் இஃதை நிறைவேற்றுவதற்கு இன்னொருவரிருக்கின்றனர் அவரால் நிறைவேற்றுகிறேன் நீவீண்பிரயாசைப்பட்டு என்மேல் நிந்தைகூறவேண்டாமென்று சொல்லிப்போயினள் அப்பால் அங்ஙனமே இக்கவிராயரது கருத்து சென்னைமாநகரத்தில் வசிக்கும் தமது பத்தர்களாற்றான் நிறைவேற்றி வைப்பளோவென்றும் அல்லது எவரைக்கொண்டு நிறைவேற்றுவளோ யாவுங்கண்டறியலாம் யாமும் சென்னைபட்டணம் போய்வரலாமெனநாடி அவ்வாறே ஷை நகர

த்திற்குவந்து அந்தநரகத்திலுள்ள தமதுபாந்தவாள் சகலரையுங்கண்டு தாம்பள்ளபாளையத்திலிருக்கும் நாராயணசெட்டியா ரவர்களுடைய குமாரர்கள் - சுப்பராயசெட்டியார் அமணாண்டிசெட்டியார் முத்துச்சாமி செட்டியாரிவர்கள் அனுப்பவந்தவரலாற்றைச் சொல்லி இக்காரியத்தைச் சம்பூரணஞ்செய்து தருகவென்று வேண்ட, அப்பந்துக்களி லொருவரும் அவ்வம்மிசத்திற்கு தர்மகர்த்தாவுமாகிய - ம - ா - ா - காவேட்டி-அருணகிரிசெட்டியார்குமாரர்முநிசாமிசெட்டியாரவர்கள் கல்விப்பயிற்சியிற்றேர்ந்தவரும் வித்வத்தன்மைதெரிந்தவரும் அம்மனால் இவரதுகனவில்வந்து சொல்லப்பட்டவரும் அவராகையால் இந்நூலிற்பகுத்தகாண்டங்கள் - ரு - யும்-பூரணமாக வியற்றிவைக்கவும் வித்வான்கள்வியப்பவும் இவ்வம்சஸ்தர்களுக்கெல்லாம் இந்நூலின்சிறப்பையும் பெருமையையும் கீர்த்தியையும் நன்றாய்விளங்கப்போதிக்கவும் அன்னோரைக்கொண்டே திரவியாநுகூலிக்கவும் தாமேமேற்கொண்டு இந்நூலை அச்சிற்பதித்து அரங்கேற்றுதலுஞ் செய்வித்தனர் இங்ஙனம் அரங்கேற்றியவற்றில் ஷை தேசாதிபதிகளால் தரப்பட்டசிறந்தவெகுமதிகள் யாவும்பெற்று இப்பால் தமதுசுதேசமாகிய உடுமலைமாநகரத்திற்குவந்துசனகனாதி திருவள்ளுவரீறாயுள்ள மஹாநுபாவர்கள் எந்நிலையிலில்லறத்திற் சுகித்திருந்தனர்களோ அந்நிலையிற்றாமும் பிர்மக்யானநிஷ்டான சாக்ஷாத்கார திருஷ்டியாற் சர்வமுந்தனதாத்ம லீலாவினோதமாகக்கண்டா னந்தித்தம்மன் கருணாகடாக்ஷத்தினால் நிறைந்தசுபமங்களகர செல்வத்துடன்வாழ்ந்திருக்கின்றன ரென்றறிக.

இஃனு

இவரதுமுக்யசிஷ்டர்

ரோமான்ஸ்கூல்-கோயம்புத்தூர்

உ-வது- மாஸ்டர்

முத்துவீரப்பபிள்ளையின் கருத்து.

சாற்றுகவி.

வித்வான்-காஞ்சீபுரம்

சபாபதிமுதலியாரவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

இயலிசைநாடகத்தமிழ்மூன்றும்மொருருவாய்வந்ததேனுமந்த...*
நயனெவருமுணரவேதிரிமூர்த்தியெனுநாமநன்னக்கொண்ட...*
பயனுறுநற்பாவலன்றேசாதிபர்களுடகஞ்சொல்பண்பைநோக்கி *
அயனதுநாவுறைவாணியென்ஞான்றுமிவன்வாக்கிலமர்ந்துளாளே *

இதுவுமது

பார்த்தனம்பாவாணர்வெகுபேணாத்தேசாதிபதியார்தம்பண்பைக்*
கீர்த்தனமாகச்செய்ததிரிமூர்த்திக்கவிராஜக்கேண்மையோன்போல்.
ஆர்த்தனஞ்சேருந்தடஞ்சூழுங்கச்சியாரேயிங்கறையக்கேண்மின் *
தீர்த்தனந்தமிறைபடைத்தவுலகெங்குந்தேடினுநாந்தேறொணுதால்

இஃது - வித்வான் காஞ்சீபுரம்.

சபாபதி முதலியாரவர்கள்

மாணுக்கராகியபுரசை- அஷ்டாவதானம்.

சபாபதிமுதலியார்

இயற்றிய நேரிசை- ஆசிரியப்பா.

நிலம்புகழமுதநெடும்பிறைத்துாநீர் ... ... *
பொலம்பெறவனேந்தருள் புரிசடைப்பெருமான் ... *
நன்னடிப்பூசனை தாழாதுளத்தில் ... *
உன்னுறவுளுற்று முறுவரிணகலாப் ... *
பேரருள்விளைக்கும் பிஞ்ஞகன்சதுமறைத் ... *
தேர்வருமிறுதியுந் தெளிந்தித்துணையெனக் ... ...*
காணருங்காட்சி கதிர்தருங்கண்ணுதல் ... *
மாணுயர்பாகம் வரையாதமர்ந்தாங் ... ...*
கெவ்வெவ்வுயிர்க்கு மீன்றவோர்தாயாய்ப் ... *
பௌவட்பிறவிப் படுபெருந்துயர்களைஇ ... *

சாற்றுகவி.

யாண்டாள்கருணை யடியர்க்குறுத்துந் ... ... ✲
தூண்டாவிளக்கொளி யாகியதொல்பரை ... ✲
இரட்டியநானான் கிருந்தருமமும்வளர்த் ... ✲
திருட்படுகலிநிலா தியாண்டுங்காத்தல்செய் ... ✲
தற்பரைபற்பல சாற்றரும்விம்பிதம் ... ✲
பொற்புறவோங்கும் புரிசைசூழ்கச்சியம் ... ... ✲
பதியிடையன்பர் பரிவுளநெஞ்சென ... ✲
வதிதருங்கௌரி வானளாமிமய ... ... ✲
மலைமுனியற்றிய மாதவப்பேறெனத் ... ✲
தொலைவருங்கருணை யுருவாய்த்தோன்றிய ... ✲
உமைமலர்ப்பாதத் தொருவாப்பத்திமை ... ✲
யமைவுறப்புரியும் அருந்தவமாட்சி ... ✲
இருபானான்கு மனையாரென்னு ... ... ✲
மரபினர்சரிதையை வரிசையின்வழாஅ ... ✲
தொண்டமிழ்மொழியி னுவகைகூர்சொன்னலம் ... ✲
வண்பொருணலம்பிற மருவுகீர்த்தனையா ... ✲
வொள்ளொளிவிரிக்கும் வெள்ளிவெற்பிறைகொளும் ✲
வேதியன்வேத வுருவெனும்வித்தகன் ... ✲
சோதிசூழ்கௌத்துவச் சுடர்மணிவெயிலாற் ... ✲
கூம்புதலிலாவிதழ்க் கோகநகத்துள் ... ✲
ஓம்புறுபொன்மக ளுறைமறுமார்பனும் ... ✲
வெள்ளைமேனிக் கள்ளவிழ்கோதைத் ... ✲
தேமொழிமகிழ்வுறூஉ நான்முகத்தொருவனுந் ✲
தாமெனவந்தருள் தக்கோனளித்த ... ✲
மேன்மைசால்திருவா வினன்குடிதழைக்கும் ... ✲
பழநிவாழ்தண்டபாணி மலர்ப்பதந் ... ✲
தொழுநெறிகைவிடாத் தோன்றலுள்ளன்பை ... ✲
யார்வம்பாய்ச்சிச் சீருறவளர்ப்போன் ... ✲
பைங்கூழ்ப்பழனப் பனிநீர்வானிடைத் ... ✲
திங்களநந்தந் திகழுடுக்கணம்புடை ... ✲
பரவுளவெனப்பரூஉமணிநித்திலம் ... ✲
விரவச்சுரிவளை வியப்பவிளங்கும் ... ✲
உடுமலைநகர முறைதிரிமூர்த்தி ... ... ✲
நெடுமொழிநாவல னிசைநெறீஇப்புகன்றதை ... ✲
யர்நெடுமரபின ரச்சிட்டளிக்கெனப் ... ✲
மன்னிளராகப் பரிந்தவருதவியால் ... ✲
நயன்றருபுலவரு ணயப்பப்

இஃது - புதுவை - தமிழ்ப்புலவர்

பொன்னுசாமிமுதலியாரவர்களியற்றியது

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

உலகிபறத்தின்மெருகுதிகள்யாவுமுறுபலவாற்றினுமியற்றி.........*
யிலகுதேசாதிபதிகடம்மரபிங்கிசைபிரமாண்டமாம்புராணத்.... *
தலவுநற்சரிதையனைத்துநாடகமாவுரைத்தனனுடுமலைநகர்க்கோர்*
திலகனுவலருண்மகிழ்திரிமூர்த்திச்செந்தமிழ்ப்புலவனுமன்றே...*

இஃது - கோயம்புத்தூர்ஜில்லா

உடுமலைப்பேட்டைகோர்ட்டுமுனிஷீப்

காசிவிஸ்வநாதமுதலியாரவர்கள்

இயற்றிய.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

திருமருவுக்சிவளர்காமாக்ஷித்தாய் ... ... *
செல்வரிருபாலுல்வர்சரிதைதன்னை ... ... *
பெருபுவியிற்புகலவல்லபுலவரின்றுத் ... ... *
பிறங்குமயிற்குகநீபோயிசைப்பாயென்ன ...*
மருவுதிரிமூர்த்திகவிராஜஞான ... ... *
மகத்துவபண்டிதனெனவந்தன்னோர்சிறைப் ... *
பொருவிலுடகஞ்சொலநாமகள்வெறீஇப் ... *
போயயனுப்பிறந்துமணம்புனைந்தாண்மாதோ ...*

இஃது - பாரிப்பாக்கம் - முநியப்பமுதலியாரியற்றிய

சந்தவிருத்தம்.

பிரகிருதிதிரிகுணமதுறுவடிவமெனவருசொல் ... *
பிரம்மணரியரனெடைவயுந் ... ... *
தருபரைதனருளிலகுதேசாதிபதிகளியல் ... *
சரிதைபிரமாண்டபுராணத் ... ... *
துரைசெய்வகைநாடகத்தமிழிலியைவித்தனன் ...*
உடுமலைநகர்க்கணுறையுந் ... ... *
திரிமூர்த்திகவிராஜஞானபண்டிதனெனுஞ்ஞ் ...*
செந்தமிழ்க்கவிஞரேறே ... ... *

இஃது - தத்தமங்கலம் - வாத்தியார் - சுப்புபிள்ளை இயற்றியது.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தண்கமலத்திறைதாதைபணியிராஜன் ... ... *
றனையழைத்துத்தேசாதிபதியார்காதை ... *

திண்கவிராஜக்யானபண்டிதன்றான் ... ... *
செப்பினதோர்ந்தவ்வனந்தன்றனைப்பாயாக ... *
வெண்பயவாரிதியில்விரித்ததன்மேற்பள்ளி ... *
வீற்றிருந்தானெனவிதஞ்சீர்விளம்பப்பாற்றே ... *

இஃது-உடுக்கம்பாளையம்

மு-சுப்பராயமுதலியாரவர்கள்

இயற்றியது-வெண்பா.

உலகுபுகழ்மாதாவுக்கொப்பாவானேனும் ... ... *
இலகுதிரிமூர்த்திக்கிணையோ-மலரவன்றான் ... *
ஒன்றுக்குமூன்றுக்குமுள்ளவிதற்பமதை ... *
இன்றுலகிலியாரறியாரோ ... ... *

இதுவுமது-அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

உலகுபுகழெண்மூன்றுமனையார்நாடகமதனையுயர்ந்தோரொல்லா *
மிலகுதமிழெனமெச்சவிதுபொருதகத்தியனுரினியதென்றன் ... *
மலயமலைதனிலொளிக்கவாணிமகிழ்ந்திவரிடத்தில்வந்துசேர ... *
நலம்பெருகத்திரிமூர்த்திக்கவிராஜஞானபண்டிதன்சொன்னானே *

இஃது - வேட்டைக்காரன்புதூர்

உபாத்தியாயர்

செல்லக்குமாருசெட்டியாரவர்கள்

இயற்றியது-கலித்துறை.

தகவுறுமூவெண்மனையாரியற்றுதவப்பயன்கண் ... *
டகமகிழ்ந்தீஸ்வரியருளுருவாகவந்தன்பர்புகழ் ... ... *
பகர்திரிமூர்த்திக்கவிராஜக்கியானபண்டிதற்கு ... ... *
நிகருளரோவிலைமும்மூர்த்தமேயிவர்நிச்சயமே ... ... *

இதுவுமது.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பாகவதம்பாரதம்ராமாயணமேமுதலாயபழையநூற்கள் ... *
ஆகமுளசூதமுநிவியாதமுநிவான்மீகமுநியுரைத்தார் ... *
யோகமுளதிரிமூர்த்திக்கவிராஜஞானமுநியுரைத்தவிந்த ... *
வாகமந்நேர்தேசாதிபதியார்நாடகத்தினுக்கொப்பறையொணாதே *

சாற்றுகவி-முற்றிற்று.

சிறப்புப்பாயிரம்.

நேரிசையாசிரியப்பா

செங்கமலாசனந் தங்கிநின்றுலக
மாக்குறுமயன்வரர் காக்குறநிமித்தம்
வாரணாசியி லாரணஞ்சொற்ற
விதிமுறையாற்று மதிதலைமகத்தி
னந்திதன்னம்சமா வந்தவதரித்த
பிருதிவிபீசன் றருவம்சராயு
நனிகலைக்கோட்டு முதிசெய்வேள்வியினிற்
றோன்றிநின்றரிய வான்றசீர்க்கச்சிப்
பதியிடையமர்ந்த நதிமதிமுடித்த
சடையினன்றனது புடையினிலமரு
மிறைவிகாமாக்ஷி நிறையருள்பெற்றோ
ரேழுண்டேயம் வாழ்திறலரசர்
மதித்திடவுலகத் துதித்திடக்கச்சி
யாதியதலத்தி னோதிடுமறநூல்
வழுவுறுதியாருந் தழுவுறச்செங்கோ
னடத்தியுந்தம்மை யடுத்தவர்ப்புரந்தும்
பிறர்பொருளுந்தம தறுபொருளென்ன
வட்டமாநிலத்திற் செட்டிமைநடாத்தியு
நாலாறுமனையார் நாலாறுகோத்திரத்
தாமொனும்பெருமைப் பேரதுபெற்றுந்
தெலுங்குவருணத்தரா யிலங்குதேசாதி
பதிகளென்றியம்பு மதிசாதுவம்ச
ரயனமர்திச் செயலீருகுஞ்
சரிதையிக்குலத்தினர் சரதமதாக
வரன்முறையுணர விரதமார்நூலிற்
றருகெனமரன்மிசைப் பெருகிடவிகள்செய்
மதிநிகரிருவிற் கதிபெறக்கோடரம்
பர்ப்தலினறவ மொய்விலாதோடி
வானதிபடருங் கானிறையம்புய
வட்டகைபோன்ற நெட்டிலைதிறைத்துத்
தேவமாதர்க ளோவிலாதுணைத்தருந்
தண்டலைசூழ்ந்த வெண்டிசையிறைவர்
மன்னியாங்குறையுஞ் சென்னைமாநகரை
யடுத்ததோருணா வடுத்தவிர்சீனி
வாசமாநகரின் மாசிலானரிய

கல்விக்கெல்லை செல்வக்காசர ... ... ❋
மணியினுக்காழி யொளியினுக்கருக்கன் ... ❋
கொடையினிற்கன்ன னடையினிற்றரும ... ✡
னறிவினிற்சேடன் பொறையினிற்பூமி... ... ✡
கந்தவங்கிரனென் னுசந்தகோத்திரத்தா ... ❋
னெங்கும்புகழ்தரு துங்ககாவேட்டி... ... ✡
யருணகிரிபூபன் கருணையினிழைத்த... ... ❋
மாதவப்பயனென வோதிடவந்த ... ... ❋
பெருமகன்சுசாதி தருமகர்த்தாவா... ... ❋
முநிசாமிமகிப னினிதோதமூவா ... ❋
றேசில்புராணத் தாசில்பிரம்மாண்ட ... ❋
புராணங்காமாக்ஷிப் புராணஞ்சுசாதி ... ❋
சாசநமுலகம் பேசுநற்காமக் ... ... ❋
கோட்டிபீடத்திற் நீட்டிடுசாசநம் ... ❋
பிருதிவியீசன் சரிதையோர்கச்சிப் ... ❋
பள்ளுகுறவஞ்சி யுள்ளபன்னூலெலா ... ❋
மாய்ந்தவ்வவற்றி னேய்ந்தவப்பொருளெலாந் ... ❋
திரட்டியிராக மிரட்டிடுதாள ... ... ❋
முதலியவமூவுரு ததிநயமாகக் ... ... ❋
கீர்த்தனைரூபமாச் சேர்த்திரசமுள ... ❋
நாடகத்தமிழி லாடகமென்ன ... ... ❋
வகுத்துமுன்சொன்ன மிகுத்திடுகன்னல் ... ❋
வளர்வயல்சூழ்ந்து மிளிர்சீநிவாச ... ❋
புரமதில்வாழும் வரமருள்மங்கள ... ❋
மகரிஷிகோத்திரன் புகனுயிர்நேத்திரன் ... ❋
அளகையனென்ன வளமிகுசெல்வன் ... ❋
றன்னையடுத்தோர் பின்னையோரிடத்திற் ... ❋
சென்றடுக்காது நன்றுறக்கொடுப்போன் ... ✡
இன்சொலையன்றி வன்சொலோர்போது ... ❋
முரைத்திடவறியான் வரைத்திணிதோளன் ... ✡
திரிபுரமெரித்த வரனது நுதற்கண் ... ❋
ணனலதுகாணாத் தநுவுறு மதனன் ... ❋
இட்டசஞ்சீவி செட்டிமாதவத்தில் ... ❋
வந்துயர்செட்டிமைச் சொந்தமாநடாத்திய ... ✡
திருகயபூபதிக் கொருநயகனிட்டன் ... ❋
சூலையவேளெனும் மேலையனுகிய ... ❋
வள்ளலுதவியா லெள்ளுதலில்லாச் ... ❋
சென்னைமாநகரி னுள்ளுசதுர்வேத ... ❋

சித்தாந்தசபைக்குக் கத்தாவெனுமுமா ... *
பதியெனுமிறைவன் றுதிமிகுகல்விக் ... *
களஞ்சியமென்னும் வளம்பெறுமச்சுக் ... *
கூடமதுதனை நாடிநடாத்து ... ... *
முருவினிலழகன் றிருவினின்மாதவன் ... *
அறிவினிலமைச்சன் பொறையினிற்றருமன் ... *
ஆயகோவித்த நாயகன்றன்னால் ... ... *
எழுதாவெழுத்தில் வழுவாநிசைத்தனன் ... *
நீதிநன்காய்ந்தே யோதிடுமரிய ... ... *
நேயர்கள்வாழுங் கோயம்புத்தூர் ... *
ஜில்லாவின்மிக்க வுல்லாசமாக ... ... *
விருப்பூமாது மொருபூவிருக்குந் ... ... *
தடமதுபெரிய கடலெனவாய்ந்தாங் ... *
கன்னம்பயில்தரு செந்நெனீள்வயல்சூழ் ... *
பொன்றயினிற்றூயென் றறைதருமறிஞர் ... *
நன்னெறிவழாது மன்னிவாழுமலை ... ... *
மாநகரத்தின் மேனவில்வாசவ ... ... *
கோத்திரனெனுஞ்சற் பாத்திரனுகு ... *
மரங்கையவள்ளல் பெருங்காதலிற்செய் ... *
தவப்பலனென்ன வுவப்புறவந்த ... ... *
சுப்புசெட்டியா ரொப்பிலநுசனுய் ... ... *
வந்தியலிலக்கியஞ் சொந்தமெனவோர்ந்தாங் ... *
கதிலுளபொருளெலா நிதமுநன்காய்ந்து ... *
பொறிவழிச்செலுநெஞ் சறிவொடுசெலுத்திப் ... *
பரமதையுணருந் திரமதினல்லன் ... *
வேதாந்தமோன- நாதாந்தகருணு ... *
நந்தசுவாமிகட் குகந்தமாணுக்கன் ... ... *
மன்னருள்ரூபி யன்னைகாமாக்ஷி ... ... *
விருப்பொடுதந்த வரப்பிரசாதி ... ... *
பத்திவைராக்ய சித்தசுத்தியினன் ... ... *
புத்தியில்பாஸ்கரன் சத்தியிலீஸ்வரன் ... *
தனத்திற்கேசவன் கனத்தில்வாசவன் ... ... *
குற்றமில்கடகரி வெற்றியில்நரகரி ... *
தவதிரிமூர்த்திக் கவிராஜ ... ... *
ஞானபண்டிதனென வானநாவலனே ... *

இஃது-பு-க- சுப்பராயமுதலியாரியற்றியது.

சிறப்புப்பாயிரம்-முற்றிற்று.

காமாக்ஷியம்மன் துணை.

இருபத்துநான்குமன்னயாராகிய

தேசாதிபதிகள் நாடகம்.

விநாயகர் துதி.

காப்பு.

(நேரிசைப்பின்முடுகு-சந்தவெண்பா.)

தெரியலணிகாமாட்சித்தேவிவரம்பூண்ட ...... ✱
பிரிதிவீசன்வம்சர்பெற்ற-சரிதைதனை.........✱
நாடகமதாவறையநாகமுகனைகமதை .... ✱
நாடகமதாநினைவனுன்.....................(க)

பாயிரம்.

இதுவுமது- விருத்தம்.

தெண்டிரைசூழ்புவியரசர்முதிவர்தேவர் ... ✱
சிறையகற்றும்பிரிதிவீசன்வம்சரான ... ✱
கொண்டனிகரிருபானுன்மனையாரொன்னுங்... ... ✱
கொற்றவராத்தேசாதிபதிகள்காதை ... ✱
மண்டனிற்கீர்த்தனையாகநவில்வதற்கு ... ... ✱
வழுவிலாச்சொற்பொருடந்தளிக்குநீல ... ✱
கண்டன்முதற்றேவர்குறைநீக்கிக்காக்கும்... ... ✱
கயமுகனம்புயமலர்த்தாள்கருதல்செய்வாம்.........(க)

தரு-இராகம்-ஆரபி-ரூபகதாளம்!

பல்லவி.

மூஷிகவாகனகஜ முகனே- வரமேதருகுவாய்✱
மோநகருணாநந்தநாயகனே... ... ... ✱

அநுபல்லவி.

தேசம்புகழன்...... ...பதத்தை யடுத்துச்

ராஜர்கச்சியர்... ... ... சரிதை யெடுத்து
நாடகம்பாடக்... ... ... கிருபை கொடுத்து
நலமாகிய-சொலினுயர் ... ... *
நலமீதியல்-புலவோர்புகழ் ... ...*
நிலையாகிய-நலமாஞ்சுபம் ... ... ✡
இலகேதமில்-புலமீய்ந்தருள் ... ... (மூஷிக)

[சரணங்கள்.]

௧, அங்குசபாசங்.....கரத்தி ... ...லெடுத்தவா - இடப்பாகம்வல்ல
அமர்ந்திடத்தொந்தி வயிற்றைறயடுத்தவா [பை
திங்களைமுடியி ... லெடுத்து... முடித்தவா -கணநாதனெனவே
தேவேந்திரனுக்...கிடுக்கண் துடைத்தவா
மங்கைபார்வதி ... யீன்ற ..பாலா
மாயன்மருக ... ஞண... சீலா
இங்கிதவறு சுவையின்... லோலா
எளியர்க்கருள்த ... ... யாறு... கூலா
இகமெங்கணும்-புகழன்பர்கள் ... ... *
அகமெங்கணு-மகிழும்படி ... ... *
மிகுமங்கல-தகவொன்றிய ... ...*
சுகவின்புசெய்-பகவன்தரும் ... (மூஷிக)

௨, மாங்கனிக்கன்று-தந்தையைவலம்...வந்தோய் - ஒருகோடொடித்
மறைமுநியருள்-ஆரணம் ... வரைந்தோய் [தியல்
தீங்குசெய்கஜ-முகனைவென்று.......கந்தோய் - சரவணபவனுக்கா
நினைப்புனத்திப-மெனவந்தருள் தந்தோய் [ய்
பாங்கொடகுகின்-பெருமை... ...நாட்டினை
பார்ப்பினிப்பிள்ளை-நோயை... வீட்டினை
ஓங்கடியர்கள்-துயரை... ... ... யோட்டினை
ஔவைக்குச்சிவ-லோகத்தைக்காட்டினை
ஒளிருங்கவின்-வளருங்கன ... ...*
அளிகொண்டென-துளநின்றுசொல்... ... *
வளமென்பன-அளவின்றியே ... ... *
வளரும்படி-வெளிவந்தருள் ... ...(மூஷிக)

௩, அடியன்கவியிற்-றவறு........ ... வாராமல்-வாக்கதிலுங்குடிகொ
டன்பொடெவ்விதத்-தீங்குஞ் சேராமல் [ண்
கொடியவிகட- ....கவிகள்... தாராமல்- ஐந்திலக்கணத்துறை
குற்றமென்பது-... சற்று... நேராமல்
மையினோர்க்கிகை- -வாமக... மாக்கிப்

வடிசெய் துணையின்··· ···களங்கம் போக்கி
வாசிப்பவர்கட் ... ... கறிவைத் தேக்கி
மநநன் றுறு-தனமும்புகழ் ... ...*
கனமும்அதன்-இனமுங்கொடு ... ... *
தனதன்பனென்-நினைவின்படி ... ... *
நனிநன்றியல்-கனமின்றருள் ... ...(மூஷிக) (சு)

பார்வதிதுதி.

(விருத்தம்.)

சீர்மேவுங்காஞ்சிநகர்க்கரசுமேவிச் ... ... *
செல்வநலம்புகழ்பெருமைசிறந்தவெற்றித் ... *
தார்மேவுதேசாதிபதியார்திவ்ய ... ... *
சரிதமதைநாடகமாந்தமிழிற்கூறக் ... *
கார்மேவுங்குழலிவிசாலாக்ஷிமாக்ஷிக் ... ...*
கமலாக்ஷிமீனாக்ஷிக்கருணையாக்ஷி ... ... *
பேர்மேவுகாமாக்ஷிதனையெந்நாளும் ... ...*
பேணுவேனவள்பதத்தைப்பூணுவேனே ... ... (உ)

தரு-இராகம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

கருணாம்பிகையே - கடாக்ஷஞ்செய்தாயே... ...*

அநுபல்லவி.

ஒருபூரண மான - பொருளாகியமோன.......*
கருணாநந்தரான - குருவுக்கின்பமான ... ... (கருணா)

[சரணங்கள்.]

க, பிரிதிவீஸ் ... வரனார்-தருவம்ஸ ... ... ராஜனார்
இருபத்துநான்மனையார்-வருதேசாதி ... ...பதியார்
சரிதைநாடக.........மாக-உரைசெய்யவாக் குண்டாக
பெரியோர்மகிழ்ந்தின்பாகக்-கிருபைசெய்குவா யோக
சத்திய... மானவ-ரத்தையுந்தருவாய்
நித்தியமென்னித-யத்தினில் வருவாய் ... (கருணா)

உ, வித்தைக்கு......வாணி-யுத்திக்குக்...காணி
புத்திக்குத் ...தோணி-நித்யகல் ... யாணி
சுத்தன்கவிராஜ ...ராஜன்-சித்தன்அபிராமி...... நேசன்
பத்தியானகாளி...தாசன்-புத்தியில்நீதின்று... ...வாசம்
பண்ணியதே...போல்-உன்னிறைவாய் ... ...தில்

௩, உனதரு...ளறியேன்-மநதினித்.........குறியேன்
வினையமில்சிறியேன்-எனமருள்.......வெறியேன்
தினதுசெயல்மதித்த-முநிவன்மகத்... ...துதித்த
அநகருணைத் துதித்த-இனிமையால்நீ ... விதித்த
அருளினிலாகிய... ... ... சரிதையைப்புகல
வெருவியேதீவினை...... ... ...கருகியேயகல (கரு) (௨)

அவையடக்கம்.

விருத்தம்.

மேகமுன்னைந்தருமுன்னும்வேங்கைமுன்னும்... *
மிருபனியெட்டியுநரியுமெதிர்த்தாற்போலும் ...*
பூகர்முன்னூமன்கவிதைபுகறல்போலும் ... ... *
ஒருகுருடனோவியஞ்சித்திரித்தாற்போலும்... ...*
ஆகமமங்கங்கலைக்கியானர்கள்முன்யாறும் ... ... ✡
அறியேன்கூறுதலடைவின்றெனிற்பொன்வெற்பாற்*
காகநிறம்போமதுபோல்மிகவுங்கற்றோர் ... *
காணுவீர்மழலைமொழிப்பேணுவீரோ ... ... (௩)

தரு-இராகம்-சாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

கற்றறிவுற்றமைவுற்.........றிருப்பீரோ - என்சொற் *
குற்றமிருக்கிற்கொண்டுபொறுப்பீரோ

அநுபல்லவி.

பெற்றவட்கன்றோபிள்ளை-பெற்றவருத்தந்தோன்றும் *
மற்றவள்அவ்வருத்தஞ்- சற்றுமறியாளெஞ்ஞான்றும் ✡
பெற்றவள்குமரனை-முத்தமிடக்கண்டு ... ...*
மற்றவள்கல்லால்வ-யிற்றறைகிற்பபோல் ... ... ✡
எற்றியேவிகடர்ம-யக்கிலவர்க்கறி ... ... *
வுற்றிடதீர்தெளி-வித்திடல்கடமை ... ... (கற்றறிவு)

[சரணங்கள்.]

௧; வேதாகமபுராணங் ... ... கற்றீரோ - அதில்
ஓதும்அந்தரங்கத்தைப் ... ...பெற்றீரோ
நீதிமார்க்கங்கள்யாவும் ... ... உற்றீரோ - சொல்அ
நீதங்களென்பவெல்லாம் ... ... அற்றீரோ
நதெல்லாமொன்றுமறி ... ... யாதசின்னஞ்சிறியேன்
இதுஅதுமுன்பின்னென்ப... தெதுவும்பகுத்தறியேன்
காதலாய்ப்பேச்சாலுற்ற ... ... கால்தலையுங்குறியேன்

கரகஞ்செயாதவன் - பெருங்குடஞ்செயல்போலும்
தருமன்னக்கொடிஏழை-நிரையாக்கட்டுதல்போலும்
கரைதெரியான்கப்பல்... ... வரவிடுவதுபோலும்
பெரியோர்முன்னுரைசெய்தேன்-பரிவுறவீர்மென்மேலும் (கற்)

௨, இலக்கணப்புணர்ப்புகள்...... தெரியேனே - சொல்லின்
விலக்குகளிஃதென்று.............பிரியேனே
இலக்கியங்கற்றதுபோல்........உரையேனே - பொருள்
துலக்கிவைத்திடத்திடம்... ... ...புரியேனே
நலக்யானவித்வாம்ஸர்நீர்... ....நற்றமராகையாலும்
நாட்டும்ஆற்றுநீர்வாரி... கூட்டிக்கொள்ளுதல்போலும்
விலக்காதொருவனறி ...... வினினுட்பங்காண்பீர்மேலும்
விமலேஸ்வரியாற்கதை..............மிகவுமுடிதலாலும்
இங்ஙும்அறையிலாடி... ...எங்கும்அம்பலமாடல்
இங்கிதமெனிலந்தச் ... ... சங்கதிபோலவே
தங்கள்சிசுமொழிக்கு ... ...எங்களிவீரொனில்
இங்கிதுகேட்டும ... . நங்களிகூரவே (கற்ற)

௩, தங்கள்போல்நாற்கவிதை ... ... பாடாமல் - கவி
அங்காலங்காரங்களை ... ... நாடாமல்
அங்கசாஸ்த்ரங்கற்றோரைக் ... ... கூடாமல் - அவர்
தங்களாலின்னும்வித்தை ... ... தேடாமல்
அங்குங்கென்றுளரத்தெ ... ... ரிந்தடக்கமில்லாமல்
யாவுங்கற்றுத்திருப்தி .. ..மேவும்அதில்நில்லாமல்
பங்காய்ப்பால்சோறென்றுகு-ழந்தைநன்றச்சொல்லாமல்
பாச்சிச்சோச்சியென்னும்படிசொன்னேன் ஈதல்லாமல்
பார்வதியடியவர்க் ... ... கோர்பதிதனதியல்
சீர்தனைப்புகழவே ... . நேரிசைநூலினில்
தார்புனைகச்சியார் ... ... சீர்தனைநாடகப்
பேர்தனிலுரைசெய்தேன்... நீர்தயைபுருகுவீர் (கற்றறிவு)

அவையடக்க முகத்தால்

நூல்வரலாறுகூறுதல்.

விருத்தம்.

வடமொழிதென்மொழிகளிலுந்திருமுகசாதனத்தும் *
* வருணகின்னத்துங்கர்னவாக்கியத்துமோர்ந்து...*
தடவலிசேர்கச்சியர்நாடகம்பகர்ந்தேனருளு ... *
சலக்கவியிராமநாடகஞ்சொலல்போலுமைபேர்...*
தொடர்தரலாற்பானென்மலரமுதினினீர்பதருந்......*
தூய்மையினூர்மட்கலசமுட்கொளுவீரொன்னுந் ...*

பாயிரம்.

திடமதிலென்குருவருளானுமகள்கூறியதைத் ... ...☆
தேற்றுவீரன்புடனேபோற்றுவீரோ ... ... (ச)

தரு - இராகம் - தன்னியாசி - ஆதிதாளம்.

பல்லவி.

இந்தநூலின்காரணந்தனைச்சொல்வேன் ...... ஜ
சிந்தைமகிழ்ந்துகேளீர் ✻ யாரும்... ... ☆

அநுபல்லவி.

சுந்தரிதந்திடு ... ... முந்தருள்போலும்
துரைகருணைநந்த ... ...குருவருளாலும்
முந்துவித்தியாகுரு ... ... தந்தவாக்காலும்
மூதறிவோருமா ... ... தாரவாலும்- (இந்தநூ)

[சரணங்கள்.]

௧, ஆதிபிரம்மாண்டமாம்-எதில்புராணத்தில் ... ✻
ஓதியபடி...... ... ... நாட்டி ... ...பின்னும்
ஆந்திரபாஷையில்-போந்தபிரிதிவீசன் ... ✻
வாய்ந்தசரிதை......கூட்டி ... ... ✻
மூதுளகச்சிப்பள்ளைச்-சோதித்ததனிற்சொன்ன ... ஜ
நீதியதனைப்...... ......பூட்டி ... ... -ஆதி
மூலர்க்கிடமமரும்-நீலகாமாக்ஷிப்புராண ... ✻
சீலமதைப்பா... ...ராட்டி... ... ...✻
தீதில்குறவஞ்சிநூல்-ஓதுவ........ ......கண்டு ...ஜ
சிறுபிரபந் தங்கள்-அறைவதுங்......கொண்டு... ✻
சாதுகாமாக்ஷியனு... பூதிப்பா......லுண்டு ...☆
தண்மையானபிகு-வண்மையாய் ...விண்டு ...(இந்தநூ)

௨, இட்டமாயுமையின்-சிட்டர்ஜாதிநெறிப் ... ✻
பட்டையத்தை .. ...யோர்ந்து ... ... -வேறு
ஈடில்காமக்கோட்டி-பீடமதனிலுறா .. ஜ
யாடுவதனைத்.........தேர்ந்து ... ...✻
செட்டிமைக்குரிய-வட்டக்கரண்டிமணிச் ... ஜ
சட்டத்திற்சொல்லத் ...கூர்ந்து ... -பார்த்து
திருமுகத்துங்கர்ன-வுரைதெரிந்துமிகு ... ✻
திரையதிந்து.........நேர்ந்து ... ✻
திட்டமானகவிக்-கட்டுகள்......... ......பார்த்து... ஜ
சேர்த்தல்சேர்த்துச்சேர்க்-காததை... ......நீத்து ...ஜ
மட்டிட்டநுபவங்கண்-டொட்டுடன்...சேர்த்து... ☆
மநதுமகிழக்கேர்த்-தனைகளாய்ப்... ....பூத்து......(இந்)

௩, வருண நூல்புராணமுமாசெயாதிவ்வகை ...
உமைசெய்..............ததனைக்...கேட்டால் ... -கேளும்
வகுத்திவ்வமிசர்பொருள்-பகுத்தெளிதிலறியத்.......*
தொகுத்துக்கீர்த்தனைப்.........பாட்டால் ... *
அரமெனுமொழுக்கம்அந்தக்-கரணநீதிநெறி ... *
கிரணமாகத்......... ....தேட்டால் ...-கண்டு
யாவரும்புகழு.மேவரும்புகழை... ... *
யேவிரும்பும்..................கூட்டால் ...*
கருணைநாயகியின்-சரணங்கள்... ... ...பணிந்தே......*
கல்விதேர்ந்துமிகுசெல்வமு ... ...மணைந்தே......*
தருணந்தேர்ந்துவாழ்க-பரிவுட ... னிணைந்தே ...*
சாற்றினேனுமையைப்போற்றிடத் துணிந்தே(இந்த) (ச)

தோடையம்.

(விருத்தம்.)

பன்னகனும்புகலரியசதுர்மறையின்முடிவமரும்......*
பரமன்பாகத்... ... ... *
துன்னுபரகௌரிமனோன்மணிவரப்பிரசாதமுடன் ...*
தும்பைசூடி ... ... *
யென்னவிளங்குங்கலைக்கோட்டதிதியருள்பெறுந்தேசா
திபதியார்க்கு ... ... *
நன்னலஞ்சேர்சுபகரமாஞ்ஜெயஞ்சொல்வேனிலங்குந்தோ
டயஞ்சொல்வேனே ... ... (ரு)

தரு-இராகம்-நாட்டை-ஜம்பைதாளம்.

க, திருமகள்கிருபைநிறைந்த போகர் ... *
திறமுறுவனுமைமிகும்வி...வேகர் ... ...*
இருபத்துநான்மனையார்சரிதை ... ...*
இனைநாடகஞ்சொல்லவே ... ...-ஆ-ஆ

கரிமுகன்முருகனிவ்விருவரையும் ... *
கருணையுடனருளியிலங்குசோதி ... ...*
உருவெனவந்தகாமாக்ஷித்தாய்தன் ... ...*
உபயபதம்பணிவேன் ... ... (ஜெயஜெயா)

உ, மகிமைசேர்முநிகலைக்கோட்டர்செய்த ... *
மகமதில்வந்தகுபேரரான ... ...*
ஜெகமதுமெச்சியதீரர்காதை... ... ...*
செந்தமிழாற்கூறவே ... ...-ஆ-ஆ

விகசிதமனமலர்கனிலேவாமம் ... ...*

அகமகிழ்வெண்பணிவெண்டுகில்கொள் ... *
அன்னைபதந்துணையே ... ... (ஜெயஜெயா)

௩, வரமுமையருளவேபாலர்கூடி ... ... *
வாணிகமதைச்செயும்வகையைநாடி ... *
வரைமன்னன்றனைக்கொன்றுவாகைசூடும் ... *
மன்னர்கதைசொலவே ... ... -ஆ-ஆ

திருமிகுகல்வியெனுநற்சீர்சேர் ... ... *
திரவியமெந்தனுக்குதவிசெய்த ... ...*
குருவெனுநாதனென்மேற்கிருபை ... *
கூர்ந்திரக்ஷித்திடவே ... ...(ஜெயஜெயா)

௪, பாண்டிநன்னாட்டினிலிருந்துசிலர் ... *
பயந்துவந்தோர்களுக்கபயநல்கி ... ... *
ஆண்டவளருளினால்கோத்ரம்பெற்ற .. ... *
ஐதிகஞ்சொலவே ... ...ஆ-ஆ

ஆண்டவட்கிடப்பாகமதனைத்தந்து ... *
அடியருக்கருள்செய்யும்படியுகந்து ... ... ✡
தாண்டவம்புரியும்ஏகாம்பரேசர் ... ... *
சரணிணைகள்துணையே ... ...(ஜெயஜெயா)

௫, சோழன்மணஞ்செயவென்றொருபெண் ... *
சொந்தமதாக்கொடுமென்றபோது ... ... ✡
தாழ்வையிலாதபொற்பாவையீந்த... ... ... ✡
சரித்திரமதைச்சொலவே ... ... ஆ-ஆ

ஆழியதிற்றுயிலாதிமூல ... ... *
மாகியவாவெனையாளுமென்ன ... ... *
வேழமழைத்திடவந்துகாத்த ... ... *
விமலன்பதந்துணையே ... ... (ஜெயஜெயா)

௬, குஞ்சலனென்றுமொர்மன்னன்செய்த ... *
வஞ்சனைகண்டுடனேயன்றோன் ... *
அஞ்சிடவமர்செய்துவென்றவீர ... ... ✡
சூரர்கதைகூறவே... ... ... ஆ-ஆ

கஞ்சமலரதனில்மேவிநாளும்... ... ...*
கனநிதிச்செல்வமென்மேலுத்தரும் ... *
ரஞ்சிதமிகுஞ்சியலட்சுமிதன் ... . *

மங்களம்.

திரு - இராகம் - பந்துவராளி - அடதாளசாப்பு.

பல்லவி.

மங்களம் - மங்களம் - நித்தியசுப - மங்களம்-மங்களம்.

அநுபல்லவி.

மங்கைசத்திகௌரி...... ...வாலைமீனாக்ஷிக்கும்
அங்காளம்மன்பட்டா... ...லம்மன்காமாக்ஷிக்கும்-(மங்களம்)

[சரணங்கள்.]

௧, மூவர்க்குந்-தேவர்க்கும்-முநிவர்க்கும்-ரிஷிவர்க்கம் [ம்(மங்களம்)
யாவர்க்கும் - பெரியோர்க்கும் - அறிவோர்க்கும்-அருளோர்க்கு

௨, வெள்ளைமலர வட்கும் - விளங்கும்லட்சுமிகட்கும்
வள்ளிதெய் வானைக்கும்... ...மயில்வாகனனுக்கும் - (மங்களம்)

௩, பிரிதிவீஸ்வரனுக் கும்... ...பெரியகலைமுநிக்கும்
இருபத்துநால்வர்க்கும் ......ஈஸ்வரிகிருபைக்கும் - (மங்களம்)

௪, அறுபத்துமூவர்க் கும்.........அரனடியாருக்கும்
மறுவற்றகுணி கட்கும்-மனோன்மணியடியர்க்கும் - (மங்களம்)

வேறுசந்தம் - ஆதிதாளம்.

௫, துங்கநவக்கிரக..............ஸ்வாமிகளெவருக்கும்
நங்குருவாங்கருணை... ....நந்ததேசிகருக்கும் - (மங்களம்)

௬, அறிவு மநம் வாக்குக்கும்- ஆறுதாரக்கர்த்தர்க்கும்
பொறியறியுஞ்சாக்ஷிக்கும் பூரணபிரம்மத்துக்கும் - (மங்களம்)

எ, வாக்கியோபநிடத........ ....மாக்கியபாக்கியர்க்கும்
நீக்கமாய்மாயையைநீக்கும் நிறைமெய்ஞ்ஞாநிகளுக்கும்-(மங்க)

அ, பிரணவமுதலான... ... பீஜாக்ஷரங்களுக்கும்
வரமாய்ப்படிப்போர்கேட்போர்-மகிழ்ந்திதுசொன்னோருக்கும்
[மங்களம்) (சா)

நாரதர்-இந்திரனுக்குப்பிரிதிவீஸ்வரன் மகான்மியங்-கூறல்.

விருத்தம்.

இலகுமணிப்பொன்னுலகத்திறைவனோர்நாள்...... ✲
இந்திரர்ம்ப்பதின்மூவரியல்சேர்பந்தம் ... ✲
விலகுமதிவிருடிமுநிவரர்கள்சூழ ... ✲
வீற்றிருப்போனிருடிகளைப்பார்த்தரக்கர் ... ✲
கலகமின்றேவெனப்பிரிதிவீசனந்த ... ✲
காசுரனைமடித்திடுக்கண்களைந்தானென்ன ... ✲
வுலகுபுகழவன்சரிதைகூறென்றோத ... ✲
வுணாக்கின்றான்நாரதனுநிணாக்கின்றனே ... (சா)

தரு-இராகம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

இந்த்ரதேவனெகேளும் - யான்புகல்வதை
இந்த்ரதேவனெகேளும் ... ...✲

அநுபல்லவி.

சுந்தர... .... நாகரீகா - இந்த்ராணியின்சுபோகா
வித்தைசேர்ந்திடும்போகா-புத்திநிறை......விவேகா(இந்த்ர)

[சரணங்கள்.]

க, முன்னிது.........அறியாயோ - என்றாலுமதின்
பின்னேனும்.......குறியாயோ
உன்னிபே... ... தெரியாயோ - கிஞ்சித்துச்சொன்னால்
பன்னியே..........விரியாயோ

உன்னையன்றியே........வேறு
என்னுண்டெங் கட்குப்பேறு
இன்னதையுற்றுத் ......தேறு
மன்னவனேநீ............கூறு
இவ்வுலகத்திலும் ... ...அவ்வுலகத்திலும்
எவ்வுலகத்திலும் ... ...செவ்விதினுற்றிடு
நவ்வியசரிதைகள் ... ...திவ்வியமாகவே
ஒவ்வியெகேட்டுளில்-செய்வைசெப்வோனே - (இந்த்ர)

௨. பரமமாகிய..... ... ...வீசன் - ஓரவதார
உருவானபிரிதி ....வேசன்
பிரமன்றெழும்பிர ... காசன் - அரியினுடன்
அரனும்புகழு.........நேசன்
வரமதுமிகுஞ்... ... ...சீலன்
இருடிகட்கநு...... ......கூலன்
தருமநெறிகொள் ... ளோலன்
விரவசுரர்கள்... ... ... காலன்
சத்திய நித்திய - மெத்தந..........டத்திய
வித்தக னித்தனை - எத்தினை... ...யத்திலும்
நித்தநி னைத்துமி - சத்துநி........யுத்தமன்
சித்தமெ சுத்தியாம் - யுத்திதேர் கர்த்தனும் - (இந்த்ர)

௩. ஆரணன்மகம்பிறந்...தோன் - நிறைந்தபரி
பூரணனெனச்சிறந் ...தோன்
காரணம்யாவுமறிந் ... தோன் - மிகுந்தநல்லு
தாரணமதுநிறைந் ... தோன்
சீரணத்தினுத்...... ... தாரன்
தாரணேயோகாங்க,... ... தீரன்
மாரணக்கள...,... ...வீரன்
பேரணிப்படைச்... ... சூரன்
மற்றவ னுற்றிடு - பெற்றியை...யிற்றெண
எற்றுனா கிற்பது - வெற்றியை-.. யுற்றவா
முற்றவன் பெற்றுள - நற்சரி... தத்தினில்
சற்றறி கிற்பதை - வற்புறச்...செப்புவேன் - (இந்த்ர)(எ)

நாரதன் - தேவேந்திரன்வினவுக்குத்தரங் கூறுதல்.

விருத்தம்.

பேர்பெறுநாரதமுநியேபிரிதிவீசன் ... *
பிறப்புமவன்சிறப்புமிகப்பெருமைபெற்ற ... *
சீர்பெறுமன்னோன்றருசந்ததியின்பேறும்... ...*
தெரியவகைவிவரமுடனறைகுவாயென் ..... *
றேர்பெறுவானவரிறைவன்கேட்கயாழி ... *
னேழிசையுமறைமுடிவுமியற்கையாகத் ... *
தேர்தல்பெறுமுயர்முநிவன்கருணையோடுஞ் ... *
செப்புவான்றனதுமதமொப்புவானே ... (௭)

பாயிரமுற்றிற்று.

விருத்தங்கள் - ௭ - வெண்பா - ௧ - ஆக - ௮
திருக்கள் - ௬ - தோடையம் - ௧ - ஆக - ௭

ஆண்டவர் துணை.

முதலாவது-

உற்பத்திகாண்டம்.

பிரமதேவன்கொலுவிருத்தல்-கூறல்.

விருத்தம்.

சகலவுலகமும்பல்லாயிரங்கோடியண்டமெலாஞ் ... *
சமைத்தவற்றுள் ... ...*
மிகவளருமசராசரவுயிர்வருக்குமுதலவனும் ... *
வேதாவோர்தாள் ... ... *
தகவுறுவெண்மனாமலர்வாழ்சரஸ்வதியோடரவிந்தா *
தநத்தின்மீதிற் ... ... *
புகலுமநமகிழ்வொடெழுந்தருளினன்சதுர்வேதப் *
பொருளினனே ... ...(க)

தரு-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

சகத்காரணனும்பிரம்ம - கர்த்தர்தேவர்களுடன் *
சத்தியலோகத்திலிருந்தானே ... ... *

அநுபல்லவி.

மகத்வகடவுளானோர்... மிகுத்தநீதிமூன்... னாலே ...*
வகுத்தபடிக்குச்சிருட்டி-பகுத்துச்செய்வதனாலே ...*
மற்றொரு-கர்த்தர்-சிருட்டிவி-தத்தைந ... *
டத்தி-னடக்கி-விடுக்கு-மகத்துவ ... (சகத்கா)

[சரணங்கள்.]

க, இந்த்ரன் அக்கினி எமன் - நிருதிவருணன்வாயு......................*
ஈசானன்குபேரன்இவர்..................புடைகூட
சந்த்ரசூரியர்தாரா - கணங்கள்விஸ்வதேவர்கள்
சதுர்த்தசமருக்களோர்.............புறநாட
கந்தர்வர்கின்னரர்கிம்-புருடர்வித்தியாதர
கணங்களோர்புறஞ்சங்கீ..............தம்பாட
சுந்தராம்பையூர்வசி-மேனகைதிலோத்தமை
சுரசாயித்தியங்கள்பாடி.............நடமாட
முந்தியகாசிபர்கோசிகர்சாம்பவர்.........-பரத்துவாசரும்
முற்றுவசிட்டர்சனற்குமரர்சம........-தக்நிவியாசரும்
விந்தையகத்தியனத்திரிகௌதமன்.........- தூருவாசரும்
மிக்குமனத்தையடக்குமகத்வமெய்ஞ்... ஞானவாசரும்
மேகப்ர.........வாகமும் - சாகரமேழாடு
நாகமும்...... வேகமாம் - நாகமாம்யானைகள்
சேகரமாகசி........நேக மதாயுற
மோகம தேகிய - பூகவி......வேகனும் - (சகத்கா)

உ, மலர்ந்தபுஷ்பங்கள் கொண்டு - வருஷிதாரைபெய்து..........*
மான்மியப்புகழ்சிலர்...................தெரித்திட
நலந்தருதவப்பிரம்மா- திகள்நயந்திகழவே
நான்மறைவாழ்த்துகளை..............உரைத்திட
உலர்ந்தவுயிர்பிழைக்கத்- தருத்தஎழிசைதன்னை
உயர்ந்ததும்புருநாரதர்...............விரித்திட
கலந்தகத்தங்கஸ்தூரி- புழுகுகதம்பவாடை
கையாலின்றத்தோவியம்.............நிரைத்திட
சலந்தரமலைகுகையடவியிற்றவஞ்செயுந்- தவவிவேகரும்
தக்கவிசித்திரசித்துகள்கைவசத்........-தானயோகரும்
தலமதிலறஞ்செய்துசுவர்க்கமதேறிய ... -தர்மபோகரும்
தரையினிலுயர்வுளஎழுநதிமார்களுஞ்-சார்ந்த நாகரும்
சத்திய ....லோக மதிற்பிரமற்கிய
ஆற்றசபைக் குளெ - சற்றிடமின்றியே
உத்தம ... தேவர்கள் - பத்தியொடேயயல்
சுற்றிலு......மிப்படி - நித்தமிறைஞ்சிட - (சகத்கா)

௩, தேவதுந்துமிபேரி - முரசுகாகளமோசை...........................*
திக்குகளெங்கும்பர..............வியேழுச

தேவப்பெண்களாலாத்தி-யேந்தியேயெதிர்நின்று
சிங்காரஞ்சொல்லிச்சந் ....தனம்பூச
சேவைசெய்திருபுறத் - தினிலுங்கணிகையர்கள்
ஜெயஜெயவென்றுவென்சா ... மராவீச
தாவியோடிமுன்னின்று-அன்னவாகனம்என்மேற்
றுனேறிக்கொள்ளுமென்று... துதிபேச
தேவரிலவரவர்-காரியமுறைசெய்து.........சேவிப்போர்களும்*
தீவினைசெய்யசு-ராதிகள்துன்பது...... தீரென்போர்களும்*
பாவமெலாம்விடஉன்னருள்விழிகொடு...பாரென்போர்களும்*
பாக்கியமும்மருள்-நோக்கங்கிடைத்திடில்-ஆமென்போர்களு [ம்
பற்பல அற்புத - மொத்துரை செப்புவ
ருக்கருள் வைக்குதும்-இக்கண மென்னவே
தற்பர மொத்துள... சுத்தவி லக்கண
முத்திப டைத்தவ - னித்தகை மைத்துடன் .. (சகத்கா)(க)

பிரமதேவனிடத்து-தேவருமுநிவரு முறையிடுதல்.

விருத்தம்.

தேவர்முநிவரரந்தகாசுரன்றன் ... ... *
செயலினூற்றங்கருமம்யாவும்விட்டே ... *
ஓவில்துயருற்றெழீஇச்சதுர்முகன்றன் ... ... *
னுயர்கொலுமுன்னின்றெம்மைப்புரக்குந்தேவே *
தாவில்போரந்தகாசுரன்றன்னூற் ... ...*
றளர்ந்தொளிக்குமெங்கள்குறைமுற்றுநீங்க ... *
மேவவுணன்றனைமுருக்கியெமைக்காவென்றே ...*
வேண்டினாயனைமிகத்தாண்டினாரோ ... (உ)

தரு- இராகம்-பரசு-அடதாள-சாப்பு.

பல்லவி:

என்னசெய்வோம்- என்னசெய்வோம் ... *
அன்னவாகனமன்னனே ... ... *

அநுபல்லவி:

அன்னையேநிக - ருன்னையேயன்றி ... ... *
பின்னையார்கதி - இந்நிலத்தினில் ... ... (என்ன)

[சரணங்கள்.]

௧, அந்தகாசுர-அந்தகனால் ... ... *
நொந்துவாடி-வந்தோங் கண்டாய் ... ... *
ஐயனேமிகு- துய்யனே எட்டுக் ... ... *
கையனேகிருபை- செய்தெமையாள் ... ... (என்ன)

௨, துர்ச்சனனை-இச்சகத்தில் ... ... *
மெச்சிப்படைத்து-வைச்சதேன் ... ... *
துட்டன்கையில்யாம்-பட்ட துன்பம்வாய் ... ... *
விட்டுரைக்கப்பத்- கிட்டிக்கொள்ளுதே ... (என்ன)

௩, தவத்தைமாய்த்தே-அவத்தில்வீழ்த்தே ... ... *
பவத்துன்பத்தையே-துவக்கமாய்த் ... ... *
தருகிறான்சதித்து-வருகிறான்கொலை ... ... *
புரிகிறான்அதை-யுரைசெயப்போமோ ... (என்ன)

௪; சூரன்லங்கையாள்-வீரன்இரணிய ... ... *
சூரனும்கொஞ்ச-நேருண்டு ... ...*
துன்னுறான்உயிர்களைப்-பன்னுறான்வாரித் ... ... *
தின்னுறான்வெகு-அன்னியாயம்ஐயோ ... ... (என்ன)

௫, சந்திசெபம்-மந்திரங்கள் ... ... *
சிந்தைசெய்போதில்-வந்தேகொல்லத் ... ...*
தலைப்பட்டான்பாவ-நிலைப்பட்டான்குலை ... *
குலைத்திட்டான்மிகவு-மலைத்திட்டான்பாவி ... (என்ன)

௬; அவ்வளவோ-இவ்வளவோ ... ... *
எவ்வளவென்று-ஒவ்விச்சொல்வோம் ... ... *
ஆண்டவாஉன்னை-வேண்டினேமவனைக் ... ... *
கீண்டெறிந்தெமை-யாண்டிடாயபயம் ... ... (என்ன)

௭, அருதியடித்துப்-பருதிக்கேந்து ... ... *
தருக்கிளியைவெ-ருகுக்கேந்தாப்போல ... ... *
ஆக்கினைப்பகையுண்-டாக்கினையிம்சைக் ... ...*
காக்கினாய்இதை-நீக்கியருள்செய்வாய் ... ... (என்ன)

௮, உலகைவிட்டு-விலகியெந்தத் ... ...*
தலமிருப்பது நிலையதாய் ... ... *
உலைந்தோமிகக்-குலைந்தோம்குலைந் ... ... *
தலைந்தோம்இனி-நலந்தந்தாளுவாய் ... ...(என்ன)(உ)

மஹாபுருஷனுற்பத்தியாதல்.

விருத்தம்.

தருமனெனுஞ்சுவாயம்புமநுக்காலத்தில் ... *
சகத்திலந்தகாசுரனுற்றுன்பமுற்ற ... ...*
இருடிகள்வானவரயன்பாலபயக்கூற ... *
வீஸ்வரன்பாலயன்முதலோர்சென்றியம்பப் ... *
பிரமநீசங்கையின்மகமொன்றியற்றில்யாமும் ...*
பிரதிவிம்பிப்போமென்னவயனவ்வாறே ... *
திரமுடனேர்மகம்புரியவரனவற்றிற் ... *
சிறந்திட்டாளெருமநுவாய்ப்பிறந்திட்டானே...(௬)

தரு-இராகம்-தன்னியாசி-தாளம்-ரூபகம்:

பல்லவி:

பிரமன்யாகத்தில்-ஒருமஹாத்துவன்-பிறந்துவந்தானே*

அநுபல்லவி.

கருமஞ்செய்கின்ற பாவிகளைக்கொன்று... ... *
தருமத்தைநிலை ... நாட்ட - மிகுங்
கருவத்தோர்களை ... ... வாட்ட - அசுரர்
நிரையைக்களைந்து ... ... மாட்ட
பெருமை - காட்ட
கூட்ட - (பிரமன்)

[சரணங்கள்.]

௧, அசுரர்குலத்துக் கேமனுகவே ... ... *
விஸ்வசொரூபத்தைக்... கொண்டு - தனது
புஜபலம்யாவையும் ... விண்டு - சர்வ
விஷயங்களையுங் ... ...கண்டு
ஆகுதி - யுண்டு
பண்டு - (பிரமன்)

௨, அந்தகாசுரனைக் கொன்று - தேவர்கட்குச் ...*
சந்தோஷமெத்தவுண்... ... டாக்க - ரிஷிகள்

நைந்திடுந்துன்பத்தை ... ... நீக்க - உலகைச்
சொந்தமென்றேயாது... ... காக்கத்
துயர் - போக்கத்
தேக்க - (பிரமன்)

௩, உருண்டகன்கரும்-விரிந்தமார்பமுந் ... ... *
திரண்டதோள்கொள்ளு ... தாரன் - பகை
வெருண்டோடச்செயுஞ் ... சூரன் - மிகு
முரண்டையடக்குந் ... ... தீரன்
ஜெய - வீரன்
கூரன் - (பிரமன்)

௪, மகுடகேயூரமாரங்கிண்கிணி ... ... *
தகதகென்றொளி ... ... வீச - சூரியன்
பகலேதென்றெண்ணிக் ... கூச - தேவர்
அகமகிழ்ந்தின்பம் ... பேச
விசு - வாசு
நேச - (பிரமன்)

௫, உக்ரவுத்தண்டப்ர-சண்டப்பராக்ரமம் ... *
மிக்கவுங்கொண்டுடன் ... குதித்துப் - பர
னுக்குளநித்யத்வ ... மதித்து - அவ
னுக்கானந்தத்துதி ... துதித்து
த்யாநம் - விதித்துப்
பதித்து - (பிரமன்)

௬, தன்னைத்தானறிந்து-எந்நிலத்தோருக்கும் ... *
அன்னையொக்குங்கிருபை... ...காட்டி - தேவர்
சொன்னதுதியைப்... ... ...பாராட்டி - பாவம்
பின்னமாகும்படி... ... ...நாட்டி
அன்பு - கூட்டிப்
பூட்டி - (பிரமன்) (௩)

அந்தகாசூரன்யுத்தம்.

சந்தவிருத்தம்.

வந்தபுருடன்அயன்முனின்றெனையழைத்ததை ... *
வரைந்தருளுகென்றபொழுதே ... ... *

இந்திரர்வயிரவர்கள்சதுரங்கதளமும்படைகள் ... ...*
யாவுமீந்திக்கணநிசென் ... ... *
றந்தகனனும்நிருதன்றைந்துவிழவென்றலகர் ... *
தந்துயரகற்றிடுகென ... ... *
அந்தரநடுங்கவிவன்வந்தவசுரன்றனொ ... *
டடர்ந்தமர்தொடங்கினனரோ ... ... (௪)

தரு-இராகம்-நாதநாமக்கிரிகை- அடதாளசாப்பு.

பல்லவி.

யுத்தத்தைக்கேளும்-மஹாபுருஷன்-யுத்தத்தைக்கேளும்...*

அநுபல்லவி.

யுத்தங்கேளீர்...... ...இரணியனுக்கு... ... *
வெற்றியருஷின்முன்தரணிதனக்கு ... ...*
மெத்தக்கலகஞ்.... ..செய்யவனேயன்று ... *
பற்றிப்பிடித்தவனுயிரைக்...கொன்று ... *
ஜெயங்கொள்வராகவதாரமூர்த்தியைப்போலே - வந்த*
வயவனந்தகாசுரனென்பவன்... ...மேலே...செய்த-(யுத்)

[சரணங்கள்:]

௧, ஆயிரவாயிரதேவ.........கணங்களும் ... ...*
ஆயிரவாயிரபூத........ கணங்களும் ... ...*
ஆயிரவாயிரவசுக்கள் ... கணங்களும் ... ... *
ஆயிரவாயிரவடுக... ... கணங்களும் ... ...*
ஆயிரவாயிரருத்ர........கணங்களும் ... ... *
ஆயிரவாயிரசந்திர... ...கணங்களும் ... ...*
ஆயிரவாயிரமருத்துக்...கணங்களும் ... ... *
ஆயிரவாயிரசூரிய... ... கணங்கொடு ... ...*

மஹாபுருஷின்வந்தான்-வந்ததை- யந்த ... ... *
காசுரனறிந்......தான்-...அதிர்தடனே ... ... *

ஆரடாவென்றுஅதட்டி...... ... ...யருட்டி
பாரொலாநடுநடுங்க...... ... .வெருட்டி
பாரடாவென்றுகண்க.......... ...ஞருட்டி
தீரமாய்ச்சினந்துடனே ... ... மருட்டி
சூரர்வானவரோடப் ... ... புரட்டி
கோருமசுரரைமிகவுந் ... . திரட்டி
கோரமாகத்தன்வலியைத் ... தெருட்டி
... ...பிருட்டி

அந்தகா...சுரன் ... ... வந்தெதிர்த்துக்கொண்
டிந்திரர்வீரன் ... ...றனது மேலே

சண்டகோரங்கள்மிகவும் ... ...நிடக்
கொண்டல்களுமந்தப்புறத்தில் ... ...நாட
எண்டிக்கானைகள்நடுங்கி ... ... வாட
மண்டலங்களுந்திசைகெட் ... ... டாட
அண்டர்யாவரும்பயப்பட் ... டோடக்
கண்டபேரெலாம்வாய்கள் ... ... மூடச்
சண்டைசெய்பவர்பயத்தைக் ... ... கூட
விண்டுவந்ததோர் வழியைத் ... ... தேட

ஆடியாடி........யடித்தான் - திசைதிசையா
யோடியோடி...மடித்தார்ன் - மகத்வன்கண்டு

ஆருதேவரேநில்லும் .... இரிந்து
பாரிலோடிடலாமோ ... ... பரிந்து
நீரொலாமொருபுறத்தி ... ... லிருந்து
வீரமுறுசரமழையைச் ... ...சொரிந்து
சாரும்வெற்றிச்சங்கொலியும் ... ... புரிந்து
சேரும்அந்தகாசுரன்முன் ... விரிந்து
நேரும்அசுரர்மேற்கோபித் ... ... தெரிந்து
பாருமெனச்சொலிப்பகையைத் ... தெரிந்து
வில்லிலம்புகள்பூட்டி ... ...விடுத்ததினாலே - அந்த
வல்லதிருதனைக்கொல்லவென்று ... பின்னாலே-செய்த(யுத்த)

உ, செறுத்துச்செறுத்துக்கணைகள் ... ... விடவே
முறித்துமுறித்தரக்கனும்பின் ... அடவே
நெறித்துமகத்துவனுருத்து ... ... நடவே
திறத்திற்றனுவளைத்தசுரர் ... படவே
எறித்துமகத்துவன்கணைவிட் ... ... டிடவே
நிறைத்தவ்வசுரனுங்கணைகள் ... தொடவே
குறித்துஅந்தகனகுலங்கள் ... கெடவே
அறுத்துக்குவியாக்குவியென் ... ... றடைவே

தளளென்று ... ... ஏவி - விட்டிடவது
பொள்ளென்று ... ... மேவி- அசுரனையெல்
மடித்துத்துல்டந்துண்ட... ... மாகப் [லாம்
படுத்தியங்கங்குருண்டு ... போகத்
துடைத்துக்களத்தைச்சாம்ப ... லாகத்
தெடுத்தங்கசுரர்களெல்லாம் ... வே.

அடித்துப்பின்னுளவசுரர் ... ... சாகத்
திடத்தஅந்தகன்தைரிய ... மேக
உடைத்துவான்புவியொன்ற ... தாக
நடித்துப்பூதங்கட்கிளையுண் ... டாக
மஹாபுருட ... ...வடித்தான் - கண்டசுரோசன்
அகோரப்போர் ... தொடுத்தான் - எவ்வகையென் [ருல்
அநந்தமலைகளைச்சாடி ... யெடுத்து
மநத்திடத்தொடோயாமல் ... விடுத்து
சினந்துசூலத்தைக்கையில் ... பிடித்து
முனைந்துகோபித்துவிரைந்து ... தொடுத்து
கனைந்தகடல்களையெடுத்துக் ... குடித்து
தொனித்தஇடியென இடிக ... வெடித்து
நினைந்துதன்பலங்களையெ ... படித்து
முனிந்தெயசுராருக்குறுதி... ...கொடுத்து

கெர்ச்சித்து ... ... நின்ருன் - இந்திராவுன்னைப்
பக்ஷிப்பே ... ... னென்ருன் - என்றதுகேட்டுச்

சிரித்துக்கொண்டவன்பலத்தைத் ... ...தெரிந்து
பெருத்ததண்டமொன்றெடுத்து ... ...விரைந்து
நிரைத்தமலைகளைப்பொடியா ... ...யரிந்து
இரத்தினக்கற்கள்நகை கள் - மெத்தமெத்தக்கொண் டாடி
இறைவியைப்போற்றிப்பாடி- பொறைமிகுத்தவர்கூடி (வா)

௩, குடதிசையுள்ளசரக்-குடனேகச்சென்றுவாங்கிக்
கொணர்ந்தது நூற்றியைம்பதி ... லக்ஷம்
வடதிசைபொருந்திய-திடமருந்துசரக்குகள்
வாங்கிவந்தது நூற்றைம்பது ... லக்ஷம்
கடமுறுவெள்ளைக்கரி- யிடமிருந்துவந்தது
கணக்குத்தொண்ணூற்றியொன்பது ... லக்ஷம்
உடல்குறுகியமுநித்- தடமிருக்குந்திக்கில்நின்
றேங்கியவறுபத்தொன்பது ... லக்ஷம்
புடவியில்மற்றுமுள்ள- கடற்சரக்கைந்து...லக்ஷம்
பூமிமலைவனஞ்சேர்-மாமூலிநாலு ... லக்ஷம்
திடமுடன்சேகரித்து-நடனரக்ஷகி... ... லக்ஷம்
சித்தம்வைத்திடுமஹா- பத்தருலகங்கள்மெச்சும் (வாணிப)

௪, பட்டிற்றங்கச்சரிகை-யிட்டசேலைகள் திவ்ய
பஞ்சவர்னத்தைம்பத்தை ... யாயிரம்
மட்டுமட்டாகத்தங்கப்-பட்டையிழைத்திருக்கும்
வண்ணச்சேலையெண்பத்தை ... யாயிரம்
திட்டமாச்சித்திரங்கள்-சுட்டிக்கெட்டியாய்நெய்த
சேலைகளிநாற்பத்தை ... யாயிரம்
கட்டுக்கிசையீர்க்கஞ்சு- பட்டுச்சல்லாச்சோமன்
கலைகளிலறுபத்தை ... யாயிரம்
எட்டுந்தேசதேசத்துப்- பட்டைந்து ...நூறாயிரம்
இழையாயிரம்பொன்விலை- களில் நூறு நூறாயிரம்
இட்டமுடனேமூட்டை- கட்டினர்பன்னி ...ராயிரம்
இந்தவகைக்குக்கூடி- வந்தவரோ ... ராயிரம் (வாணிக)

௫, அரிசிநெற்சோளங்கம்பு- வரகுதினைசாமைமுன்
னுகப்பத்தெண்ணாயிரத் ... தைஞ்ஞூறு
காசைமொச்சைக்கடலை-பெருபயறெட்டுவளாகொள்
கணக்கிற்பன்னீராயிரத் ... தைஞ்ஞூறு
வரிசைநெய்யெண்ணெய்தேனும்- வரும் அறுசுவைப்பண்டம்
வாங்கலீரொன்ணாயிரத்... ... தைஞ்ஞூறு
உருசிசீனிகற்கண்டும்- இரதவெல்லமுதலா
யுடன்வாங்கலேழாயிரத் ... தைஞ்ஞூறு
திருகுஞ்சூத்திரவேலைக்- கருவியோரறு வெண்ணூறு
தேசதேசச்சித்ரங்கள்- வாசமாயி ...ரொண்ணூறு
வரவுக்காம்பலசாமான்- தருவித்ததா ...றெண்ணூறு
மனிதருக்குபகார- வணிகமீதென்று.........கூறும் (வாணிக)

சரக்குகளைக்கப்பலேற்றித்தங்கள் வேண்டுதலைச்சொல்லிஉமையைத் துதித்தல்.

விருத்தம்.

இந்தவண்ணம்பலவகையாஞ்சாக்கும்பொன்னும் ... *
இன்னுமுளபலசாமானிறைவுசெய்து ... *
வந்தவிலகோத்திரத்தாராயிரம்பேர் ... *
மகிழ்ந்தகுலதேவதையாங்காமாக்ஷித்தாய் ... *

சுந்தரியாள்பதமலரைத்துதித்துவாழ்த்தித் ... *
துணைவரதுவிடைபெற்றுத்தேசந்தோறும் ...*
வத்துவிற்கப்பொதிகடமைக்கப்பல்சேர்த்து ... *
மகிழ்ந்திட்டாருண்மைகாக்கப்புகழ்ந்திட்டாரே ... (உ)

கப்பல்தரு-இராகம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

பல்லவி.

கிருபைசெய்வாய் ஆண்டவளே - சிவனுடன்
திருநடஞ்செய்...தாண்டவளே

அநுபல்லவி.

திருவளருங்..............காஞ்சிபுரி - தனில்வாழும்
ஸ்ரீங்காரி................ ஓங்காரி
வரைமகளாம் .... ஊங்காரி - கௌரி
மநோன்மணியே ......ஆங்காரி

(அருளம்பாள்)

வங்கணமிகுந்தநல - இங்கித .... சுசீலி
மாக்ஷிபெறு குக்ஷியுறு தீக்ஷணி விசாலி
மங்களநிறைந்தசுப... ... ரஞ்சிதரலீலி
வஞ்சகமிலாதமிகு ......தஞ்சரநுகூலி
மாதங்கிநீலியபி ராமிஜக...........சோதி
வாழுந்திரியம்பகி குணகரிநன் ... னீதி

பாதந்தனைத்தொழுது பூசித்தோ.........மம்மா
பக்ஷமுடனெங்களையும் - ரக்ஷணைசெய் யம்மா (கிருபை)

மரப்பெயர்சொல்லித்துதித்தல்.

[சரணங்கள்.]

௧, புன்னைமரம் - தென்னை ... ... மரம் - சிறுக
பூகமரம் - வாகை ... மரம்
குன்னிமரம் - வன்னி ... மரம் - மருதம்
குருந்தைமரம் - செருந்தி ... மரம்
கொன்னைமரம் - கன்னி ... ...மரம் - அசோகு
கொடுப்பைமரம் - உடுக்கை... மரம்
நன்னிமரம் - முன்னை ... மரம் - பொன்னரி
ஞாழல்மரம் - தாழை ... மரம்

(சாரதாம்பாள்)

நற்றேக்கு - கருங்காலி - வேங்கை - பனை - வேம்பு
நல்லரசு - புங்கு - புளி - நெல்லி - மா - கூம்பு
வற்றுகில் - மந்தாரம் - சந்தனங் ....கடம்பு
மாதுளை - இருப்பை - முந்திரி - பாலா - சோம்பு
முற்றாஞ்சல் - கொழுமிச்சை - எலுமிச்சை - அத்தி
முருக்ககத்தி - கருநொச்சி - வெண்ணொச்சி - மத்தி
பற்றுநன்னாரிச்சை - பேரீச்சை ....விந்தை
பாட்டம் - பாதிரி - கோட்டங் குறிஞ்சியோ - டிலந்தை
சுற்றேறுதிசண்பகம் - நாரத்தை - ....இலவு
சொல்லாலொ - டிச்சி - வேல் - நறுவிலி - காட்டிலவு
சிற்சோரி - சோர்கிள்ளி - யிருப்பூட்டு...... சுணக்கு
செங்குமிழுங் - குங்கிலியஞ் - சதைகூடி - தணக்கு
சுற்பாலை - நாவல் - தும்பி - கொய்யாவு...... முல்லை
கருமரம் - பெருமரம் - மகிழ - மிஞ்சி......வில்லை
சொற்கோட்டி - மூங்கிலின்னு - நானுமரத்......துள்
திப்புளமரங்கொண்டு - கப்பல்கள் சமைத்தோம்... (இரு)

சரக்குப்பெயர்சொல்லித்துதித்தல்

உ, கஸ்தூரி - அரி..........தாரம் - மனோசிலை
கடுகுரோணி - சவ்......வீரம்
சித்தரத்தை - கத்........ பூரம் - சண்பகப்பூ
திராவகமும் - சௌக்...காரம்
கைத்தமுடன் - மூப்......பூரம் - அத்திநாகம்
இருசுநாவி - தேசா... புரம்
பத்திரி - காடிக்..........காரம் - தாளிசைப்
பத்திரி - சிணுக்..........காரம்

(சருணம்பாள்)

...தாமுட்டி - வாய்விளங்கம் - சிங்கி - செந்தூரம்
தேவதாரம் - பரங்கி - பச்சைக்கற் ... ...பூரம்
தக்கோலஞ் - செவ்வியம் - அயப்பொடியும் பாளம்
சதகுப்பி - தாளகா - ப்பிரகம் - நேர் ... வாளம்
அத்தர் - பன்னீர் - சந்தம் - கெந்தி - பூ ... நீறு
அகில்காரஞ் - சிறுதேக்கு - அசமதங் - கல் நாறு
வெத்தயஞ் - சிறுநாகம் - கார்போகம் ... வசம்பு
மிளகுமிலை - வால்மிளகு - வாலுளுவை ...காமன்பூ

வித்தரிசி - அதிவிடயம் - ஏலஞ் - சா........திக்காய்
வெட்டிவேர் - கசகசா - கோட்டமொடு முக்காய்
சித்ரநீலம் - கெந்தகம் - காந்தம் - காயம்... லிங்கம்
சீரகம் - திரிகடுகு - குங்குமம் ... ... லவுங்கம்
ஒத்தநவபாஷாணம் - கோரோசனை........ மதுரம்
உப்பைந்து - பழங் - கூகை - நீசு மருஞ் சீரகம்
பத்தோம - மல்லி - மிள - குள்ளி - மஞ்ச... விஞ்சி
பருசரக்குசவுரிநகை - வருகுதுகாத்தருள்செய் (கிருபை)

மூலிகைப்பெயர்சொல்லித்துதித்தல்.

௬, பொன்னுனை ... ... தசமூலி - திசைப்பூடு
பொற்பாலை ... ... ஐவிரலி
நன்னுரி ... ... யுள்மூலி - வெண்குரி
தாயுருவி ... பிறமூலி
பொன்னின்காணி ... கொடிவேலி - காந்தள்-மனை
பொன் னுமத் ... தேகமூலி
பொன்னளினம் ... ...தவசிமூலி - சீந்தி-சோலை
பொற்கலப்பை ... வசியமூலி

(செகதம்பாள்.)

பொன்துளசி - துளசி - யனுரோகி ... ... பூனைக்காலி
பொடுதலை - சிறுநங்கை - ஆத்தி ... ... இருவேலி
சென்னுடி - காஞ்சோறி - கோரை - பாசி ... வெட்சி
சீந்தி- கருடன்-நெருஞ்சி-கொம்மட்டி-முள்ளி...நொச்சி
சின்னி-வேளை-யரிவு - யாவரை - தலை ... ... வணக்கி
செவியந்- தொழுகண்ணி -முல்லை- சோதிபிணி..மயக்கி
கன்னிமலைதாங்கி - கீழ் - நெல்லி - கரு ... ... முருக்கி
காவளை - கண்டங்கத்திரி - காந்தி-பூனை ... ... மயக்கி
பின்னி - சுண்டை - வெள்ளறுகு - லாடம்-ரத்த ... வல்லி
பேய்ப்புடல் - நிலவேம்பு - கொளிஞ்சி ... நாகவல்லி
நன்மொசுக்கை - கொடுப்பை - வல்லாரை ...கைத்தகரை
நல்லாரை - மிளகரணை - சூரி ... ... காட்டவரை
செந்நாயினுருவி - தக்காளி ... ... நற்பாலை
சிறுகீரை - யாதண்டை - துருத்தி ... .. வெப்பாலை
வன்னிவெள்ளறு - கல்லி - கரந்தை - குன்றி-கரிப்பான்
வகைகள்நோய்தீர்க்குமூ-லிகைகள்சேகரித்தோம்(கிருபை)

(தேசப்பெயர்சொல்லித்துதித்தல்.)

ச, அங்கதேயங் ....குருநிடதம் - காந்தாரம்
அவந்தி-யருணம்......... கன்னடம்
கொங்கணங் - கோசல ... மிலாடம் - கேகயம்
கொல்லம - சகம் - எவனங் கிராடம்
தெங்கணம்-நேபாளம் ...பௌடம் - சிறந்த
சீனஞ் - சிந்து - சோழம்...மராடம்
சிங்களங் - கோளங் - கன்... ...னடம் - ஒட்டியம்
செப்பும்-மச்சங்-குடகந்-திராவிடம்

(மீனம்பாள்.)

வங்கங் - கலிங்கஞ் ... சாலவமுங் - காம்போசம்
மாளவம் - பப்பரம் ... பல்லவங் ....கருசம்
வங்காளம் - பாண் ... டியங் - குருகு - குச்சரமும்
மலையாளஞ் - சவ்வீரந்... துளுவங் - காஸ்மிரமும்
மங்காத - குந்தளம் ... சோனகம் ... ... புலிந்தம்
மகதமுஞ் - சூரசேனத் ..தொடு ... ... குலித்தம்
தங்குங் - குலிங்-காந்திர... முகந்திரம் ....விதர்ப்பம்
சத்பன்னதேசம்போய் - தனங்கள்......சேகரிப்பம்
கங்கை - நருமதை - யமுனை - சிந்து ... ... காவேரி
கன்னி - தாம்ப்ரஞ் - சரஸ்வதி ... ... கோதாவேரி
அங்கு ஆடி - யாரூர் - தினைநக - ரதிகை ... துறையூர்
அல்லம் - விற்கோலங் - குத்தால்-மொற்றா-ருறையூர்
செங்குன்றூர் - நாவல் - பெருந்துறை - யிடையார் - காசி
சீயாழி - தில்லை - மதுரை - கழுக்குன் - றவி ... ...நாசி
அங்கிமலை - விருத்தமலை - போரூர் - போளூர் - புலியூர்
ஆயிரத்தெட்டரன்சனிதி - போயிச்சேவிக்க(கிருபை) (உ)

தேசங்கள்தோறும் - சரக்குகளை விற்பனைசெய்தல்.

(விருத்தம்.)

இவ்வகைகௌரிதன்னையேத்திடக்குறைவொன்றின்றி
பௌவத்தைக்கடந்தேயப்பாற்பலபலதேசமெங்கும்......*
செவ்வையோடேகிநாளுஞ்சிறப்புகள்யாவுங்கண்டு.........*
ஒவ்வியசரக்குவாங்கஒக்கின்றார்விக்கின்றாரோ..........(௫)

தரு-இராகம் - மத்தியமாவதி - ஆதிதாளம்.

பல்லவி.

விற்கிறையஞ்செய்கின்றூரோ - சரக்குகளை
விற்கிறையஞ்செய்கின்றூரோ

அநுபல்லவி.

தக்கதக்கபடியெந்தப் - புக்கத்துள்ளோரும்புகழ
முக்யமாம்பரோபகார- மிக்கவேசெய்தே மகிழ (விற்கி)

[சரணங்கள்.]

௧, அங்கங்குள்ளதேசங்கண்டு... இங்கிதச் ... சரக்குக்கொண்டு
தங்கள்சாமான்வாங்கஅண்டும்-எங்குளோர்க்கும்லாபம்விண்டு (வி

௨: ராசராசரையணைந்து ... நேசமாகச் .....செய்திணைந்து
மாசிலாநன்மைமணந்து-காசுவரவிற் .... அணிந்து (விற்கி)

௩, நீதியென்பவையைநாட்டி ... யேதகங்காணமலோட்டி
வாதுபொய்யற்றுண்மைகூட்டி-மீதுளநன்மைபாராட்டி(விற்கி)

௪, தேசதேசங்கள்கடந்து ... பூசல்செய்வோரையடர்ந்து
வாசமுண்டாகத்தொடர்ந்து-மாசில்லாவழி.........நடந்து (விற்கி)

௫, ஆண்டவள்பேரைவாசித்து-வேண்டியேமிகப் பூசித்து
ஈண்டினோர்களைநேசித்துக்-காண்டியர்நன்றுயோசித்து (விற்கி)

௬, கணக்கில்மயிர்பிளந்து ...இணக்கிக் ...குற்றங்களைந்து
குணக்கில்தியேதெளிந்து-நுணுக்கம்யாவும்...விளைந்து (விற்கி)

௭, தருமதானங்கள்தூண்டி-பெரியோரைக்கண்டு வேண்டி
கருமநடையைத்தாண்டி பரிவுடண்டாகியே ... மீண்டி (விற்கி)

௮: தலங்களெல்லாஞ்சந்தித்து-இலங்கரனைச்.....சிந்தித்து
நலங்கொள்மநம்பந்தித்து-துலங்கிடவே... வந்தித்து(விற்கி)(௩)

வழியிற்சுங்கக்காரர்- தடுத்துக்கூறுதல்.

விருத்தம்.

ஒலிகடலுலகமெல்லாமுயர்வியாபாரஞ்செய்து ... ✱
வலிபெறுதிருக்கோட்டைக்குவரக்கண்டநாட்டையாளும் ✡

மலைமன்னருக்கினையிலைவ்வழியிற்சோதனைக்கியன்ற ... *
கவிமிகுசுங்கக்காரர்கடுத்திட்டார்தடுத்திட்டாரோ ... (௪)

தரு - இராகம் - சங்கராபரணம் - ஆதிதாளம்.

பல்லவி.

வீரர்கள் அடுத்தாரோ - சுங்கக் - காரர்கள்தடுத்தாரோ, ..*

அநுபல்லவி;

போரவர் ஆர்காண் - போகாதே ... நில்லென்றும் ..*
பொதிகள்சரக்குகள் - நீரொவடஞ் சொல்லென்றும் ...*
யார்யார்வந்தீர் - பொதிகளைத் ... தள்தள்ளென்றும் ..*
அத்தையுமீறிநீர் - பத்ரமாய்விள் ... விள்ளென்றும் (வீரர்கள்)

[சரணம்.]

மெய்ப்பொடுபயம் ... விட்டுப் - பொதிகளை
இப்படிக்கொண்டு ... மெட்டுக் - கடந்து
அப்புறம்புறப் ... ... பட்டுப் - போகிறீர்
எப்படி இதன் ... ... கட்டு - அறிந்தும்
இப்புறம்விட்டு ... விட்டு - நாங்கள்தான்
செப்பவும் ஓ ... ... ரொட்டு - ஆகநீர்
தப்பிப்போனால் ... மட்டு - விடுவமோ
கைப்பலமாத் ... தெட்டும் - உபாயர்நாம்

ஒப்பிதமாய்லஞ்சங் - கொடுத்தாலதற்கிசை
உபகாரம்நாங்கள் ... ... தாங்குவோம்
தப்புதச்சரக்கானல் - மெத்தவும்வாங்குவோம்
சரக்கையும்பிடுங்கிக்கொண் ... டோங்குவோம்

அப்படியிப்படியொன்றுஞ்சொல்லாதீர்
அந்தரங்கஞ்சொன்னாற் ...... போதுமே
இப்படியேவிட்டுவிடுகிறோந்தனமெங்கட்
கீவீரோ அதை ... ... யோதுமே

கொள்ளைப்போய்கபட - மெத்தமெத்த ... வுண்டு
கோழிமுட்டைச்சுறுக் - காயென்னென் ......னுண்டு
கன்னமுதலியவு - முள்ளத்தினிலே ... ... கொண்டு
கல்லில்நாருரிப்போ - நில்லென்றுசொல்லி ...விண்டு (வீர)

முதலாளிகளுக்குஞ்- சுங்கக்காரர்களுக்கும் சம்வாதம்.

விருத்தம்:

வீரனெனவந்தசுங்கக்காரருாமறிந்துகப்பல்வியாபாரர்க்குள் ...*
பேரிஜமானத்வமுறும்பிடுகவன்றனுாைப்படியேபெருமையுள்ள *
சீர்பெருகுங்கப்பலுளசரக்குகளை யோரிடத்திற்சேர்த்துக்கொண்டு
கார்முடனெதிர்த்தவரோடுரைசெய்வார்நீதிக்கோர்கரைசெய்வாரே()

திபதை- இராகம்- பரசு- ஆதிதாளம்.

[லாவணி கண்ணிகள்:]

(சுங்கர்) எங்கிருந்து - எங்கேபோறீர்-இங்கேகொண்டுவந்தசரக் *
கேது......அதை - யோது ... ... *

(முதலாளி)எங்கள்தேசம்நின்றுதேய-மெங்கணும்வணிகஞ்செய்வம்.
ஈதே..... ....சரக்-கீதே ... ... (௧)

(சு) சரக்குகளுக்கெல்லாஞ்சுங்கம்-நிரைத்தலுடன்தந்துபோவீர்*
தானே ... .நிசந்-தானே ... ... *

(மு) நிசமாகச்சரக்குவகைக்-கிசையுஞ்சுங்கமெதுவெது.........*
நேரும்... ..விவரந்-தாரும்' ... ... (௨)

(சு) நேரானசரக்குக்கெல்லாந்-தாராளமாய்ச்சுங்கமுண்டு... ...*
நேரீர்..........கையிற்-றாரீர் ... ... *

(மு) தாரதற்குநீங்கள்சொல்லல்-தீருமானமல்லக்காணுந்...... ...*
தாரோம் - ...அது-நேரோம் ... ... (௩)

(சு) நேருவதில்லையென்றுநீர்-வீரஞ்சொன்னாலுமப்பால் *
நீட்டோம் - விட-மாட்டோம் ... ... *

(மு) மாட்டோமென்றுதடுத்துநீர்-தாட்டிகங்கள்கூறுவது...... *
மாமா...சும்மாப்-போமா ... ... (௪)

(சு) போமாஆமாவென்றுசொல்ல-மாமலையரசனிடம்...........*
போங்கள்- இப்போ-நீங்கள் ... ... *

(மு) சொல்லுதற்குநாங்கள்போற-தில்லைநீங்களாகவேபோய்...*
சொல்லீர்- அன்றே-நில்லீர் ... ... (௫)

(சு) நில்லுமென்றுசொல்லுதற்கு-வல்லமையுண்டாகிலதை... ...*
நீட்டும்... இங்கே-காட்டும் ... ... *

(மு) நீட்டுவதுங்காட்டுவதுஞ்-சாட்டுவதும்எங்களுக்கு..........☆
நேரா......... நல்ல-சீரா ... ... (சா)

(சு) சீரன்றென்றாற்பேசலாமா-பாரச்சரக்குக்குத்தீர்வை ... ...*
தீரும்..........வழி-பாரும் ... ... *

(மு) தீருவைசரக்குக்கெல்லாந்-தாரதிற்கஞ்சும்பிஞ்சுக்குந்.........✲
தீரோம்... சுங்கந்-தாரோம் ... ... (எ)

(சு) கஞ்சுக்கும்பிஞ்சுக்குஞ்சுங்கம்-மிஞ்சியீயாவிட்டால்வழி......*
காட்டோம்விட-மாட்டோம் ... ... ✲

(மு) விட்டுவிடாதச்சரக்கைக்-கட்டிவைக்கச்சாமர்த்திய.........*
மேது... ... வெறும்-வாது ... ... (அ)

(சு) வாதுசொன்னோருங்கள்போலெப்-போதுநாங்கள்கண்டதில்
மாயம்.........வெகு-உபாயம் ... ... [லை

(மு) உபாயமென்னதேயமெங்கும்-போயிவந்தோமிதுகேட்டோ
ருண்டோ- என்ன-கண்டோ ... ... (கூ)

(சு) கண்டிருப்போம்வெகுபேரை-மிண்டியும்போல்வாதாடினோர்
காணோம்... சுமை-பூணோம் ... ... *

(மு) காணநீர்வாங்கியிருந்தால்த்-தோணுமானஜாபிதாவைக்......*
காட்டும் ... சாக்ஷி-நாட்டும் ... ... (ய)

(சு) சாக்ஷியென்னசாக்ஷியென்ன-தாக்ஷியின்றிச்சுங்கந்தாருங் ...*
காணும்......நலம்-பூணும் ... ...*

(மு) காணும்வேணுந்தோணுமென்று-நாணமின்றிக்கேட்பதென்ன
காரியம்......வீண்-வீரியம் ... ... (யக)

(சு) வீறுடனேகாலதன்மே-லேறியபாம்புகடித்தால் ... ...✲
மீளார்.........துயிர்-தாளார் ... ... ✲

(மு) மீண்டடங்காப்பாம்பின்விஷ - மூங்கிற்றடிமந்திரத்தால் *
மீளும் ......எத்த-நாளும் ... ... (யஉ)

(சு) நாளுநீரின்மீன்குஞ்சுக்கு - நீளுநீச்சுப்பழக்கிறீர் ... ☆
நாட்டி... ருக்ஷங்-காட்டி ... ...*

(மு) காட்டுப்புலிக்குப்பாச்சலை - வீட்டுப்பூனைகாட்டாசுங்கக்...: ✲
காரீர்...... ...இது-தேரீர் ... ... (யங)

(௬) தேரிக்கம்பத்தாடித்யாகம் - யாரும்கீழ்வந்தேற்கும்வகை... *
தேடும்...... அதை-நாடும் ... ...☆

(௭) நாடியுயரப்பறந்து-மூர்க்குருவிபருந்தாச்சோ ... *
நாட்டீர்...சுங்கங்-கேட்டீர் ... ... (௰௪) (௫)

மலையாளராசனென்னும்மலையரசன்

கொலுவீற்றிருத்தல்.

விருத்தம்.

இன்னணம்வியாபாரிகள்தான்கூறச்சுங்கர் ... *
இஃததிகவதிசயமென்றெழும்பித்தங்கள் ... *
மன்னனுக்கீதுணாசெயவென்றேகுங்காலை ... ☆
மலையாளன்ரத்நசபாமண்டபத்திற் ... *
கன்னியர்கணடமாடக்கவரிவீசக் ... ...☆
காவலர்கள்புடைசூழக்காலாள்துன்னப் ... *
பன்னுமுடிசூடிசிங்காதனத்திருந்து ... *
பாரித்தான்கொலுவாகிப்பூரித்தானே ...(௬)

தரு-இராகம்- தோடி - அடதாளசாப்பு.

பல்லவி.

இராஜர்க்கும்ராஜன்- மலையரசன்கொலு-வினிலேயிருந்தானே.

அநுபல்லவி.

தேசுபொலியிரத்ந - சிங்காதனத்தின்......மேலே
தேவர்கள்மலர்மாரி-பொழிந்திடக்களிட்... ...லே
வாசவனுந்தேவ-ராஜன்றன்னைப்...........போலே
மணிகுயிற்றியமுடிப்- பணி...ள்சூரியர்போலே

வளமைதிகழவும்.................பளபளெனவிரி
அளவிலணிகொடு..............,..உளமுமகிழ்வுற

வாசகந்தெரி.................. நேசர்மெச்சிட
ராஜர்தம்புகழ்..................பேசிநச்சிட - (ராஜர்)

சரணங்கள்.

க, எக்காலம்பேட்டிகி - டைக்குமென்றரசர்கள்
இறைகொண்டுகொலுமுகந்..........தேட
முக்காலங்களுமுணர் - மிக்கானவமைச்சர்கள்
முறைமைபால்வணங்கியே...........நாட
தக்கலயைக்கியானஞ்ச-திக்கியானந்தவருமல்
தையலர்கள் நட.........................மாட
மிக்கானபுலவரோர் - பக்கத்திலேநின்று
மிகவியந்தாசிகள்.......................பாட
நக்கனேநினையாத-.......................முக்கியர்முந்திட
நன்மையற்றறிவில்லாத்-தின்மையோர்......வந்திடப்
பக்கத்திற்கணிகையர்-............மிக்கின்பந் தந்திடப்
பாதத்தின்மேல்மலர்த்-தாதுகள்............சிந்திடப்
பரவுமிரதமேல்-பரிகள்கரிகள்.........மேல்
விரவிவீரர்கள்-பரிவொ..............டேறியே
பாறிச்செயஞ்சொலி- ....மீறியிருந்திட
தேறிமகிழ் வுடன்...........வீறுபொருந்திட-(ராஜர்)

உ, எத்திசையிலுஞ்செங்கோ-லுக்குத்தடை யின்றி
எவர்களும்நடந்திட.......................நாட்டி
தத்தைமொழியார்கள்-மெய்த்தநற்சையோகந்
தனக்கோரணங்கன்போற்........... ... காட்டி
யுத்தவீரர்களுக்குள்-சுத்தர்வருகவென்று
உச்சாகமுடன் துல்லை.............. ... பூட்டி
சுத்துங்கடலொலிபோல்-மொய்த்தமுரசுடங்கா
காகளத்தொனியெங்கும்...... ... ...மூட்டி
வெற்றிக்கொடிவிருது-மற்றவைகளும்......... ...கட்டி
வேணவேடிக்கைகள்-தோணும்படி ... திரட்டி
சத்திரமைன்கட்கு-உத்தமனுய் ... ... ஓட்டிச்
சம்பிரமமுடையதோர் - கெம்பிரனு ... யதட்டி
தக்கவேளிக்கை- ... ... மிக்கநாடியே
பக்கம்சேனைகள்.......... ....கெக்கலிப்புறத்
தடையிலாக்கொற்றக்-குடை...... விலாசனுய்
திடமதாகிய ... . படியுலாசனுய் - (ராஜ)

௩, தன்னுடையநகரில்-உன்ன[illegible]ட்மீட மசகள்சொல்
தாவாக்களதனேயே [illegible] ... தீர்த்து

மன்னுங்குடிகளுக்கு-நன்னயமுபகாரம்
வரிசையாகச்செய்து ... ... காத்து
கன்னுருபோராவிற்-பன்றுவென்போருக்குக்
கனகமீய்ந்துதயை ... ... பூத்து
தன்னைப்புகழாதாற்குப் - பொன்னுமீயமாலே
சத்ருக்களோடவனைச் ... .சேர்த்து
சொன்னபடிநடக்கப்-பன்னித்தண்டனை.......செய்து
துற்சனனைப்பிடித்து-வைச்சுத்தலையைக் கொய்து
பன்னியகொடுங்கோன்மை-உன்னுவோனை யெய்து
பாபஞ்செய்தவர்மேலே-கோபஞ்செய்து வைது

படபடப்புள - துடிதுடிப்புடன்
திடமாநீதியின்-நடையைத்தெரிகிலாப்

பணதிபெற்றரா-வணனைப்......போலவும்
தணிவிலாவெகு - திணியிற்........சாலவும் - (ராஜ) (சூ)

கச்சிக்காரர் - திருக்கோட்டைக்கு வருதல்.

(விருத்தம்.)

கொலுவிருக்குமலைமனன்முன்னேகிச்சுங்கர்...... ...*
குமரியன்பர்செய்தியினைக்கூறக்கேட்டுச்... ... ...*
சொலுமவ்வணிகரையழைத்துக்கேட்கத்தாமுன்... ...*
சொன்னதுபோற்சொலச்சுங்கமீய்ந்தாலியும்... ...*
அலவென்றால்விட்டுவிடுஞ்ஜெயிப்பிரானுல்.............*
அதுவுநலமெனவுரைப்பவணிகரோர்ந்து............*
மலிவுறுகச்சியர்க்கறிவித்திடக்கண்டன்னோர்... ... ...*
வருகின்றார்வந்துறுதிதருகின்றாரே......... ....(எ)

திபதை-இராகம்-மலாரி-ஆதிதாளம்.

[கண்ணிகள்.]

அதிரணவீரர்கச்சிப் - பதிவிசாலாவதியி ... ...*
னரசர்களுங்... ... ... கூடினாரே - கூடி ... ...*

* திருக்கோட்டையென்பது- இக்காலத்தில்- திருவநந்தபுரம் என்றுவழங்குகின்றது.

ஆண்டவனைப்போற்றிசெய்து - வேண்டியேசதுரங்கத்தோ ... ...☆
டனைநொடியில்... ... நாடினனோ ... ... *
பதினறுயிரமென்னுஞ் - சதுரங்கங்கொண்டுகச்சிப் ... ... *
பார்த்திபன்... ... வந்திட்டானே - சேனு ... ...*
பதிகள்சமரதர்க-ளதிரதர்களெதிரிகள் ... ... *
பயப்படத்... ... தந்திட்டானே ... ... (௧)

கதிமிகுமேழாயிரஞ் - சதுரங்கவிசாலாவதிக் ... ... *
காவலன்... ... .. தோன்றினனே - போரின் ... *
களத்தமர்க்குற்றசர - மளப்பில்லாதேற்றுந்தறுக் ... ※
காரரும் ... ஊன்றினனே ... ... *
சதிசெய்ததிருக்கோட்டைக் - கதிபனைதாம்பிடித்துச் ... *
சத்திக்குப்பலி... ... யிடுவோம் - அவனிட ... *
தானையானசேனையெல்லாம் - யானைமுன்னேபூனையென்னத் ... *
தவிடுபொடியாக்கி ... விடுவோம் ... ... (௨)

கோட்டைக்கரசனனை - காட்டானைக்கெங்கள்சிங்கக் ... *
குட்டிகளடங்... ... ... கிடுமோ - ஏதோ ... ※
குத்திரஞ்செய்திருப்பான் - வெற்றிராஜாளியின்மேற் ... *
கொக்கமர்தொடங்... ...கிடுமோ - என்று ... ... *
நாட்டுதியாயாதிபத்தியம் - பூட்டுஞ்செட்டிமைக்காரர் ... *
நகைத்துச்சல்லியில்... ... நடந்தார் - அவரது ... *
நல்விரதக்ஜதாக-செல்லுபதாதியொடனை ... ... *
நாழிகையினிலே ... தொடர்ந்தார் ... (௩)

மிக்கவுநட்பரசரி - லக்கமில்லாச்சேனைகொண்டு ... *
வெற்றித்துணையாக... ... ... வந்தார் - வீறு ... ☆
வெற்றிச்சிங்கம்போற்குதித்து - உக்கிரமித்துப்பந்கடித்து ...☆
விரைவினிற்றொடர்பு ... ... தந்தார் ... ... *
பக்கமுளசாதியாரு - மிக்கதளத்தோடும்மாரோர் ... *
பக்கம்வலைபோற் ... பரந்தார் - நல்லது ... *
பார்க்கலாம்மதென்னவோர்புல் - மாத்திரந்தோற்றட்டுக்கெல்லாம்
பயமாகாதென ... விரைந்தார் ... ... (௪)

வாட்டுமாழிதண்டுவில்லு - நீட்டுவேலுஞ்சூலமம்பு ... *
வாங்கிவருவார்... ... சிலபேர் - பிண்டி ... *
வச்சிரங்கண்டகோடாலி - மெச்சுமழுவிருப்புலக்கை ... ※
வாள்கொடுவருவார்... சிலபேர் ... ... *
கட்டிவளைகுறுந்தடி - நீட்டுபாசமீட்டாங்குகொண்டு ... *
தண்டித்தாண்டி... ... வருவார்சிலர் - சிலர் ... *

எட்டிக்குதித்துச்சிங்கத்தின் - குட்டிபோல்கெரடிகாட்டி ... *
எறிமீறி ... ... வருவார்சிலர் ... ...(௫)
டங்காடமீராவொடு - பேரிசிங்காரகொம்பு ... ... *
தவிலோசைஇடி... முழங்க-இந்தச் ... ... *
சத்பன்னபூமண்டலமுந் - திக்குத்திசையதிர்ந்தேழு ... ...*
சாகரம்மலைகள் ... குலுங்க ... ...*
மங்குலதுபோற்பரவித் - துங்கர்வருந்தூளெழுந்து ... ... *
வானம்பூமிதனை... ... .மூட - எட்டு ... ... *
வாரணங்கள்கைகள்தூக்கிக்-காளொலிக்கோஷிடியையிட்டு ... ..*
மலையரசன்மே ... ...லோட ... ... (௬)

வெற்றிச்சங்குமுரசொலி-மற்றமரர்கேட்டரக்கர் ... ...*
மேவினுமொன்றஞ்சி ... ... நாட - ராக்ஷத ... ... *
வேருமுளையாதறுக்குஞ் - சூரரொன்றுபகைஞர்கள் .... *
வெருண்டோடவழி... ... ... தேட ... ... *
மற்றவுலகத்தவரும் - மிக்கபயங்கொண்டுழன்று ... ...*
மணித்திரைகொண்டு... ... ... காண - அந்த ... *
மலைமன்னன்திகிலடைந் - துலைமெழுகாகித்தப்பும் ... ... *
வழியேதென்றுள்ளில் ... மீதாலை ... ... (௭)

சிம்மக்கொடிசங்கக்கொடி - மைம்முகிற்கப்பாலுந்தேவேந் ... *
திரர்க்குக்கவரி ... ... வீசக்-கண்டுகச்சி ... ...*
தீக்ஷணியடியரிவர்-ராக்ஷதரன்றென்றுசுப ... ... *
ஜெயஞ்சொல்விநயம் ... பேச ... ... *
அம்மையருளொளிகண்டு-இம்மையிற்பகையிருள்க ... *
ளதுகேட்டுப்பிதிர்... ... ... கலங்க - இப்படிவரும்... ...*
ஆக்ஷியடியவரான - தீக்ஷணரைக்கண்டுவியா ... ...*
பாரிகள்தன் அக ... ...மிலங்க ... (௮)(௭)

கச்சிராஜாயோசவனகேட்க- மந்திரிமுதலி யோர்கூறுதல்.

(சந்தவிருத்தம்.)

வெற்றிபெற்றிடுமரசர்கும்முடிமக்கடத்தவர்வீற்றிருந்........ [த்
துற்றவணிகர்களுற்றசெய்தியையோர்ந்துதேர்ந்துளங்கூர்ந்துபார்
தெற்றுநாஞ்செயம்பெற்றுமீளுவதிங்ஙனென்றுரைதந்திடும்.....*
கற்றசெட்டுமைமந்த்ரிமீரொணக்கழறுவாருராம்வளருவார்... ...(௮)

நியமத - இராகம் - பூப் - அடதாளசாப்பு.

[கண்ணிகள்:]

அரசரேமகத்-புருஷரேவீரத் ... ... *
துரையுல்லாசரே ... ... நாளும் - நாங்கள்... *
அறிந்தகூட்க்ஷமஞ் - செறிந்துசொல்வதை ... ... *
நிறைத்துநீருற்றுக் ... ... கேளும் ... ... *
சருவமுந்தெரிந் - தரசுசெய்பவர்க் ... ... *
குறைசெயுத்திற .. ... மேதாம் - எனினும் ... *
தந்த்ரயுத்திதேர் - மத்திரிவேண்டிய ... ... *
தெந்தக்காரியத்து ... மீதாம் ... ... (௧)

தந்தியற்றபோர் - விந்தமற்றநீர் ... ...*
பந்துமாமுலையற்ற... பெண் - போலும் ... ... *
சந்த்ரனில்வானம் - தந்தியில்வீணை ... ... *
மந்த்ரியில்லரசாகு..... மெண் ... ... *
சொந்தக்காலாள்நி - றைந்தசெல்வமும் ... ... *
மந்த்ரிநட்புக் ...குடிச்சனம் - காப்பென் ... ...*
திந்தவாறும்மி - ருந்தராஜனுக் ... ... *
கந்தமாலொப்புப்...படித்தனம் ... ... (௨)

சென்றகாலம்பின் - னின்றகாலஞ்செய் ... ... *
இன்றகாலமுங்... ... கண்டவன் - சத்ரு ... ... *
திரமுந்தன்மன்னன் - உரமும்மற்றதும் ... ... *
தெரிவன்மந்த்ரிப்பேர்கொண்டவன் ... ... *
நன்றுடன்நடக் - கின்றயாவையும் ... ... *
நின்றுதேர்ந்து ... தெளிந்துடன் - செய்யல் ...*
நல்லதாமென்று - சொல்லலால்நாமும் ... ... *
எல்லாமோர்ந்து... ... செயக்கடன் ... ... (௩)

ஆனையோர்லாவ - தாகுமாகாத ... ... *
தாகாதாமென்று... ... தேருங்கள் - நச்சி ... ...*
ஆண்டவனருள் - பூண்டபேருக்கு ... ... *
வேண்டுங்காரியமாம்... ...பாருங்கள் ... ... *
வதிதாம்வதிரி-பூதம்யாவையும் ... ... *
பாகமாய்த்தெரிந் ... ...துள்ளலாம் - உள்ளி ... *
அந்தப்படியாம் - அந்தப்படியே ... ... *
சிந்தித்தோசனை... ... கொள்ளலாம் ... ...(௪)

என்னமந்திரிகள் - சொன்னவாசகம் ... ... *
உன்னிச்செட்டிமைக்... ...காரர்கள் - அரச ... ...✡
ரொதிரிருந்துமிக்-கதிரக்கெர்ச்சித்து ... ... *
இதையுரைப்பார்கு... ... பேரர்கள் ... ... *
மன்னரேமலை - மன்னன்செய்துள ... ... *
பின்னங்கேளுந்தே... வேந்த்ரரோ - நமது ... ...✡
வம்சஸ்த்தர்சரக்கைத் - தும்சங்கொள்ளகொண் ... ...✡
டிம்சைசெய்தானும் ... சந்த்ரரோ ... ... (ரு)

வித்தையாய்க்கற்ற - மந்த்ரிமார்சொன்ன ... ...*
சிந்தனைஜல்தில்... ... கதுவுமோ - மெள்ள ... *
வெட்டுங்கேணிதீப் - பட்டவீட்டுக்கு ... ... *
முட்டில்லாச்சல ...முதவுமோ ... ... *
உந்தமக்குள - புந்தியென்னதை ... ...*
எந்தமக்குணர... ... விள்ளுமே - ஓங்கி ... ... *
உதைத்தகாற்புழு - வுதிக்குமுன்வயிற் ... ... ✡
கொதித்துச்சீய்க்கட்டிக் கொள்ளுமே ... ...(௬)

சிங்கமானது - மங்கினால்யானை ... ...*
பொங்கிமேல்விழுந்தடிக்கும்-பூனை .. .. *
திகைத்துச்சோம்பினால் - மிகுத்தெலிகள்போய் .. ... *
நகைத்ததன்றலை ...கடிக்கும் ... ... *
பொங்கியவிஷந் · தங்குநாகந்தான் .. ... ✡
சிங்கினாற்பிள்ளைப்... பூச்சியாம் - உக்ரப் ... ... *
புலியொடுங்கினால் - மெலியும்புல்வாய்நான் ... ... *
வலியுளோன்புலிநீ...தாழ்ச்சியாம் ... ... (எ)

என்னுமேதமது - முன்னுளோர்வீரஞ் ... ...✡
சொன்னாலேபசிபோய்விடும் - பிருதி ... ... *
விஸ்வரன்வம்ச - தாஷீடிகஞ்சொன்னால் ... ... *
வாஸ்தவங்கல்லும்வாய்விடும் ... ... ✡
பன்னுமந்தகன் - றன்னைக்கொன்றலகர் ... ...*
மன்னுந்துன்பத்தை... நீக்கினான் - ஆதி ... ... *
பரமனால்மிகு - வரமுங்கொண்டுபல் ... ... ✡
விருதுகளுமுண் ... டாக்கினான் ... ... (அ)

அந்தவம்சத்தில் - வந்ததும்அல்லால் ... ... ✡
சுந்தரியருளைப்... ...பெற்றாந் - தில்லை ... ✡
ஆட்டனோர்கலைக் - கோட்டரருளால் ... ... ✡
காட்டும்பிரணவம் ... உற்றாம் ... ... ✡

இந்தப்பகைக்குச் - சிந்திப்பதென்ன ... ... ❋
அந்தரியருள்... ... ... நேரோ - கொண்டு ... ...❋
எட்டிலாகிப்போய்-வெட்டுவோம்அவனைக் ... ... ☆
கட்டளைதரு ... ... வீரோ ... ... (கூ)

வீரர்செட்டிமைக் - கார்ர்சொல்லத்தி ... ... ☆
டிமொன்னக்குதித்... ...தார்களே - படை ... ... ✤
வீரரும்ரண - சூரரும்வில்லுக் ... ... ☆
காரரும்உளைப்... ... பார்களே ... ... ❋
பாரெல்லாம்புகழ் - தீரரோமிகு ... ...☆
சீருலாவிய ... ... வீரரோ - வெற்றிப் ... ... ✤
பாண்டியர்களே - காண்டிபரோயாம் ... ... ☆
வேண்டும்விண்ணப்பந்... தாரீரோ ... ...(௰)

மந்திரமென்ன - தந்திரமென்ன ... ... ❋
சிந்திப்பதென்ன ... ... கூறுங்கள் - பகைவரை ... ☆
மாட்டுவோம்சேனையை - வாட்டுவோம் உம்புகழ் ... ❋
நாட்டுவோம்கண்டு... ... தேறுங்கள் ... ... ❋
பந்துபோற்குதித் - தந்தமன்னனைச் ... ... ❋
சிந்திடக்கடி... ... ...தடிப்போம் - திறைப் ... ...❋
பஞ்சிலேதீயின் - ரஞ்சகம்போலே ... ... ❋
மிஞ்சிடாதுயிர் ... குடிப்போம் ... (௰௧)

கட்டிவந்தவனை - இட்டமாயுமைக்கு ... ... ✤
வெட்டியேபலிக்கு ... ... வோம் - சுழற் ... ❋
காற்றிற்பூளைபோல் - தூற்றிச்சேனையை ... ... ☆
சேற்றுச்செய்திட-எகு ... ...வோம் ... ... ❋
அட்டியற்றெங்க-ளிட்டம்போலுநற் ... ... ❋
கட்டளைசெய்யு... ... ...மென்றூர் - எல்லாம் ... ❋
அரசர்கேட்டுடன் - சுருதித்தர்மம்போல் ... ... ✤
இருதயத்தியோசிக்... ... இன்றூர் ... (௰௨) (அ)

தேசாதிபருக்கும் - மலையாளனுக்கும் சம்வாதம்.

(சந்தவிருத்தம்.)

இவ்விதமவரவர்யோசனையாவுமிராசனுணர்ந்துமுதற்.................❋
செவ்விதிகூடியமந்திரிகள்தமமொடுதேவியினைத்தொழுதே.........❋

யவ்வையினம்மலைமன்னிடமனுவியேயறநெறிமுறைகூறி... ... *
அவ்விருநிருபருமொவ்வுதலின்றிவாதாடுவராடுவரோ.......... ...(கூ)

திபதை- இராகம் - அடாணு - ரூபகதாளம்.

[கண்ணிகள்.]

(மும்)மன்னனுனமலை - மன்னனேநீரிந்தப் ... ... *
பின்னஞ்செய்ய ... ... லாமோ - புதிதான ... ...*
வழக்கஞ்செய்திட்டால் - இழுக்கில்லாமலே ... ...*
முழுக்க ... ... ஆகுமோ ... ...*

(மலை)என்னவசனங்கள் - பன்னவந்தீரதை ... ... *
இன்னொருதரஞ் ... சொல்லும் - நான்கேளாத ... ...*
எங்குள்ளவார்த்தையை - இங்கேசொல்லவந்தீர் ... ☆
அங்குதானே ... ...நில்லும் ... ...(க)

(மு) நில்லுமென்றேவெறும் - வல்லமையாகவே ... ☆
சொல்லுதல் ... ...கூடாது - வெகுவித ... ...*
நிஷ்டூரவார்த்தைவாய் - விட்டுச்சொன்னீர்நீதிச் ... ...*
சட்டத்தை ... தாடாது ... ... *

(மலை)நல்லதுநீரிங்கே - சொல்லவருகிற ... ...*
புல்லறிவு ... ... மேது - அதுதனே ... ☆
நானறியும்வகை - யானபடியாய்நி ... ...*
தானமதா ... ... யோது ... ... (உ)

(மு) ஓதக்கேள் ☆ கஞ்சுக்கும் - மீதான * பிஞ்சுக்கும் ...*
நீதியாய்ச்சுங்க ... ...முண்டோ - பலசரக் ... *
குள்ளதர்க்குத்தீர்வை - கொள்வதல்லால்சாஸ்த்தி ... ... ☆
விள்ளுவதென்ன........கண்டோ ... ...*

(மலை)ஈதென்னகாரணம்-ஓதவந்தீரிது ... ... *
நீதியல்லக் ... ...காணும் - என்தேசத் ... *
திருக்குஞ்செயத்கைப் - பெருக்கமறியா ... ... *
துரைக்கிலதென் ... ... தோணும் ....(ரு)

☆ கஞ்சுக்கும் என்பது, வெண்கலமுதலியநகைகட்கும்.

* பிஞ்சுக்கும்-என்பது- சிறியநவமணிமுதலியகல்வகைகட்கும்.

(மு) தேசமைம்பத்தாறும் - வாசஞ்செய்தும்வெகு ... *
ராசனைக் ... ...கண்டாராம் - இந்தப்படி ... *
நீர்வையைக்கேட்டபே - ராளையுங்காணுராம் ... *
நீர்கேட்கக் ... ... கண்டாராம் ... ... *
(மலை)மோசவார்த்தைகளைப் - பேசுகிறீர்நிச ... *
வாசகங் ... ... கூறீரோ - கூறினாலும் ... *
முக்காலுஞ்சுங்கங்கொ - டுக்காமல்விட்டிடேன் ... *
தக்கது ... தேறீரோ ... ... (௪)
(மு) தான்திருடியச - லான்சொல்நம்பானென்ப ... *
தானியா ... ... குஞ்சாக்ஷி-ஒருக்காலுந் ... ... *
தப்புச்சொல்லுவதற் - கொப்போமுமையரு ... *
ளெப்போது ... ... மத்தாக்ஷி ... ... *
(மலை)என்காணுந்தன்னையே - தான்புகழ்ந்துகொண்டீர் ... *
நான்முன்னேசொன் ... னேனே - சாக்குகட் ... *
கெல்லாஞ்சுங்கங்கொடு - மில்லையேல்விட்டிடும் ... *
அல்லால்வெல்லென் ... றேனே ... ... (௫)
(மு) அப்படிநீர்மந்தி - கைப்பிடிபோற்சொன்ன .. ... *
லொப்பிதமா ... ... காதே - நெறிமுறை ... *
யாவையுங்காவலர் - பாவனையாய்லோகம் *
மேவச்செய்வ ... தேதே ... ... *
(மலை)மெய்ப்பானநீதியைத் - தப்பென்றுரைக்கிறீர் ... *
அப்புறம்போ ... வீரோ-கொடுத்திட ... *
வேணுமென்றுற்சொன்ன - காணிக்கையீய்ந்தாக்கால்... *
நாண்யமடை ... வீரோ ... ... (௬)
(மு) இல்லாததொன்றைத்தன் - வல்லமையாற்சொன்னால் ... *
எல்லாருங் ... ...கொள்வாரோ - வளர்ந்தே ... *
இருக்குமுருக்குப் - பெருத்தாலுந்தூணென் ... *
றொருக்காலும் ... விள்வாரோ ... ...*
(மலை)எல்லாத்தேசத்துமென் - வல்லமையாலிதைச் *
செல்லநடத் ... தினனே-உங்களுக்... ... *
இருந்தசரக்கும் -பொருந்தும்பலமுங் *
கரந்துவிடத் ... ... தினனே ... ... *
(மு) கொல்லத்தெருவினில் - நல்லூசிமாறினுன் ... *
வல்லமை ... ... செல்லாதே- எவருக்கும் ... *
கூருள்வீரமுந் - தீரமுதாரமும் ... ... *
ஓரிடம் ... ... நில்லாதே ... ... *

(மலை) நில்லாதுஞ்செல்லாதும் - எல்லாங்கணத்திப் - போதில், ... *
வல்லலெதெரிந் ... திடலாம் - வருகுவீர் ... ... *
நீருநாமெல்லோரும் - வீரமதாகவே ... ... *
போர்கள்புரிந் ... திடலாம் ... ... (அ)

(மு) போர்செய்தால்தோல்வியும் - வீரஞ்சேர்வெற்றியும் ... *
ஆருபங் .... காகிறதோ - சலசலப் ... ... *
புற்றுற்பனங்காட்டு - வெற்றிப்புலியத ... ... *
கற்றிப்பின் ... போகிறதோ ... ... *

(மலை) ஆருக்காருலென்ன - போருக்குப்பின்னிட்டால் ... *
ஊருக்குநீர் ... தண்ணலாம் - பலமுண்டேல் ... *
அட்டியன்றிப்போரித் - இட்டியெனவென்று ... ... *
கெட்டித்தனம் ..... பண்ணலாம் ... ... (கூ)

(மு) மெய்த்தவசனங்கேள் - சத்தியந்தன்னைய ... ... *
சத்யம்வெல்லா ... தறிகாண் - குடியர்போல் ... *
வீம்பிலழிந்துவீண் - சாம்பலாகாவகை ... ... *
யாம்புத்திச்சொன் னேங்காண் ... ... *

(மலை) புத்திசொல்லத்தரு - வித்தேனுநீயொரு ... *
மித்துச்சண்டை ... தொடுப்பீர்-தொடுத்திப்போ ... *
பொங்காரமாயுத்தம் - இங்கேசெய்யாவிட்டாற் ... *
சுங்கத்தனைக் ... கொடுப்பீர் ... ... (ம)

(மு) பன்றிக்குபதேசஞ் - சென்றுரைத்தால்யானைக் ... *
கன்றுக ... மாட்டாது - விடமுள்ள ... *
பாம்புக்குப்பால்வார்த்தால் - தீம்புசிப்பாமமு ... *
தாம்தன்மை ... காட்டாது ... ... *

(மலை) நன்றுகாண்குருடன் - நின்றிராசமுழி ... *
என்றுகாட்டல் ... போலே - ஒருமையன் ... *
நண்ணுங்கனுப்போதும் - எண்ணற்பலன்காண ... *
வொண்ணு ... ததனாலே ... ... (மக)

(மு) அம்மையருளினு-லும்மைச்செயித்துநாம் ... ... *
செம்முடிசூட்டி...வெல்வோம் - இன்றுமுதல் ... *
ஐந்துநாளைக்குள்ளே - உந்தன்சேனையெல்லாம் ... *
சிந்த அடித்துக் கொல்வோம் ... ... *

(மலை) உம்படையும்மையும் - தம்பிவந்தோனையுங் ... *
கும்பலோடே... யடிப்பேன் - கணத்தினில் ... *
ஊழிக்காற்றிற்பஞ்சின் - தூளியைப்போலேயித் .. *
நாளினிலே... ...மடிப்பேன் ... ...(மஉ)(கூ)

தேசாதிபதிகள் காமாக்ஷியம்மவனைத் துதித்தல்.

விருத்தம்.

வெற்பனையனிஃதுனைத்தாங்கொருசாமானும்உதவா...*
விகற்பஞ்செய்ய ... ... *
நற்பதிநின்றுங்கச்சிக்காரர்கள்சேகரிப்ப ... *
நடுராவில்மாயா ... ... *
வுற்பவத்தாற்படைகளெலாங்கவரவிவருமையினைத்தம் *
முள்ளத்துள்ளிப் ... ... *
பற்பலவாம்புகழதனைநாடுவாரருட்டுதிகள் ... *
பாடுவாரோ ... ... (௯)

தரு- இராகம்- காம்போதி- ஆதிதாளம்.

பல்லவி.

ஓங்காரப் பொருளே-பரமேஸ்வரி ...*
உனைப்பணிவோர்க்கருளே ... ...*

அநுபல்லவி.

ஆங்காரியங்களெல்லாம் - ஆகச்செய்யுநிரூபி ... *
ஐம்பத்தோரக்ஷரத்து - ளாடுகின்றவரூபி ... *
நீங்காதன்பருளத்தில் - நிற்குமந்த்ரசொரூபி ... *
நிறைந்தயேகாக்ஷரி - நிர்மலஸ்வயரூபி ... *
நேயமதாமெமம... ... தாயிதயாநிதி ... ... *
தூயவடியர்பொரு-ளாய்விரவும்பதி ... *
நியாயமதாய்வர - வேயிதுவேததி ... *
நீயலதேதினி- வாய்மையொடார்சதி - (ஓங்கார)

[சரணங்கள்]

௧, எங்குநிறைந்துநிற்குந் - துங்கப்பரமேஸ்வரி
இதுவதின்பொது ... ...காரணி
கங்கைமுடியோன்பக்கந் - தங்குமதோன்மனி
காமாக்ஷிபரி ... ... பூரணி
சிங்கவாகனியாயி - மங்களாகாரத்தாயி
நிரக்ஷி ... ... நாரணி

தங்குமுன்செயலவிட் - டிங்கேவேறேசெயல்கள்
தானுண்டோஅருள் ... ஆரணி

தாதாவுனதருள் - மீதா... யெம்முன்
மாதாநீவரி - லேதா... ளிம்மன்
வாதானதுகெடு - மேதான் ... முன்பின்
ஆதாரமதது - ... வோதா ... யன்பின்

மாதயைவைத்தெமை - யாதரி... சுந்தரி
பாதகருக்குயர் - ...தீதுசெய் யந்தரி
வேதனையீதென - ...ஓதின மந்தரி
யாதரிசுபகுண - ... நீதகி ... தந்தரி (ஓங்கார)

உ, சோதிப்பிரவாகமாம் - நீதியாநந்தமே
சுயஞ்சோதிசுழி ... ... முனையே
ஆதிமூலாதாரி - நாதாந்தகுண்டலி
ஆருதாரத்தின் ... . மனையே
நீதிப்பிரம்மாண்டத்துக் - காதியாகியுமப்பால்
நிலவும்பேரின்பச் ... ... சுனையே
பாதிப்பிறையோன்மாயோன் - வேதியனையாதியில்
படைத்தகாரண ... ... அனையே

பாரோயருள்விழி ... ...நேரோ வாமடி
திரும்படிசுகம் ... நேருங்கைவிடில்
யாரோயெமையாள் ... வாரோ ...யுனதடி
யாரோயுறுதுயர் ... வேரோயும்படி

ஆயிமநோன்மணி... ...தாயி பராபரி
நீயருளாம்நிதி... ... யாய குண்டலி
சேயுலகங்களின் ... ...தாயெனுமாதரி
செய்களையாளுஞ்ச ... காய நிராதரி (ஓங்கா)

ந, சூரியகுலனுக்கு - ஓர்விஸ்வாமித்ரன்செய்த
சூதரன்தீர்க்க ... ... வில்லையே
வீரியநளனுக்கு - நேருஞ்சனியால்வந்த
விபத்தரன்காக்க ... வில்லையோ
சேரிரணியன்செய்த - கோரம்பிரகலாதற்காய்ச்
சிதரன் ஏற்க ... ... வில்லையோ
கோருமம்பர்களுக்குச் - சூரபத்மாவால்வந்த
குறைவுவேள்நீக்க ... வில்லையோ

சாருந்தக்ஷகன்மகம் ...வீர த்தளித்தாய்
ஆரணனொருதலை ... பேரச்செய்வித்தாய்
மேருநேர்மயிடன்பேர்தீரக் ... குவித்தாய்
ஓரில்புராதிய ... ...ரூனை யெரித்தாய்

தெரிவையிம்மலைமன்னன் புரிகிற...கோரம்
ஒருவியிவன்சிரங்... ... கருகச்செய்சூரம்
பிரியமொடாயுதம்... ... வரமுதல்...தீரம்
கிரியையாம்ஜெயங்கொடுத்-தருள்வதுன்பாரம்-(ஓங்கா`(ம)

இதுவுமது,

சத்துருமாரணம்.

* ௧௬ - அடி - சந்தவிருத்தம்.

பார்வதிமயேஸ்வரிசதாசிவ நிர்வாணி ... *
பத்மநாபிவாணியுலகமமர்...காணி ... ... *
பார்முதற்சகலபிர்மாண்ட... ரக்ஷணியே ... *
பத்தானுகூலியெதிர்சத்ரு பக்ஷணியே ... *
பழமறைமுடிக்கணடமிடுதேவதேவி ... *
பஞ்சபூதப்பௌதிகத்தினடு... வாவி ... ... *
பயிரவிபரப்பிர்மிநிட்களசொரூபி ... . *
பரமேஸ்வரியாப்ரகாசி ... யரூபி ... ... *
தார்பூணுசடிலமொடுநடன மிடுகாளி ... ☆
சாமுண்டிகங்காளிபகைஞர்க்குக்கூளி ... *
சாம்பவிநிர்க்குணிமூலவோங்காரி ... ... *
சத்திபரமாயிஜகசாக்ஷி யாங்காரி ... *
சண்டப்ரசண்டமாவுக்ரநிர்த் தாளாய்ச் ... *
சத்துருவைவெற்றிதருரணபத்ரகாளாய் ... *
சாலினிமஹாபிர்மராக்ஷஸிசம்மாரி ... ... *

---

* இவ்விருத்தத்திற்குமுன் இருக்கின்றதோத்திரத்தருவுக்குப்பின்பு முதலாவதுஉற்பத்திகாண்டத்தில் இருபத்துநால்வர்பிறப்பதற்காகக் கலைக்கோட்டர் - பராசத்தியைத்தோத்தரிக்கும்போது- அம்மன்பிரசன்னமானாள் - என்னும் ஓரடித்தருவை இவ்விடத்தும் பிரசன்னப்படுகிறதாக வருவித்துப்பாடி இவ்விருத்தத்தை அம்மன் முன்னிலையிற்றோத்தரித்துவேண்டிக்கொள்வதாகப்பாடிக்கொள்க.

தந்த்ரமந்திரசடாக்ஷரி யாயகோரி - - *
கார்மேகநீலியக்ஷிட்டாக்ஷர குமாரி - - *
காமாக்ஷிமீனாக்ஷிகண்டர்களின்வீரி - - *
கயிலாசவாசிமாராசிமேல் வாசி - - *
கமலனுதியராறுவிடருளு நேசி - - - *
காலகாலகிவேதிகசடர்க்கு நஞ்சி - - *
காக்ஷியுறுமடியர்களசுபேஷையுறுவஞ்சி - - *
கண்டகர்களுடலைப்பிளந்தெறிகொடாலி - *
கருதியபடிக்கருள்புரிந்திடு......கபாலி - - *
சீர்மேவுதாயிபஞ்சாக்ஷரி நல்வாமி - - *
திரிசூலிதுர்க்கைமுக்கண்ணிபலநேமி - - *
திரிபுராந்தகிசர்வகாரண ... வதாரி - *
செம்மைமைமவெண்மைமுதலானவுருவாரி - *
திகம்பரிபாம்பரிசுகந்தருநன்னீதி - *
தீனரக்ஷகிகோடிசூரிய ப்ரசோதி - - *
தேவிகருணாம்பிகாண்டவளே ...நின்சரணம் ... *
சேய்களுக்குறுபகைஜெயித்தருள்செய்சரணம் ... (யக)

சிரோன்மணி வருதல்:

விருத்தம்.

பாலர்துதித்திடவுமைவந்தருண்முதியான்மகமொன்று.
பண்ணியட்ட ... ... *
பாலர்மதியருக்கனயன்மாலுருத்ரன்பெயருறு ...*
பாணங்களீய்ந்தப் ... ...*
பாலகல அந்தகர்ச்சேரன்புதல்விதாதையின்ச ... *
பைக்கேநல்லன் ... ... *
பாலுடனன்னலங்காணவருகின்றாள்முதல்வியெனும்...*
பனாயன்பாளே ... ... (யஉ)

தரு - இராகம் - செவுளிபந்து - ஆதிதாளம்.

பல்லவி.

அநந்தசிரோன்மணி ... வந்தாள்- சபையிலுள்ள
அனைவர்க்குங்காக்ஷியைத் தந்தாள்

அநுபல்லவி.

வனைந்தகும்பமாமுலை - மங்கையர்கள்திலகி
வானமங்கையருக்கோர் - தானமெனுமுலகி - (அநந்தசி)

[சரணங்கள்.]

௧, சந்த்ரன்முகங்கஞ்ச - நேத்ரம் - ஞானமிர்தங்கொள்
தங்கக்குடம் அன்பின் ... பாத்ரம்
புந்திரத்நம் - இன்ப .. ... க்ஷேத்ரம் - வேதவேதாந்தப்
பொருளையெல்லாந்தெரியுஞ் சூத்ரம் -
சந்தேகநோயைத்தீர்க்கும் - சஞ்சீவிகல்விக் ... கடல்
தருமமிருக்கும்பெட்டி - தத்வஞ்சோதித்த... வுடல்
இந்த்ரார்க்கமுதலகத் - தெழிலைக்ரகிக்கு ... மிடல்
ஏகப்பாத்வந்தெரி - யோகசாதனத் ... ... திடல் (அநந்)

௨, பொருள்பொன்றபூமி ... தேவி - சத்யநிதானப்
புத்திக்குச்சத்தி ... ...தேவி
பெருமைக்குலக்ஷ்மி ... தேவி - கல்விதெரிந்த
பெற்றிக்குவாக்கின் ... தேவி
பரையடிக்கன்புசெய்யும் - பக்திதனக்கிங் ...கீடு
பாதலம்பூமிவிண்ணிற் - பகரலாகுமோ சோடு
சுருதிமுடிவிலாடுஞ் - சுந்தரிதன்னைத் ... தேடும்
சுருக்கவறிவிற்சித்தி - வருக்கங்கைவசங்...கூடும் - (அநந்தசி)

௩, அருந்ததிக்கற்பும் ... பேணுமே - நளாகினியின்
அநுக்ரகசாபம் ... நாணுமே
திருவுமழகிற் ... கோணுமே - எவ்வுலகத்துஸ்
திரீகட்குமதிகங் ... காணுமே
வருந்துமடியர்குறை - மாற்றிச்சந்தோஷிங் ... கூட்டும்
வாலாம்பிகைபதத்தை மநத்துள்ளொளியாய்...நாட்டும்
திருந்துமடியர்தம்பாற் - சித்தாந்தத்தைப்பா ... ராட்டும்
தீர்க்கவாதிகள்தம்மைப் - பேர்த்துக்கழுவில்மாட்டும்-(அந)()

சிரோன்மணிதனது நித்தியாநுஷ்டானமுடித்து அம்மனைத்தோத்தரித்தல்.

விருத்தம்.

நற்குணச்சிரோன்மணிப்பெண்ணாநதீர்த்தத்தின்மூழ்கி ... ❋
நிற்குணவுருபிக்குள்ளினியமலார்ச்சனையியற்றிச் ... ❋

சற்குணியகிர்முகத்திற்சத்திரூபம்பூசித்துச் ... *
சொற்குணவேதார்த்தத்தாற்றுதிக்கின்றாள்மதிக்கின்றாளே - (௰௩)

தரு - இராகம்- மத்தியமாவதி - ஆதிதாளம்.

பல்லவி.

ஓம்பிரணவரூபி - ஏகாக்ஷரி - ஓம்பிரணவரூபி.

அநுபல்லவி:

சாம்பவிமயேஸ்வரி - சங்கரி...சடாதரி - *
பாம்பணியுமீஸ்வரி - பத்தருக்கருள்புரி - (ஓம்பிர)

[சரணங்கள்]

௧, காளியதி சுந்தரி - இலகும்நா - ராயணி
வேதாந்தபா - ராயணி
எங்கும்நிறை - பூரணி
நிறைசுப - - காரணி - முதலான
காயத்திரி மந்திரி -
நீளுங்கிரிகை தந்திரி - அஷ்டாங்க - சையோகி
சிட் டாங்க - வைபோகி
சர்வகாரிய - - விவேகி
அஷ்டசித்தியின் - தேசி- சர்வஞ்
தேயபிர்மாந்தரி [ஞத்ய
நிலமகள் - மலர்மகள் - மலைமகள் - கலைமகள்
நிலம்புனல் - சொலுமன - லொளிவளி - நலவெளி
நிதிபெறு ... திறலவள் - பதியினும்... விறலவள்
புதியன ... பெறுபவள் - முதிரறி ... வுறுபவள்
மதியிரவிகள்சரா - சாந்தருந் ... தாயே
துதிசெயடியரிரு-தயம்வரு ... ...வாயே - (ஓம்பிர)

௨, வேணிமதி ...சூடி-அரன்றன் விஞ் ...ஞாநகி
பரம மெஞ் ... ஞாநகி
மறவர்க் கஞ் ... ஞாநகி
குரவர்கஞ் ...... ஞாநகி - ஆதியாம்
வேதவேதாந்தநாடி
, வாணுள்மிகக் கூடி- கற்பாந்தநிர்.........வாணி
அரஹரசர் ... ...வாணி

பரமபத ... ... காணி
சித்தர்முத்தர்க்குப் ... பூணி- பன்னி
வயதுளஅதிமோடி [ரண்டு
வாமிநீ - சோமிநீ - நேமிநீ - தாமிநீ
மறையவள் - அறியவள் - நெறியவள் - முறையவள்
மயில்மிசை...யதில்வரும் - அயிலவனையும்பெரு
வயிறனையுமொ... ரொரு - செயதனிலே ... தரு
இயல்புளநீயடியேன் - துயாறப்.....பாயே
புயனிறமுடன் வந்து- தயைசெய்யும் ஆயே - (ஓம்பிரணவ)

௩, ஏதுகுறை ... வோது-தெரியாதுசெய் ... தாலும்
அறியும்பொருட்... டாலும்
இரக்கமுற்று ... றாலும்
சொல்லிவைத்தாலே சாலும்- இஃதுன்
ஏழைமேற்றவறேது [பாரம்
பாது ... ...காவாது- கைவிடாதேகண்...பாரு
உனைவிடவே ...... ருரு
இல்லாமைதனைத்... தீரு
உன்பாதங்கதி ... தேரு - தேர்ந்து
பாக்யப்பாவினிமீது [யர்வுள
பருகிட - வுருகிடப் - பரவிட - வரவிடப்
பவாயேநீ - கிருபைசெய் - வருபவங்- கருகச்செய்
பத்தர்வினைக.....ளோட - சித்தஞ்செய்யுன்னை... நாட
அத்தியஞ்செய்து...பாட - முத்தியதனித் ... கூட
பத்தியாய்த்... தொழுதெ - னனைரக்ஷித்தருளே
நித்தியகருணை...-...நந்த ...நீதியானபொருளே-ஓம்பிர (டிஉ)

சிரோன்மணிதன்குறைகூறுதல்.

விருத்தம்.

அன்னையுமையெழுந்திருபத்தொருநால்வர்க்கின்னருடந் ... *
தருளின்றிளன் ... ... *
றன்னையொக்குஞ்சகியுரைக்கச்சிரோன்மணிகேட் டின்புடனவ்
வழியருக்கின் ... ... *
டன்னைவந்தாளென்றனக்கென்காணவில்லையென்றிரங்கி ... *
பவசமாயோர் ... ... *
அன்னவயிற்றறித்தபலக்கூறுவாள் தன்னிற்றான் ... ... *

தரு-இராகம் - தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

என்ன ஜநநம் ஜநநம் - இதையெடுத்
தென்னபிரயோசனம்

அநுபல்லவி.

தன்னைத்தானறிதல்......நன்மையதில்லாவிட்டால் *
தலைவனைக்கண்டால்மிகு-பலமிதிரண்டுங்கெட்டால் *
சாலமயல்-மேலலையுந்-தூலமிது-காலன்வருங்.........*
காலமிலாச்-சீலமுடன்-சூலியனு- கூலமற்ற...(தென்ன)

[சரணங்கள்]

௧, சருவஜீவனுக்கும்.........ஒருதூல ... ... மேசரி
சரியாந்தூலத்திற்ஜீவன்- பிரிவேதுண்டதைத்...தெரி
பருவசாலிக்குள்ளே......யொருவனு ... மெகரி
பரமவாநந்தமெங்கே ...வருமோவென் றதைப்புரி

பக்குவ-மிக்கந-மக்குநி-றைக்கிற-தக்கந-யக்குரு-வுக்கடி- மைக்கவி
பாடிநட - மாடிமிக - நாடியுடன் - கூடியதித்

பரபரவெனமநம் - வரவரத்தினந்தினம்
உருகிடவருள்கனம் - பெருகிடச்சுகதனம்

பாலிப்பது-மேலிச்சைய- தாலருள்செய்- நூல்பழகு
மாலறவின் - வேலைசெயும்- போதுளதி - றூலலைவ - (தென்ன)

௨, வாசலொன்பதும்பஞ்ச கோசமான ... வீடு
மாசம்பத்தும்வளர்ந்து...பாசம் பிடித்தமேடு
ஆசைமு ... தலியபி சாசம்வாழ்சுடு காடு
மாமெசலும்புத்தோலாலே பூசியமலக் கூடு [மை-யார்வமாம்
மாரித-னீரினித்-சார்வுள- வோர்குமிழ்-பார்மிசை ஓர்கிலா-சீர்பொ
மாயம்வெகு-பாயம்அற்ப-காயம்பொள்ளத்- தேயம்பொறி

மரமடர்பெருங்காடு - எருமைச்சண்டியாமாடு
பிரியிலெரியும்...ஓடு - திருட ...ரிருக்குநாடு

மானுமிதிற்-றுனெனது- நானென்றபி - மானிப்பதத்
தானவிந்தக்-கானற்சல-மானபொய்மை-யானதிது-(என்ன)

௩, தந்தைதாயார்மனைவி ... - மைந்தர்சுற்றத்தா ரீட்டம்
சொந்தமென்றலைகவோ - சந்தையிற்பெருங்கூட்டம்

வந்ததநந்தான்யங்க ... விந்த்ரஜாலத்தி...னுட்டம்
சொந்தவாழ்க்கைப்பருவம்- சித்துங்காரனனி ரோட்டம்

தோதக-காதக-யாதக- சாதக- ஞூதொடு- வாதுக- ளேதரு- மீதினில்
தோய்ந்துமதம்- பாய்ந்துமிகக்- காய்ந்துநின்று- மேய்ந்துகொ
சுகமதைநித...மெண்ணி - மகிழ்வுடனுசைக்...கண்ணி [ண்டு
அகமதனிலே ...நண்ணி - மிகக்கிரியைகள் பண்ணிக்

சோகமுறும்- போகமதில் - மோகமது - வாகச்செயும்
தேசமிதில்- யோகம்வரு- நாகரிக- பூகமுண்டோ (என்ன)(௰௬)

சிரோன்மணி-கச்சிக்காரரோடு சந்தித்துப் பேசுதல்.

மாது சிரோன்மணியிவ்வகைதனக்குட்டோற்றும் ......*
வகைகளெலாந்தன்னுளத்திலுன்னிப்பன்னித் ......*
தேசதுங்கச்சியருக்குமைவந்தன்பாற் ... ...*
சிறந்தவரங்கொடுத்தாளுந்தியளானேம் ... ... *
எதிதனையவரிடஞ்சென்றறிவோமென்றுங் ... ... *
கியலுறசேடியருடன்வந்திடவின்னோர்தன் ... *
கோதிமகிழ்ந்துபசரித்துன்மைகளைக்கூறி ... ... *
யொப்புவாரவடனக்குச்செப்புவாரோ ... ...(௰௫)

திபதை- இராகம்- மோகனம்- ஆதிதாளம்.

[கண்ணிகள்.]

(கச்சியார்) வாருமம்மாசிரோன்... மணியே - பரமஞாத
வான்களிரண்டுகண் ... ... மணியே
வாசம்பெருகும்பிர - காசநன்மையு மேலோர்
பேசுமறிவுற்றுநன் - னேசமெவைகளு மோர்
மங்களசுபகுண - இங்கிதமும்...பெரு
வங்கணமிகுமன - மங்கையனென வரு
மாசிலாத சிவை - யருளது...பெற்றேய்
ராஜபூசி......தம சாம்பிய... முற்றேய் - (வாருமம்) (௧)
(சிரோன்ம) வந்தெனையாபுண்யவான்களே - இருபத்துநான்
மனையெண்ணுங்கெண்யவான்களே

சந்ததமம்மையடி - சிந்தனை ... செய்யுநல்ல
சுந்தரபாக்யமுற்ற - சொந்தநயஞ் சேர்வல்ல
சுபகுணநயமுடன்-செபவிய ... லதுபெறு
தபவியல்மிகுநல - உபபல ... முடனுறு
சோர்விலாதபடி - யாகசி ... யோகே
சீரொலாம்வளருந் - திறல்பெறு...வோரே - (வந்தே) (உ)

(௩) எங்குவந்தாய்சொல்ல ... வேணுமே - வந்தகாரியம்
என்னவதைப்பன்னிற்... றேணுமே
மங்கைப்பருவத்தில்நீ - எங்களிடத் ... ... திருந்தால்
இங்குலகம்வசைச்சொல் - லெங்குஞ்சொல்லுந்தெரிந்தால்
சற்சனமுடையவர் - மெச்சிடுபுகழ் ... சிவ
உச்சிதமிலகிய... ...பக்ஷமுடைய... ...தவ
யோகமேவியவு - தாரநத் ... பெண்ணே
யேகஞாநநெறி -போகிய ... கண்ணே (எங்கு) (௩)

(௪) உங்களைத்தான்நம்பி ... வந்தனன்- சிலசந்தேகம்
உண்டதுகேட்கஇ......யைந்தனன்
எங்குஞ்சத்தியிருக்க -... ... இங்குலகுற்ற ... தேஅ
அங்கத்தாற்பெண்ணுமற் - றெங்கான்மாவுக்கே,.....தேது
பங்கியவுல ...கியல் தங்கியபொய்க் ... கட்டு
அங்ஙனமெனினெமக்- கெங்ஙனம்வருஞ் சொட்டு
பார்க்கில்நாமவுருச்-சாதிகள் பொய்யே
தீர்க்கபூரணசி- ...தாநந்த மெய்யே ... ...உங்களை(௪)

(௫) நல்லருசத்தியின் ... பேறு-கண்டவள்போலே
சொல்லவந்தாயிதைக்கூறு
வல்லவளிருப்பிட -மும்... நல்ல ...பீஜாக்ஷரமும்
சொல்லுமதின்சக்கரமும் - செல்லுங்கர்த்தர்நிரமும்
மற்றவள்செயலினி-லுற்றநு ... மிவளருள்
பெற்றவருயர்பதி-பெற்றதுமிவை... பொருள்
மறைகளோதிய-துறைப்படி ...... நாட்டு
அறிவினுளதின்-னனுபவங் ...... காட்டு - (நல்ல) (௫)

(௬) சத்தியெவ்விடத்தும்... விரிவாம் - கிரியாஞாநா
சத்தியிச்சாசத்தி .... பிரிவாம்
சுற்றுமாருதாரப்பீடம் - வெற்றியெழுத்தைந் தோங்காரம்
ஒத்தசுழிமுதல் வட்டம் - கர்த்தர்முன்மேனுன்முதலாம் நீரம்

பார்முதலியபல-சீர்களுமவள் ... செயல்
ஆருமைசெயவலர்-ஆரதிந் ... துளரியல்
பத்தர்செய்கைமிக - மிக்கது ... கண்டீர்
நித்யம்சித்திதத்வம் - நீர்பெற்றுக்...கொண்டீர் (சத்தியெ) (ஙு)

(சு) தத்துவத்தானெத்தனை ... ... வகை - அதையறியுஞ்
சாக்ஷியானுமொத்தனை ... ... தொகை

மித்தையானதேக ...மெது - சுத்தியானதேக மெது
பத்தியானதேக... ...மெது - முத்தியானதேக மெது
உத்தமரொவர்சொலு-மத்திமரொவர் ...தனும்
உத்தமரலரொவர் - இத்தனைவகை ... களும்
உள்ளதியாயப்படி-தெரிந்துணா ... தேனே
கள்ளமாயைதனைக் - களைந்தெறி... ... மானே (தத்துவந்) (எ)

(சி) தத்துவந்தான்...தொண்ணூற்றாறும் - அதையறியுஞ்
சாக்ஷியானுமொத்து... ..பேராம்

மித்தையானதூலந்...தேகம் - சுத்தியானதேகஞ்......சூக்ஷம்
பத்தியானதேகக்...காரணம் - முத்திமஹாகாரண மோக்ஷம்
உத்தமர்ஞானிகள் - மத்திமர்பத்தர்... தனும்
உத்தமரலர்கன்மர் - இத்தனைவகை ...களும்
உள்ளதாயப்போல்-தெரிந்ததையுரைத்தேன்
விள்ளுஞானகா- ... தனத்தினிலுரைத்...தேன் (தத்துவந்) (அ)

(சு) ஞானவான்கள்சாதன ....மேது - பத்தர்களானோர்
நத்துபதத்தைநீ... யோது
மோனப்பயிற்சியோகத் - தானவர்க்குள்ளதெது
தானதருமிகளுக் ... -கானபதவி ... யெது
சற்சனமெதுமதி - துற்சனமெது ... மறம்
உற்பனமெதுநிலை - நிற்பனவெது... தினம்
குருவசாஸ்திர . . -விசாரணை ... யுடையாய்
பருவமானதனைப்-பெடையெனு... ...நடையாய் (ஞான) (கூ)

(சி) ஞானவான்கள்சாதனம்...நாலாம் - பத்தர்கள்மறம்
நத்துஞ்சாரூபத்தின்மேலாம்

மோனப்பயிற்சியோகத் - தானவர்க்குறுஞ்...சித்தி
தானதருமிகளுக் ... -கானதுதேவ... முத்தி
சற்சனம்அறம்மதி - துற்சனமறம் ... மறம்
உற்பனம்பற்றுநிலை - நிற்பதுஅவருள்... தினம்

வியாபாரஞ்செய்காண்டம்.

சருவசாஸ்த்திர - விசாரணை ... ...யிதுவாம்
பருவமானநூலம்-படைத்தோர்க்குப்பொதுவாம்(ஞாந) (௰)

(க) நூலசிருஷ்டியாதினு ... னுண்டாம் - சராசரத்தின்
தோத்றமாவதெவ்வகை ...யுண்டாம்
காலங்கடந்ததற்கு- ... மேலெநடப்ப தென்ன
ஞாலம்பின்னுலேயெவ - னுலேயொடுக்க ... மன்ன
ஞாயமெலாம்வெகு - உபாயம ... தாயுணர்
இயாபகஞாநிக- ... ளாயுளபேர் ... புணர்
நடவடிக்கையைப் - பகுத்துநீ ... ...சொல்லாய்
மடமையற்றகுண - மாதெனு... ... ... நல்லாய்(நூல)()

(க) நூலம்பஞ்சபூதத்தி ... ...னுண்டாம் - சதுர்யோனியில்
தோற்றஞ்சராசரங்க... ...ளுண்டாம்
காலங்கடந்ததற்கு ... மேலேயுலக ..., மில்லை
ஞாலம்பின்னுலேபிரமத்- தாலேயொடுங்குந்தொல்லை
ஞாயமெலாம்வெகு-உபாயம.. தாபுணர்
இயாபகஞாநிக-ளாயுளபேர் ... ...புணர்
நடவடிக்கையநு- பவமத் ... ...விதமே
மடமையற்றகுண-வான்கட்குச் ... சதமே - (நூலம்)(௰௨)

(க) நன்றுநன்றுபெண்கள்... ...நாயகி - உனைப்போன்றபெண்
நாங்கள்கண்டதில்லை... ...தாயகி
அன்றுதொட்டின் றளவும் - நின்றதேசங்களின்,.. மேற்
சென்றுபார்த்ததினுன்போல்-என்றும்பார்த்திலம்மென்மேற்
சத்தியுமையவள்மேற் - பத்தியும்......உற்றுள
சித்தியுங்கைவல்ய - ...முத்தியும் பெற்றுள
தங்கைநின்னறிவி - னுக்கிணை.....யெவரோ
நங்கையாரினுனை - நிகர்பவ ... ருளரோ - (நன்று) (௰௩)

(சி) அண்ணன்மாரே - தந்தை... மார்களே - காமாக்ஷியம்மன்
அருள்படைத்த - பொருளி[illegible]ளே
புண்ணியருங்களைப்போலே - கண்ணகல்ஞாலத்தி[illegible] ..[illegible]யோகம்
பண்ணினோர்பார்வதியைக்- கண்ணிற்கண்டோ...விவேகட்
பெருமையுமுமையவ - ளருமையு.....மவளதி
உரிமையுநலமிகு - மொருமையுடன் ...உமதி
பேறுறுஞ்சநத - வளமைய[illegible] ... சொல்லீர்
வீறுறுங்குண - விவேங்கொள்... நல்லீர்(அண்ணன்)(௰௪)

(௯) நித்யகலியாண ... ... சுந்தரி - அவளெங்களை
மெய்த்துப்பெற்ற தாயாகுந்தெரி

சுத்தபரிபூரணி.........யாள் - அத்தன்கலைக்கோட்டராலே
-புத்ரயாகஞ்செய்வித்தெம்மை-யுற்பவிக்கச்செய்தப்பாலே

பெருமையுமாண்டரு - ளருமையு...... மரசரு
ளுரிமையுஞ்செயலுள - ஒருமையுமுடன் ...வரு

பேறெலாமவள்தன் - கிருபை......கடாக்ஷம்
கூறரும்பெருமை - கொடுத்தனள்...மோக்ஷம்(நித்திய)(௰௧)

(௰) நேற்றைக்கம்மைபூசை... வேட்டேன் - அக்காலத்தின்பற்
தோற்றுசோபனச்சொல்கேட்டேன்

சாத்திரம்படித்து...மென்ன - தோத்திரம்படித்து...மென்ன
வார்த்தைகள்படித்துமென்ன - கோத்திரம்பெருத்து மென்ன

தத்துவமெய்த்தவ - சித்தியில்லன்பலன்
உத்தமியுருதரி - ... சித்த... வரறிகிலன்

சருவபூரணியின்- ... தரிசனங் ... கண்டீர்
பெரியசெல்வமெனும்- பேரின்பங் கொண்டீர்(நேற்றை) ()

சிரோமணிக்கும் மவிலயரசனுக்குஞ்

சம்வாதம்.

(விருத்தம்.)

கட்சியின்திநடுநிலைகொள்தேசாதிபதிகளுடன்... ✡
கருணையின்பக் ... ... ✡
கட்சியிற்சிரோன்மணிவீற்றிடவதுகேட்டிவள்தந்தை ✠
கனலாயென்றன்றன் ... ... ✱
கட்சிபரோடென்புதல்வியுறவாடிஞளையச்சிர் ... ✡
கடிகதீரக் ... ... ✱
கட்சியளைபழைபுபென்த்துடித்திட்டான் அழைத்துகடு✡
கடுத்திட்டானை... ... ... (௰௪)

திபதை-இராகம்-ஆநந்தபைரவி-ஆதிதாளம்.

[கண்ணிகள்.]

(பல்லவி) அதிகதபத்தானுன்னைப் - புதல்வியாகப்பெற்று
அருமையாகவளர்த்தேன் ... ... என்மகளே-எனக்

சாகாதவனைக்கூடி - யாகாதவளைத்துதித்
தடிமைப்பட்டிடலாமோ ... ... என்மகளே

(சிரோ)தினக்காணவாசையால்-எனைப்பெற்றநாண்முதலாய்
நிரந்தரியென்னைக்காத்தாள் ... ...தந்தையரே - அந்த
நேயர்குணரூபவம்-நீயறியாதுசொல்லும்
நிர்மூடம்-ஆகாதையா ... ... தந்தையரே - (க)

(ம) மூடனென்றென்குலத்தைக் - கோடாலியாகவெட்ட
மூதேவிநீபிறந்தாய் ... ... என்மகளே-கெட்ட
மோசக்காரியுந்தந்த்ர - வாசகனாயும் எந்தன்
முன்னேநல்லவொன்றாய் ... ... என்மகளே

(சி) மோசக்காரிதுஷ்டர்க்கு - நேசக்காரிஇஷ்டர்க்கு
முக்கண்ணியானவெந்தாய் .. ... தந்தையரே - நல்ல
முத்திசித்திகளெல்லாஞ் - சுத்தவடியாருக்கு
முதன்மையாய்நகுவாளே ... ... தந்தையரே - (உ)

(ம) முத்தியருளுவாளென் - றெத்தியேசொல்லவந்தாய்
முக்கண்ணன்றன்னைவேண்டி ... ...என்மகளே - அவள்
முத்தியாம்வாமபாகம் - பெற்றசரித்திரத்தை
மூவுலகறியாதோ ... ...என்மகளே

(சி) உலகமறிந்திருக்கும்-நிலைசத்திசிவமொன்றென்று
உமக்குத்தான்தெரியாது ... ... தந்தையரே - அந்த
உமையினடியவர்மேல் - சுமையன்யாயஞ்சொல்வது
யோக்கியமல்லஐயா ... ... தந்தையரே - (ந)

(ம) அநியாயக்காரன்நானென் - றினியாரவர்களென்றும்
ஆதரணைசொல்லவந்தாய் ... ... என்மகளே-இப்போ
தவர்களையுமுன்னையுந் - தவராநிமிஷத்துக்குள்
அதலகுதலஞ்செய்வேன் ... ... என்மகளே.

(சி) அவர்க்கிளிமையிதல்ல - எவர்க்குநீதியிதென்று
யான்சொல்லவந்தேனையா ... தந்தையரே-சொன்னால்
ஆரவாரமாயுந்தன் - வீரமேசொல்லவந்தாய்
அதுகூடாதகாரியம் ... ... தந்தையரே(ச)(கஞ)

இதுவு மது

தந்தைசொல்லல்

கலிவிருத்தம்.

ஓதிமத்தெழிலோயவனுமமே ... ... *
லோதினுற்றகைவாட்கிவாயுன்னுவாய் ... *

மகள்சொல்லல்.

வேதவித்தகியின்னருள்கூடிருக்க் ... *
கேதுதிவிணைவந்திடுமெந்தையே ... (௫௭)

திபதை-இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

[கண்ணிகள்.]

(ம) மெத்தமெத்தவார்த்தைகளைக்-கற்றுக்கற்றுப்பேசுகிறாய் [தை
வெட்டிவெட்டித்துண்டுதுண்டாய்க்-கட்டியடிப்பேன் - இ
விட்டுவிட்டால்மெத்தவுன்னை - இட்டமகளென்றெடுத்துக்
கட்டியுச்சிமோந்துநல்ல - முத்தங்கொடுப்பேன் - (௧)

(மி) வெற்றிபற்றிப்பேசுகிறாய் - சத்தியத்தையசத்தியம்
வென்றுவிட்டாலென்னையுநீ - கொன்றுவிட்லாம் - இதை
விட்டுவிட்டுவேறேயெனக் - கிட்டதெய்வமுண்டென்றுநான்
திட்டமாய்க்கருவிலும்வாய் - விட்டுச்சொல்விடேன் - (௨)

(ம) கொல்லவல்லமையில்லையா - புல்லுமாத்திரநீயிப்போ [கே
கொஞ்சங்கொஞ்சவார்த்தைகற்றுப்-பிஞ்சிற்பழுத்தாய்-இவ்
கொத்திக்கொத்தித்துண்டுதுண்டாய்ச்-சித்ரவதைசெய்திடுவே
பெற்றமகளென்றுசற்று - வைத்துப்பார்க்கிறேன் [ன் (௩)

(மி) கல்லுகளைப்புல்லுகளால் - வெல்லலாமோகெல்லலாமோ
சொல்லும்பராசத்தியிட - வல்லமைகாணீர் - நீர்
கற்றறியுகம்விட்டாலுஞ்- சற்றுமெத்தன்மேலேறாது
கட்டளையிட்டேன்வீணுகக்-கெட்டுப்போகாதே (௪) (௫௯)

மலையரசன்சிரோன்மணியை-ஆக்கினைக் கனுப்பும்போது ஊருள்ளோர்புலம்பல்.

விருத்தம்.

மங்கைதனைக்கொலைஞர்கையிலரசனிந்து ... ... *
வதைத்துவரச்சொலக்கேட்டவன்மையாளர் ... *
சங்கையொடாவணத்தெருவிற்கொணரவாங்கு.........*
சந்தியுடன்கண்டவர்கள்கூடிநின்று ... ... *
பங்கயப்பெண்ணுமிவண்மேற்குற்றமென்னே ... *
பாலையர்காணுர்க்குடிகாள்பாரீர்வாரீர் ... ... *
புங்கமுறுமிளம்பருவமந்தோவென்னப் ... ... *
புலம்புவார்ஊரிலுள்ளோரலம்புவாரோ.........(௰௮)

திபதை- இராகம்- நீலாம்புரி- ஆதிதாளம்:

[கண்ணிகள்.]

ஐயோ ஐயோ-பாவிகளா-ஆரும்இதை-ப்பாரும் - இந்த
அநியாயத்தை-இனியென்னசொல்ல-லாகும்-மநம்-வேகும்
கையோமலர்-மெய்யோமயில்- காலோநல்வ- ரலோ- கென்னடைக்
கண்லோதுடை-தன்னுர்வாழை- கரும்பான்குழல்-கரும்பாம்-(௧)

நடையோபிடி - இடையோகொடி - நகையோமுல்லை- முகையோ
நனிமாமதி - தநுவாம்புரு - நாசிகுமிழ் - நேசி [முகம்
குடமோமுலை-சுடர்செய்நுதல்-கொம்போஅசை- வின்போ-இசை
குயிலோதொனி - மயிலோசாயல் - கோவையிதழ்ப்- பாவை(௨)

காதோவள்ளை - மீதாங்கண்டம்- கமுகாம்தேவ- அமுதாம்- காந்தள்க்
கரமேவிய- விரல்பயற்றின்- காயோசொல்ல- வாயோ
குமேதா என்ன வாதோ இந்தத்- துன்பம் இவளுக்- கின்பம்- சத்தி
தொண்டே செய்கற்-கன்டேகொல்லச்-சூழ்ச்சிஎன்ன-தாழ்ச்சி(௩)

முன்னுளிவள்- தன்னைவேண்டி- முடித்தான்தவம்-பிடித்தான்பெற்ற
மூத்தாரத்நக்- கொத்து இவளை- ஆட்டர்கொன்று- போட
இந்நாளிவள்- தன்மேல்வந்த- இடரோதுசெய்- படரோது- என்று
எங்கிமநத்- தாங்கிமிக்க- இளைவார்- கத்தி-யளைவார் (௪)

அழுவார்மேடு- விழுவார்எழுந்-தலறுவார்மெத்த-உலறுவார்-கைகை
அறைவார்முகத்- தறைவார்நெஞ்சி- லறைவார்தலையி- லறைவார்
எழுவார்தெய்வத்-தொழுவார்நைந்து-இடைவார்துய-ரடைவார்-நாடி
இருகைகுவித்-தரசற்குளா-இடுவார்கொலைஞராத்-தொடர்வார்()

நிலையில்நின்று கலைசோரவே-நெளிப்பார்கள்சத்-சளிப்பார்கள்-கண்
நெட்டுயிர்ப்பு- விட்டுக்கண்ணீர்- நீர்ச்சொரி- வாராய் [டு
தலையைவிரித்- துலைமுகாய்த்- தளர்வார்- திடம்- வளர்வார்- நிதம்
சத்திபதம் - பத்தியோர்க்குத்- தாழ்வேதென்ன- வாழ்வார் (௬) ()

முதலாவது - ஆக்கினை.

சிரோன்மணி ஆயுதங்களால்வதைக்கும் போது காமாக்ஷியைத்துதித்தல்.

விருத்தம்.

வல்லகொலைக்காரர்களுநர்புலம்பமன்னன் ... *
மகடனைக்கொல்லுங்களத்தில்வைத்தேமிக்க ... *
அல்லலுறச்சட்டியுருட்டிப்புரட்டி ... *
யவர்கள்கையிலுள்ளவாயுதங்களான ... *
வல்லயம்வேல்மழுவாழிவாள்கோடாலி... ... *
மருவுபிண்டிபாலமிவைதனைக்கொண்டு ...*
சில்லுறவெட்டிடவுமையையுள்ளத்துள்ளே ... *
தேரிவாளவளருளைநாடுவாளே ... (௰௧)

தரு- இராகம்- மணிரங்கு- அடதாளசாப்பு.

பல்லவி.

இந்தத்துன்பத்தைத்தான் - எந்தவிதஞ்சகிப்பேன் ... *
சந்திரபூரணியே ... ... *

அநுபல்லவி.

தந்தைவிதிவசத்தா - ......விந்தப்படிசெய்தாரோ... *
முந்தைவினையோ அல்லீ- தெந்தப்படியோகாணேன்(இந்தத்)

[சரணங்கள்.]

௧ சட்டிப்பாசத்தாற்சு - ருட்டிப்போட்டுவாளால்
வெட்டி ... நறுக்கிறுரே - தோள்கள்
தட்டிக்குறித்துக்கண்டுவெ - ருட்டித்தலையிற்றண்டால்
குட்டி ... நொறுக்கிறுரே
நெட்டிலைவேல்சூலம் - வட்டச்சக்கரங்குத்தத்
தெட்டிச் ... செறுக்கிறுரே- எனக்

இட்டதெய்வமேயுன்னை - விட்டுவிடேன்......வருவாய்
அட்டியன்றியேவந்து - சிட்டர்க்கருள் ... தருவாய்(இந்தத்)

௨, தருக்குமிருகண்டுசு-தருக்காய்நமனையரன்
உரத்துதைக்கத் ... தொடுத்தவா - மிக்கப்
பெருக்கநஞ்சினையுண்ட - அரற்கமுதெனக்கண்டத்
திருக்கஅன்று ... தடுத்தவா
முருக்கத்திரிபுரத்தை எரிக்கக்கனல்விழியைச்
சிரத்தையாகக் ... கொடுத்தவா - துவீட்ட
அரக்கர்குலங்களேவே - நறுக்குஞ்சத்திவேற்... கோவே
நெருக்கம் எனையடாமல் - இருக்கச்செய்தருள்...தேவே (இந்)

௩, பாலப்ப்ரகலாதனன் - ஸ்தூலத்திலரியநு
கூலனுயிருந் ... தானே - மடுவில்
ஓலமிட்டேயாதி - மூலமென்றகரிக்கு
மாலோடிவந் ... தானே
சாலத்திரௌபதிக்குக் - கோலத்துயில்களாய்க்கோ
பாலனுந்தந் ... தானே - அந்த
மாலுக்கிளையவளாம் - நீலநிறத் ...தாளே
ஏலத்தாமதம்வந்திப் - பாலகிதனை...யாளே (இந்தத்) (௰௮)

இரண்டாவது - ஆக்கினை

கழுவிற்போடும்போது துதித்தல்.

விருத்தம்.

புதல்விதுதித்திடமலராயுதங்களாகப் ... ... *
புன்கண்ணோடியிறைக்கோதக்கேட்டு ... *
விதிவழியேமதிகெட்டுவருவதோரா ... *
வேந்தனுயிர்க்கழுமாட்டிவிட்டுமென்னக் ...*
கதமுடையகொலைஞர்களவ்வாறேசெய்பக் ... *
கருணைபொழிமநோன்மணியைகருத்துட்கொண்டு *
மதிதவறுத்யாநாமிர்தத்தையுண்டு ... *
மதித்திட்டாளன்புடனேதுதித்திட்டாளே ...(உ௰)

தரு- இராகம்- ஆநந்தபைரவி- அடதாளசாப்பு.

பல்லவி.

காமாக்ஷியுமையவளே - கருணாநந்த ... *
மீனாக்ஷியெனையாளே ... ... *

அநுபல்லவி.

ஸ்ரீமாக்ஷிபரமவி - யாபகிக்யாபகி
மிளிருநீல... வொய்யாரரூபகி
ஒளிருமறிவின்.. ...மெய்யாம்- நிரூபக

[சரணங்கள்]

௧, சிறியவர்குறை ... வுகளைப்- பொறுத்தாளல்
பெரியவர்பெறுநற்கிளை
அறியாதபருவத்திற் - குறியாதுறுங்குற்றத்துக்
கன்னைசிறுவ ... தறிகி லேனினி
என்ன துயர்வரும்- அருணன்முன்பனி (காமாக்ஷி)

௨, எத்தனைஜெநநத்திலோ- தற்பாசம்வந்
தற்றுளதவைபற்றிலோம்
மெத்தப்புனல்தின்றுடல் - பற்றுதுவரலாமோ
மிதமாயுனதரு - ளமுதமினி ...விடு
பதுமபாதமே - கதிஇத்ததிகொடு (காமாக்ஷி)

௩, காதுகேட்க ... வில்லையோ - கிருபைசெய்யுங்
கண்ணிற்பார்க்க வில்லையோ
எதுன்னட்புநட்டாற்றிற் - சூதாய்க்கைவிடுகிறாய்
இரக்கமற்றகன் - னெஞ்ச ... வஞ்சகி
பெருக்கவின்பந்தந் - தாளும்...விஞ்சகி (காமாக்ஷி)(யிக்)

இதுவுமது.

கொச்சகம்.

மோனப்பிரணவமே-முற்பொருளேமுச்சுடரோ......*
ஆதமசிமந்திரமே-அஷிட்டாக்ஷரப்பொருளே.........*
வானமுதற்பூதவகை-மாயாவிசித்திரமே ... ... *
ஓநமசிவயப்பொருளே-ஓங்காரநாயகியே... ... ...(௫)

திபதை- இராகம்- நாட்டை- அடதாளசாப்பு.

[கண்ணிகள்.]

ஐயோபாவிதானென்ன-செய்வேன்பெண்ணாய்ப்பிறந்தும்
ஆருமற்றபரதேசிக்கு-நேரானேனே....... ... தெய்வமே

அறியாதபருவத்திற்- சிறியோர்செய்தபிழைக்கு
அன்னைகோபித்தடித்தல்-என்னநியாயந்........தெய்வமே
மெய்யோமெலிந்துநொந்து- பையவெம்பியேநைந்து
மெத்தவும்வருத்தப்பட-வைத்திடாதே... ... தெய்வமே
வேறேதிக்கேதுண்டம்மா- மாறுமாறுக்கொலைஞர்
வெட்டுப்போதாண்டருள்செய்-இட்டமான ... தெய்வமே-(௧)

கைகால்கயிற்றாற்கட்டி - நையவேதாக்கித்தூக்கிக்
கண்டகர்வதைக்கின்றார்கள்-தெண்டனிதெண்டன்தெய்வமே
கண்டம்வனாயில்கத்திவிட்டுக்-கொண்டுடலுள்ளலைக்கின்றார்
காத்துரக்ஷிக்கவேணும்-கீர்த்தியான... ... தெய்வமே
வெய்யிற்புழுப்போற்பூனை - கையிற்கிளிபோலிவர்
வெதுப்பிவெதுப்பித்வைக்க- விதிர்ப்புற்றேனே...தெய்வமே
வெட்டுக்கட்டையைப்போல-மட்டிக்கொலைஞர்கையால்
வீழுஞ்சமயத்தின்முன்-ஆளுங்காளி... ... தெய்வமே-(௨)

அன்றைறவர்பத்தினியைத்- துன்றுநூற்றொருவர்கள்
ஆடையுரியக்கிருஷ்ணன்-தேடியீந்தான்... ... தெய்வமே
அம்மாபிரகலாதனைச்-சிம்மாவதாரங்கொண்டான்
ஆண்டானெனைநீயாள-வேண்டாவோஓ ... ...தெய்வமே
இன்றைக்காளாவிட்டால்மற் - றென்றைக்காளுவதம்மா
இப்படியுஞ்சொன்னசொல்-தப்பலாமோ... தெய்வமே
இரக்கமிரக்கமில்லா - மநமென்னிரும்பாகல்லா
இப்படிச்செய்வதுனக்கு-ஒப்பிதந்தாரோ... தெய்வமே-(௩)

என்மேலென்னவர்மமோ-முன்னேசெய்தகர்மமோ
ஈதோவென்விதியுந்தன்-சூதோ ஓகோ... ... தெய்வமே
ஏழைசிறுநாயினேன் - பாழுடல்கொண்டதுயர்
என்னசொல்வேனென்னசொல்வேன்-உன்னதின்பமேதெய்வமே
பின்னேவருங்காரியம் - முன்னேதெரிந்திருந்தும்
பிள்ளைக்கேன்சொல்லவில்லை-கள்ளிநீயே... ...தெய்வமே
பேசவேணுமென்றாலும் - மோசடியெல்லாஞ்சொன்னால்
பெருக்கவுலகமெல்லாஞ்-சிரிக்குமன்றோ... ...தெய்வமே-(௪)

காளியாம்ரணபத்ர - காளியோம்பிரணவரூபி
காமாக்ஷிபரதேவி-மீனாக்ஷிஓ .. ..தெய்வமே
கங்காளிருத்ரசத்தி-நங்மங்கிங்விஞ்சைக்குத்தி
கபடஞ்செய்துவிட்டுநீ-யெவிடம்போனாய்... தெய்வமே
ஆட்கொண்டடியர்களை-மீக்கொண்டிரக்ஷித்தருளும்
அம்மாஅம்மாதயைசெய் - இம்மாத்ரம்நீ தெய்வமே

ஆதிபரமேஸ்வரி-சோதியானகாமாக்ஷி
ஆளவிதுவேதல்ல-வேளைவாஓ ... ...தெய்வமே (ரு)(உக)

மூன்றாவது- ஆக்கினை.

வாட்கூண்டிற்போட்டுருட்டுகையில்

தோத்திரம்.

(விருத்தம்.)

உஊசாினூந்தென்றலுற்றமலர்க்கானத்தி ... ... *
துலவுதல்மொப்பவருளமுதமுண்டு ... ... *
நாசமிலாச்சிரோன்மணியைக்கண்டு துட்டர் ... ...*
நடுநடுங்கிப்பிறர்கலங்கிராஜர்முன்போய் ... *
ஓசையுடன்சொலக்கட்டிவாட்கூண்டிட்டே ... ...*
யுருட்டுமெனக்கேட்டவுடன்கொலைஞராங்கு ... ...*
பூசலுடனிட்டுருட்டக்கௌரியாதம் ... ... *
பூசிப்பாளிருதயத்துணைசிப்பாளே ... ...(உக)

தரு- இராகம் - எதுகுலகாம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

இன்னமென்னென்னசெய்புமோ - என்தலைவிதி
இன்னமென்னென்னசெய்புமோ

அநுபல்லவி:

முன்னேமல்லர்களாலே - சின்னபின்னமாக்கொய்தும்
பின்னேயுயிர்க்கழுவில் - உன்னிப்போட்டிடச்செய்தும்
மூட்டிப்பழவினையை - நாட்டியல்லலாய்மிக
வாட்டிபுதிசதுயர் - பூட்டியலைத்த......தல்லால் - (இன்ன)

[சரணங்கள்]

க, பிருகம்பக்ஷியுருஞ்.........செத்து - ஜலசரங்கள்
விருக்ஷங்களாயும் ... பிறந்து
சருவயோனியுங் ... ... கடந்து - நாஜநதந்
துருவெனப்பிறந்து ... வந்து
குருவேமைச்செவிடுனம் - தருதவில்உடல் ...கொண்டும்
பெருமூம்விவேகாமிர்தம்-பருகாச்சித்தின்பமுண்டும்

கோலவுலகச்செயல் - சாலநிறைத்துவெகு
சாலங்கடத்தியிந்த்ர-ஜாலஞ்செய்ததுமல்லால் - (இன்ன)

உ, பொய்யைமெய்யாகக்......... காட்டியும் - நிச்சயமான
மெய்யைப்பொய்யாக... ...... நாட்டியும்
மையல்மிகவும் ... ... பூட்டியும் - அநித்யமான
செய்கையநேக ... ... மூட்டியும்
வையகத்தின்பநீதி - ... செய்யாமல் மருட்டியும்
நொய்யகாமக்குரோதச் - செய்கையால்வெருட்டியும்

நோய்பகையநீதங்கள் - தீயநடக்கைமுத
லாயதுறும்படியு-பாயஞ்செய்ததுமல்லால் - (இன்ன)

௩, இன்பம்வைத்தது ...போச்சே - என்றந்தையென்மேல்
வன்புகொண்டிட்டான் ... எச்சே
அன்பாய்நான்சொன்ன பேச்சே - கேளாமலென்னை
என்பெண்பாய்வெட்ட...லாச்சே
அன்பர்க்கருள்செய்யுமை - யின்பாதம்பூசி... யாமல்
துன்பத்தைவிட்டறிஞர் - என்போனைநேசி...யாமல்

அளக்கறியாத்துயரை.........விளக்கஞ்செய்து மிவரால்
துளக்கஞ்செய்ததேயெந்தன் - இளக்காரங்கண்டுகொண்டு

இதுவுமது - கொச்சகம்.

மூலமுதலாறுதலமோனவெளியானவழிப் ... *
பாலமயிர்ப்பாலநடுப்பாகம்வரும்யோகியளே ... *
காலவகைநாலுபதகாரணமேகாரியமே ... *
வாலசுபசோமசுடர்மாமணியேயாதியளே ... (உ)

திபதை - இராகம்- முகாரி- அடதாளசாப்பு.

[கண்ணிகள்.]

என்னசெய்குவேன் - ஏது ... செய்வேனோ - ஓம்பிரணவிநம
இங்ஙனிசெய்தா - லெங்ங ... னுய்வேனோ
முன்னேகர்மங்க - ளென்ன ... செய்தேனோ - ஓம்பிரணவிநம
மூத்தர்சித்தமை - மெத்த ... வைதேனோ (௧)
இடம்நியமத்தில் - அயர்வு ... பட்டேனோ - ஓம்பிரணவிநம
இருஞ்செயதபந் - திரிந்து தொட்டேனோ

தயவன்பிரக்கங்கள் - அயலில் ... நட்டேனே - ஓம்பிரணவிநம
சத்ய புத்திது - ரத்தி... ...விட்டேனே (௨)

கங்குகங்காய்வாள் - தக்கிப் ... பாயவோ - ஓம்பிரணவிநம
களைத்துச்சிவனைந் - திளைத்து... மாயவோ
அங்கங்களெங்கும் - பொங்கித் ... ...தீயவோ - ஓம்பிரணவிநம
ஆறுபோல்ரத்தம் - மீறிச்...... சாயவோ (௩)

சற்றுமோய்வின்றிச் - சுற்றி...... ... யாடுதே - ஓம்பிரணவிநம
தாபமாய் மெத்தச் - சோப...... மூடுதே
இற்றகண்டிம்போல் - வற்றி......... வாடுதே - ஓம்பிரணவிநம
எக்கமாத்துயர்க் - கூக்கங்... ... கூடுதே (௪)

பாலகிமேலிக் - கோலமே ... ... தம்மா - ஓம்பிரணவிநம
பார்த்தால் வேடிக்கை - தீர்ப்பதா...ரம்மா
நீலிவஞ்சகி - மாலினி.....................சும்மா - ஓம்பிரணவிநம
நித்தமுஞ்செய்யச் - சித்தமோ......அம்மா (௫)

ஆதிநாரணி - வேத ... ... பாரணி - ஓம்பிரணவிநம
ஆத்மரூபிபிரம் - மாத்ம... ... பூரணி
சோதியாமலை - மாதே ... ... யாரணி - ஓம்பிரணவிநம
சுகசுயாநந்த - அகில... ... ... காரணி (௬)

இந்தவேளையில் - வந்து ... ...காத்திடாய் - ஓம்பிரணவிநம
எந்தன்மேல்வருந் - தொந்தந்...தீர்த்திடாய்
முத்தச்செய்கன்மஞ் - சிந்தப்...பேர்த்திடாய் - ஓம்பிரணவிநம
முழுதுமின்பநல்- வழியிற்... சேர்த்திடாய் (௭)

அடியன் தன்பில்நீ - யுடன்பட்... டில்லையோ - ஓம்பிரணவிநம
யானிவெவ்வேறு - தானே... சொல்லையோ
ஆடிகேளுன்னருட்- குடிநா ... னல்லையோ - ஓம்பிரணவிநம
இதுவும்விடேல் - ஹானி... கெல்லையோ (௮)

என்னைப்போல்தீயோர்-கன்னிதா...... ளுச்சே - ஓம்பிரணவிநம
எனினுமுன்மறந் - கனியாமற்... போச்சே
பின்னம்பேய்பெண்ணுக்-குன்னிச்செயாதாச்சே - ஓம்பிரணவிநீயும்
பெண்ணையுத்தமை - பண்ணுதென் எச்சே (௯)

உன்னைப்போற்பாவி - யிந்நிலத்......தேது - ஓம்பிரணவிபிள்ளை
யுடயாவரடியென் - பதுநீவே.......றேது
அன்னையென்அன்னைச் - சொல்னதாரோது-ஓம்பிரணவியென்றால்

கொலையாளிகள் நடந்தசங்கதிசொல்லக் கேட்டுச்சேரன் கோபித்தல்.

விருத்தம்.

மாதுசிரோன்மணியிவணைந் துதிப்பக்கத்தி ... ... *
வைத்தகூண்டலர்மஞ்சமாகவன்றேள் ... *
தீதொன்றுமிலதிருப்பக்கொலைஞர்கண்டு ... ... *
திடுக்கிட்டுச்செயலற்றுச்சேரன்பாற்போய் ... *
ஓதுவதைக்கேட்டகங்கொண்டிடிபோற்சட்தித் ... *
துளமழன்றுதழலெழநின்றூர்த்தேயோங்கித்......*
தீதுறுமக்கனகனைப்போற்கொதித்துச்சிந்தை ... *
சிறுவான்மந்த்ரிகள்பாற்கூறுவானே ... (௨௨)

சேரன்மந்திராலோசனை செய்தல்.

சந்தவிருத்தம்.

நொடியதனிலுலகுபொடிநூறிவிடுகொலைஞர் ... *
நொய்தாகவிவ்வினைவதைசெய்யாததென்றே ... *
படிமுழுதுமொருகுடைநிழற்கீழ்புரக்கும் ... ...*
பலமபலமாயினெதிர்பகைஞர்நகையாரோ ......*
நெடியவிதிப்படியாகவேஇந்தமாயம் ... *
நேரும்வகையோகொலைக்காரர்வஞ்சகமோ........*
கடிகையினிதன்செயலுணர்ந்துரையிலென்றே ... ...*
காலமுணர்மந்த்ரிகளுக்கோலமொழிதறைவான்(௨௩)

தரு-இராகம்-உசேனி-அடதாளசாப்பு.

பல்லவி.

மந்திரிமாரே -இதற்கொரு - தந்த்ரஞ்சொல்வீரே...*

அநுபல்லவி.

எந்தவிதத்தினில் - இந்தப்பெண்ணைக்கொல்லும்.....*
மந்திரமேததைச் - சிந்தையுளாராய்ந்து... ... ...*
எந்தனுக்கிக்கணம்- இந்தவிதமென்று ... *
ஈட்டுங்கள்- நின்றுபா - ராட்டுங்கள்-இவளுயிர் ... *

சரணங்கள்.

க, இத்தனை.....காலமும் - எத்தனைபேர்களைச்
சற்றும்எண்ணு..மலே - வெற்றிகொண்டிருந்தும்
பெற்றபிள்ளையினுலே - மெத்தஇழிவடைந்தேன்
எண்ணுங்கள் - யூகம்..... பண்ணுங்கள்-பண்ணி
நண்ணுங்கள் - இவனுயி - ருண்ணுங்கள் - கற்ற (மந்)

உ, இங்கிவர்வெட்டியும் - வெங்கழு.....மாட்டியும்
தங்குகத்திக்கூண்டில்- பங்கமா.....யுருட்டியும்
அங்கப்பழுதில்லாமல்-மங்கையிருக்கிறதை
அறியுங் கள் - என்னமோ-குறியுங் கள்- இவனை
எறியுங் கள் - என்னே - டறையுங்கள் - என்றன் (மந்)

௩, ஆனுலுமென்னென்ன - போனுலுஞ்சமர்க்களம்
ஆனுலும்படையெல்லாம்-போனுலும்விடுவேனே
ஏனுலிவனிவட்-கானேர்களையும்விட்டால்
ஏச் சாச்சே- ஏசும் - பேச்சாச்சே-பெரு
மூச்சாச்சே-இப்படி-யாச்சாச்சே-தெரிவீர் (மந்தி) (உ௩)

மந்திரிகள் - அரசனுக்கு அடியவர்பெருமையுரைத்தல்.

சந்தவிருத்தம்.

வரையரையனிஃதுரையவறிவுடையமைச்சர் ... ...*
மாயிலமாயிஜகதாயியருளாயி ... *
பரைபுராந்தகிகன்மஜென்மமதறுக்கும் ... ... *
பரையினருசெய்கையலதிதுவும்வேறுளதோ... *
புரையிருதவத்தடியர்திறமையுணர்வாரார் ... *
பூபனேயவர்களொருசாபமதுரைத்தால்... ... *
உரைசெய்திரிமூர்த்திகளுநீக்குகிறதரிதாம் ... ... *
உமையடியர்தன்மகிமைமகிமையெனலாமால் (உ௪)

மந்திரிகள்-சிரோன்மணிக்குப் புத்திகூறுதல்.

விருத்தம்.

மலையரசற்கிஃதறிவித்தமைச்சரிம்மாதினைக்கொல்ல... ✻
　மாட்டோமிந்தக் ... ... ✻
கலகமதுவிளைவித்தகச்சியர்மேற்சமர்பொருதக் ...✻
　கடவோமீங்கிச் ... ... ✻
இலைநுதலாள்தனைத்தருவித்தியாங்கள்புத்திசொல்வமெனச்
　செப்பிவேதப் ... ... ✻
புலம்பயிலுஞ்சிரோன்மணிக்குப்பேதிப்பார்பேதத்தைப்
　போதிப்பாரோ ... ... (உரு)

திபதை- இராகம்- காம்போதி- ஆதிதாளம்.

[கண்ணிகள்]

மந்)அன்னநடைமின்னலிடை - வன்னப்பெடையென்னவந்த
　அறிவிற்சிறந்தநல்ல ... சிரோன்மணியே - நாங்கள்
சொன்னதுகேட்டதுபோல்நீ - யுன்னிநடக்கவேணும்
　தூயவிவேகியான ... ...சிரோன்மணியே (க)

(சி) சுற்றவிதக்ஷணத்தால் - முற்றுந்திரிகாலங்கள்
　கண்டுதெளிந்துகொண்ட... மந்த்ரிகளே - நல்ல
பெற்றியுரைத்தாலதை - யுற்றுக்கேட்கவேண்டிய
　பிரயோசனந்தான்கண்டீர்... மந்த்ரிகளே (உ)

(மந்)நீகற்றசாஸ்திரத்தில் - தாய்தந்தைவார்த்தைதள்ளும்
　நியமமிருக்கிறதோ ... சிரோன்மணியே - மிக்கத்
தியப்பகையைநட்ப - தாய்க்கொண்டிருக்கிறதைத்
　தெரியச்சொல்லவேணுமே சிரோன்மணியே (௩)

(சி) தந்தைதாய்தமர்சொந்த - மைந்தரிவைகளெல்லாஞ்
　சந்தையிற்கூட்டமாச்சே... மந்த்ரிகளே - ஊழ்
தந்தமித்ருசத்ருவால் - வந்தசுகதுக்கங்கள்
　சகலமுமொன்றாப்போச்சேமந்த்ரிகளே (௪)

(மந்)ஒன்றென்றுரைத்தும்பின்னே - நன்றுதீதென்றும்வகுத்
　அணைரக்காரணமேதோ ... சிரோன்மணியே - நாங்கள்

இன்றுனக்குச்சொல்வதும் - ஒன்றுச்சுதாகையாலே
இதுதனையும்உட்கொள்வாய் சிரோன்மணியே (௫)

(சி) இதுகொள்ளென்றுசுட்டினுல் - அதுகொள்ளவேண்டாமென்
எதிர்த்தங்க்ரகிப்பதால்... மந்திரிகளே - எனக் [ன்னும்
கெதுவெக்காலம்பொருந்தும் - அதுசெய்வேனல்லால்வேறு
இல்லைச்செய்யுவதற்கு... ...மந்திரிகளே (௬)

(மந்)இல்லையென்றுற்பெரியோர் - சொல்லும்வார்த்தைதடுப்ப
தென்னகிரமத்தாலம்மா ... ...சிரோன்மணியே - கல்வி
எல்லாந்தெரிந்துங்காடிப் - பொல்லாப்பானையிலேகை
யிட்டாற்போல்விட்டுச்சொன்னுய்சிரோன்மணியே (௭)

(சி) நிறைத்தவயதினுலும் - குறித்தசெல்வத்தினுலும்
நிறைந்தாற்பெரியோரல்லர்...மந்திரிகளே - பற்றை
வேறுக்குஞ்சித்தர்களாகிப் - பொறுத்துத்தன்னையறிந்த
மேலோர்சொல்தட்டக்கூடா மந்திரிகளே (௮)

(மந்)தேந்திப்போதித்துத்தின்மை - மாற்றத்தகுந்ததிவ்ய
சீலர்பெரியோரன்றே ... ...சிரோன்மணியே - புத்தி
சாத்விகங்கற்றபுரு - ஷோத்தமர்பெரியோராய்ச்
சாற்றக்கூடாதோசொல்வாய் சிரோன்மணியே (௯)

(சி) கற்றறிந்தோர்போதனைச்- சொற்றெரிந்தோர்தற்காலம்
கண்டுரைப்பார்களையா ... மந்திரிகளே - ஞாநம்
உற்றமகத்துமாக்கள் - பெற்றசரித்ரமெல்லாம்
உணர்ந்துரைப்பார்தெரிவீர்மந்திரிகளே (௰)

(மந்)என்னசித்திரமெல்லாம் - பன்னிச்சொல்லுகிறுயி
தெல்லாநல்லதல்லவே... ... சிரோன்மணியே-இப்போ
தின்னமாகவேயுந்தை - பின்னஞ்செய்யோதில்ஞாநம்
செப்பிப்பிழைப்பாய்சொன்னேம் சிரோன்மணியே (௰௧)

(சி) காயநீர்க்குமிழிபோ - லாயதிதனைப்பேணக்
கருத்தெனக்குண்டாகாது... மந்திரிகளே-அருள்
மேயவிதனைக்காக்கத்- தாயிருக்கிறதினுல்
வேறுபயமில்லைக்காண்... மந்திரிகளே (௰௨)(௨௪)

கச்சியாருக்கும்-மலையரசனுக்கும் யுத்தம்.

விருத்தம்.

மந்த்ரிகளீதோர்ந்துமன்னுமகளைக்கொன்றால் ... *
மாற்றலரஞ்சிடுவாரோவஞ்சாரீங்கே ... *
வந்தவரோடெதிர்த்துவென்றுவாகைசூடி ... *
மற்றுளகாரியஞ்செயலாமென்னக்கேட்டோன் ... *
மூந்துசதுரங்கமுடன்களத்துக்குற்று ... ...*
முனிவுடனென்னூர்க்கறிவித்தணிபிரித்தான் ... *
அந்தரியினடியருஞ்சேனைகளோடாங்கே ... *
யடுத்திட்டார்சண்டைசெய்யத்தொடுத்திட்டாரோ (உகூ)

தரு- இராகம்- பந்துவராளி- ஆதிதாளம்.

பல்லவி.

மலையரசன்சண்டையைக்கேளும் - தேசாதிபர்செய்த *
மலையரசன்சண்டையைக்கேளும் ... ...*

அநுபல்லவி.

மலையரசன்சண்டைகேளும் - அலைகடலுலகில்ஆளும் ... ... *
மன்னர்களைவரச்சொல்லத் - தன்னதுகையோலைசெல்ல ... *
மகிழ்ந்தரசர்கள்கூடிப் - புகழ்ந்துவீரியந்தேடி ... ...*
மதகரிபரிகளும் - ரதம்நிறைபடைகளும் ... *
மலிநுபெருங்கடல்போல,ச் ஆ..அவரிவர ஆலகால ... *
மடைவிடங்களைக்கக்கும் - படைஞர்களெண்டிக்குக்கும் ... *
மற்பொருதும்வீரர்சூரர் - விற்பொருதந்தீரர்வீரர் ... *
மண்டலமெங்கும்அளாவி - கண்டகர்களைத்துழாவி ... *
வாட்டவும் - வர்ம்மமிக - மூட்டவும்-தன்புகழை- ... *
நாட்டவும்- ஒன்னலரை-யோட்டவுங்-கூட்டிவந்த ... ... (மலை)

[சரணங்கள்]

க, ஆறுவரசரக் ... ... காரீ - ராறு வரசரக் ... காரர்
ஐந்துவரசரக் ... ... காரீ - ரைந்துவரசரக் ... காரர்
ஆதிரட்டிக்கத்திக் ... காரீ - ராதிட்டிக்கத்திக் ...காரர்
அறுமூன்றுமழுக் ... காரீ - ரறுமூன்றுமழுக்... காரர்
ஆறுநான்குவேற்... ...காரீ - ராறுநான்குவேற் ...காரர்

ஆறைந்தகத்திக் ... காரீ - ராறைந்தகத்திக் ...காரர்
ஆறுபத்திட்டிக்... ... காரீ - ரீராறுபத்திட்டிக்... காரர்

ஆகவெகு துணைமன்னர்- வேகமாகக்கூடிக் ... ...கூடி
ஏகமாய்த்திரண்டேயோடி- மேகம்போற்கெர்ச்சித்துநாடி
அரட்டர்வருவோ ...ரதந்தம் - பூமியைக்கூடப்
புரட்டர்வருவோ ...ரதந்தம் - அவரவர்கள்
ஆளிசிங்கமோடு...... ...நல்ல - காளைகண்முதுகின் மீதும்
மீளும்ரவிப்பரி ....வேகம் - நாளும்செய்குதிரை மீதும்
ஆவெனவருவோ ...ரதந்தம் - எதிர்த்தோருயிர்
தாவெனவருவோ ...ரதந்தம் - சிறப்பாகவே
யானைமேலும் ஒட்டைமேலுஞ் - சேனையோடிரதமேலும்
ஏனையகோவேறு...... மேலும் - மோனையாமகிடமேலும்
அக்ரமித்துவருவோ ரதந்தம் - பல்லைக்கடித்து
உக்ரமித்துவருவோ ரதந்தம் - வீரியம்பேசி

ஆடிவருவார்.....................சிலர் - தேடிவருவார்......சிலர்
கூடிவருவார்.. ... ...,.........சிலர் - நீடிவரு வார்,.....சிலர்
அடுக்காய்வருவார்சில ... பேர் - எங்கேயென்று
மிடுக்காய்வருவார்சில ... பேர் - இடும்புபேசி
அணிந்துவருவார் ... . சிலர் - துணிந்துவருவார் சிலர்
இணைந்துவருவார் ... .சிலர் - திணிந்துவருவார்...சிலர்
அந்தகன்போல்வருவார்...சிலர் - இடியிடித்து
மந்தரம்போல்வருவார் ... சிலர் - மேகங்கள்போலே
அசைந்துவரு... ரதங்கள் - இசைந்துவரு...மிரதங்கள்
ஒசித்துவரு.......... மிரதங்கள - மிசைந்துவரு...மிரதங்கள்
அமர்ந்துவருஞ்சில...ரதங்கள் - வீரியர்களைச்
சுமந்துவருஞ்சில ... ரதங்கள் - திடுதிடென்ன
அதிர்ந்துவரு .... மிரதங்கள் - பொதிந்துவரு மிரதங்கள்
முதிர்ந்துவரு..........மிரதங்கள் - எதிர்ந்துவரு ... மிரதங்கள்
அண்டத்தைத்தாவு மிரதங்கள் - பெரியநவ
கண்டத்தைமேவும்...ரதங்கள் - மலைகள்போல
ஆங்குவரும்......... ...யானைகள் - ஓங்கிவரும்... யானைகள்
வீங்கிவரும்.......... யானைகள் - தாங்கிவரும்...யானைகள்
அதிர்ந்துவரும்யானைகள்சில -எங்கெங்குமோடி
எதிர்த்துவரும்யானைகள்சில- கைகளைத்தூக்கி
ஆறிவரும்..............யானைகள் - மீறிவரும் யானைகள்
சீறிவரும்............ யானைகள் - சீறிவரும் யானைகள்

அட்டகாசஞ்செய்யுஞ்...சிலது - ஒன்றோடொன்றாக
இட்டநேசஞ்செய்யுஞ் சிலது - சூறாவளிபோல்
ஆட்டிவரும்பரி............களும் - கூட்டிவரும்பரி களும்
ஈட்டிவரும்பரி.......... களும் - ஓட்டிவரும்பரி களும்
அலைகடலைத்தாண்டுஞ் .. ..சிலது - திரணமாக
மலைகள்மேலுந்தாண்டுஞ் சிலது - திக்குகள்தாவி
ஆய்ந்துவரும்பரி...களும் - பாய்ந்துவரும்பரி...... களும்
காய்ந்துவரும்பரி களும் - தீய்ந்துவரும்பரி ...... களும்
அருக்கன்தேர்பாயுஞ்சிலது - பஞ்சகதியால்
செருக்கியேஒயுஞ்... சிலது - இந்தப்படியாய்
ஆனைபரியிரதமும்..................சேனைபடைமன்னர் களின்
தானைகளைத்திரட்டிக்கொண் ......டேனொரு முன்னரிலோடி
ஆனைமுன்னர்முயல்போலும் - ... பதிவிருந்த
பூனைமுன்னரெலி...போலும் - ... சுற்றிவளைய
ஆறுநான்குமனையோரும் ....சிறியுக்ரமாக... நின்று
மீறியபூபால ... ரோடும் ....எதியோரதங்களின்மேல்
அந்தரியைத்தோத்தரித்து - ... ...பிரணவத்தின்
சுந்தரியைநமஸ்கரித்து ....அவரவர்கள்
ஆனைமுதலானபல - ... .சேனைகொடுபேரணி.....யாய்
மோனையானவாளிகளோ - ...டேனைய ... ஆயுதங்கள்கொண்
டனைவோருமாகக்கூடி - ...பகைஞர்தன்மேல்
முனையாகநின்றேநாடி - எதிர்த்துச்சண்டை
யாடவும்-கச்சியார்சரம்-போடவும்... மலைமன்படை
ஓடவும்-ஒடிக்களைத்து- வாடவும்-அங்கோடிவந்த(மலையரசன்)

உ, வளைத்துவரு... ...வார்சிலர் - கிளைத்துவரு ......வார்சிலர்
மண்டிவரு ... ...வார்சிலர் - மிண்டி வரு ...... வார்சிலர்
வாரிவரு... ... ...வார்சிலர் - சேரி...வரு ....வார்சிலர்
மதித்துவரு ... ...வார்சிலர் - குதித்துவரு..... ... வார்சிலர்
வாட்டிவரு ... ...வார்சிலர் - ஈட்டிவரு ... ...வார்சிலர்
வதைவதை யென்பார்சிலர் - சிதைசிதையென் ... பார்சிலர்
வாட்டுவாட்டுமென் பார்சிலர்- மாட்டுமாட்டுமென்பார்சிலர்
மடிமடியென் ...பார்சிலர் - பிடிபிடியென் ...பார்சிலர்

வாரிதியிரைச்சலைப் போல் - போரிடுவோமென்றுகற்ப
மாரியின்ப்ரவாகம்...போலக் - கூருளபாணங்கள்... சாவி
வந்திவரைவளைத்துக்கொண்டார் - வளைத்ததனைச்
சுந்தரியினடியர் ... கண்டார் - கண்டவுடனே

வச்சிரங்கோடாலிவேலும்-மெச்சும்முத் ... தண்டுசூலம்
நச்சுலக்கைபிண்டிபாலம்-மிச்சவில்கொண்டுமென் ...மேலும்
வயிரப்படைகள் ... தாங்கி - சத்துருக்கள்செய்
செயிர்கள்கெட்டிட வோங்கி - வலியுடைய
வாயுபாணம்வருணபாணம் - தேயுபாணம்அருணபாணம்
மாயபாணம்மந்த்ரபாணம் - தீயபாணம்சந்த்ர பாணம்
மாநாகமோக ... பாணம் - பிரம்மாஸ்திரம்
ஞானபாணம்யோகபாணம் - இன்னமும்உள்ள
வாளிகளைக்கொண்டுமுன்னில் - ஆளியைப்போல்வந்துநின்ற
வேலைகண்டுதநுசாஸ்திரம் ... நீளவுங்கற்றகச்சியார்
மல்லாடியுத்தம் பொருதார் - எவ்வாறென்னிற்
சொல்லாலேசொல்லவரிதார் - பகைஞர்கொண்ட
மணிக்குடைமுத்துக்குடை - இணைக்குடைபச்சைக்குடை
துணிக்குடை-வட்டக்குடை - திணிப்புலியாளிசிங்கம்
வட்டமிடுங்கருடக்கொடி - புற்றைப்புசித்து
நட்டமிடுங்கரடிக்கொடி - விருதுகளெல்லாம்
வரிசிலைகள்தொடுத்து - சரக்கூடத்தைப்படுத்தி
சரிசரியாய்விடுத்து.....திரளுள்ளோர்களையெல்லாம்
மன்னன்பிள்ளவன் அறுத்தான்-உதவியாகப்
பின்னேவரியுஞ்செறுத்தான்-சுப்ரீதீகரன்
வாரணக்குழாங்களை - தோரணமாகக்கிழித்து
காரணமாமிரதங்கள் - சீரணமாய்ப்போம்படி
வாரிவாரியிறைத் தானே- ஜெயகரனுந்
தாித்தாிக்குறைத்தானே-சாந்தவர்த்தனன்
மாப்படையின்வீரனையும்- கூப்புசரச்சூரனையும்
தாப்புளமல்யுத்...தனையும்- வாய்ப்புடன்சில்லாநொறுக்கி
வாரிதியில்வீசினனே-நந்தனுநின்று
வீரமதுபேசினனே- திருக்கோட்டையர் .
மந்திரஞ்சேர்பாணங்களும் ......அந்தமில்ஆயுதங்களும்
முந்துமேகத்திடியைப்போல் வந்தெதிரொதிர்தொட்டிட
வாங்களைறுத்த ... விடுத்தான்-மற்றொருபுடை
பராக்ரமன்சரங்கள்தொடுத்தான்-தொடுக்கக்கோட்டை
மந்திரிகள்தளர்த்தர் - பந்தயங்கள்கூறியிகச்
சிந்துவடவாக்கினிபோல்-முந்துகடுகணையேவ
வச்ரஹாரன்நாபனும்... ...கொய்தார் - அமரலோலர்
மெச்சிபேசங்கத்தொனி ... செய்தார் - இதனைக்கண்டு
மலையரசன்கோபமாகிச் - சிலையினில்வல்லானையேவ

வரிசிலைவாளிதூற்றினர்............- தேசாதிபரை
எரிசெய்துமேகமேற்றினர் ......- ஏற்றியவுடன்
வல்லசரமழை...... தூவி- எல்லையில்சரக்கூடங்கள்
மெல்லக்கட்டிக்கீழிறங்கா- வல்லமையைச்செய்துவைத்து
வாகைமாலைசூடிக்கொண்டார்- இதைக்கடிகன்
யோகஜெயசிங்கனுங்கண்டார்- சிலைவளைத்து
வன்னிபாணங்களை... விட்டுச்- சின்னபின்னமாகக்கொய்து
பன்னுசூரியன்முன்பனி-.....என்னவேசெய்துபூமிமேல்
வந்துநின்றுகெக்கலி...... ...யிட்டார்-திருக்கோட்டையர்
சிந்தைநொந்துகெர்ச்சிப்பை விட்டார்-கண்டு - பராக்ரன்
வாதுகூறிவந்தவர்மேல் ... மீதுளசரங்களெல்லாம்
ஓதையாகத்தொட்டவர்கள் - ஓதும்வில்லும்அம்புமற
மாநதபூசையாலே .....விஞன்- பகைஞர்சாகச்
சோனையதுபோலே தூவினன்- தமதுபடை
வாழவும்-கோட்டைமன்படை- வீழவும் - அவன்றன்வெற்றி
தாழவும்-அம்பிகையருள்-சூழவும்-காமுடன்செய்த- (மலையா)

௫, மலையரசனிதைக்கண்டு.....வலுமையாகக்கோபங்கொண்டு
வயிரமுள்ளசூரனையுந்.......தைரியமுள்ள .....வீரனையும்
வாரணமாவுத்.....தனையும் -கூரியபாணத் ... தனையும்
வல்லமையுள்ளோர்களையும் -சொல்லுதந்த்ரி மார்களையும்
வரச்சொல்லித்தயார்செய்து - திரச்சொல்லுதாரம் பெய்து
மலைபோலுந்தேரிலேறி - சிலைபாணங்கொண்டுதேடி
வலியபாணங்களெடுத்து- மெலிவோமென்பதைவிடுத்து
வச்சிரக்கவசம்பூட்டிக் - கச்சைகட்டித்துப்பைமாட்டி

மாற்றலர்படைகளின்று-தோற்றுப்போகச் செய்வேனென்று
சீற்றமுடனே யடர்த்த நாத்தி-.-யிலுப்.. பார்க்க
வந்துநின்றங்காரப் பரித்தான் - ஆர்த்துடன்நாலு
ஐந்தாறுபாணந் தெறித்தான் - தெறித்ததனை
வாசுமுறுமும்முடிய........ராசனதிந்தெதிர்பாணம்
ரோசமாய்எய்யும்படியாய் - பேசவேபோஷிகன்பிர
வாகபாணந்தொடுத்தறுத்தான் - மலைமன்கணை
சாகவிடுத்துடன் செறுத்தான் - வாமலோசனன்
வானமெல்லாப்புகைமூடச் - சேனைகள்திசைகெட்டோட
ஆனையஅஷ்டதிக்கஜங்கள் ... தானுமும்பிதிர்ந்துபோக
மாப்பிரளய........கால - வடவாக்கினி
காப்பொறிய வபோல - பாணங்களெய்ய

மன்னவன்சேரன் அறிந்தி... தென்னவிநோதமென்றார்த்து
இன்னவனையுடன் மாயத்து- என்னிடம்வாவெனச் சேர்த்து
வல்லசரநாணி... யேற்றினான் - சுருணன்கண்டு
வில்லைமுறித்தம்பு தூற்றினான் - அதுகண்டவன்
மாகோபங்கொண்டிதென்ன - ஓகோபிரளய மென்ன
வேகாதிவேகமுடன்............ வாகைவீரர்களை மாய்த்து
வாரணக்கூட்டங்களைக்கொன்றான் - சிலபடையைத்
தோரணமாக்கிழித்து... நின்றான் - ரத்நசேகரன்
மைக்கருமேகத்தைப்போலே-திக்குகளெல்லாமும்பேரத்
தக்கவச்சராயுதத் ... ...தாலே-பக்கமுள்ளோரைநொறுக்கி
மல்லமன்சாரதியைக் கொய்தான் - தேரையுடைத்துச்
சிலைமுடிபொடியாச் செய்தான் - ஓமமயிடன்
வாவிமல்லமன்மேற்பாய்ந்து-தாவியடித்துடன்... காய்ந்து
ஓவில்லாயுத்தத்தைச் செய்து-மேவலன்வில்லை......முறித்து
மாருதம்போற்றிரும்பிவந்தான் - வந்ததனையே
வீரன் அதிகாந்தன் அறிந்தான் - பெருமலைகள்
மந்திரத்தினாலெடுத்தே - அந்தச்சேனைமேல்...விடுத்தே
வந்தபரியானைகளும் - உந்துதேர்க்காலாள்களையும்
வதைத்தனன்னொடி தனிலே - விக்கிரமனும்
குதித்தேகடிகை ... தனிலே - மீந்தபடையை
வாரிவாரியடித்துப்பின் - ...தூறித்தூறிக்குறைத்துந்தன்
வீரமெல்லாங்காட்டியிக - ஆரவாரமாயடித்து
வட்டமிட்டுத்... திரிந்தானே - யந்தருவீரன்
எட்டியங்கே ....பரிந்தானே - பரிந்துதண்டம்
வலதுகையிற் ......பிடித்து - மல்லமன்னனையடித்து
சிலைதன்னையும்...பொடித்து - தலைமுடியையுடைத்து
வானத்தெழுந்துபாய்ந்தான்- பாய்ந்துதனது
சேனைக்குள்வந்துசேர்ந்தான்- இதனையெல்லாம்
--கவமல்லமன்கண்டு ... ...உக்கிரவாங்காரங்கொண்டு
மிக்குமும்முடியன்தேரைச்- சிக்கெனத்தூளாயுடைத்து
வாரிதியில் விழவெறிந்தான் - தேரைநடாத்தும்
சாரதிதலையு ....மரித்தான் - மும்முடிமன்னன்
வாசியிருநான்குமூண்ட - தேசிரதத்தினிலேறி
நல்வரிதனைச் சித்தித்து - மாசிலாவில்லையிற்கொண்டு
மல்லமன்மேற்கணைகோத்தான் - அவனும்அந்த
நிலைநின்றுமிக்க ... ஆர்த்தான் - ஆர்க்கக்கசியான்
வாரிதிக்கோஷிட்டிசெய் தெட்டு-மேருவுநடுங்கப்பெய்யும்
மாரியானதைப்போற்சர-மாரிபெய்யக்கோட்டைமன்னன் (

மாயமந்திரத்தை...மேவினான் - அதனாற்பூத
பேயின்கணம்வர ... ஏவினான் - கண்டுமுன்னாலே
வாலகலைக்கோட்டர்சொன்ன -நிலவிஞ்சையதுபன்ன
மேலதுவாளிகளாய்ப்போய் -சாலஅதனைமடித்து
மலைமன்னனையுங்கொன்றதே - கொல்லத்தேவர்கண்
டலர்மழைதூவ... நின்றதே - உலகமெல்லாம்
மகிழவும்-தேவர்கள்கண்டு - புகழவும்-தீமையாவும்
இகழவும்-தருமமெங்கும் - திகழவும்-நிகழ்வாய்ச்செய்த-(மலை)

௪, தலைகளறுந்த... பேரும் - சிலைகளெறிந்த... ...பேரும்
தாள்கள்தறிந்த......பேரும் - தோள்கள்முறிந்த.., பேரும்
தயிரியங்கெட்ட... பேரும் - உயிரினைவிட்ட ... பேரும்
தந்தங்களுதிர்ந்த பேரும் - புந்திகளிடிந்த ... பேரும்
தத்தளித்துவிழும் பேரும் - பித்துப்பிடித்தழும் ... பேரும்
சங்கிச்சங்கிநடப் ...பாரும் - தொங்கித்தொங்கிடப் பாரும்
சத்தமிட்டுவீழ்... வாருங் - குத்துயிராய்த்தாழ் ... வாரும்
தப்பியோடிப்போ வாரும் - குப்புற்றோடிச்சா ... வாரும்

சைகைசெய்துதொழுவாரும் -ஐயையோவென்றழு ...வாரும்
பையப்பையநெளி...வாரும் -கையைக்கையைக்குழை வாரும்
சரிக்கட்டிச்சாய்வாரும் - கண்டங்கண்டமாய்த்
திருக்கிட்டுமாய்வாரும் - ஐயோநாங்கள்
தப்பிதமாய்வந்துவிட்டோம்-அப்பனேஐயனேயுங்கள்
பொற்பதஞ்சரணமையா ...சொற்பமானோரையாட்கொள்ளும்
சாமிசாமியென் ... பாரும் - பசியால்மண்ணை
நேமிநேமித்தின்...பாரும்- கச்சியார்விடுஞ்
சரங்கள்பட்டுடம்பெல்லாம் - உரங்கருகிமரணப்
பருவம்அடுக்கக்கூவி...,.. ...அரைநிமிடத்திலாவி
தள்ளாடிமடி... ...வாரும் - களைகளைத்துத்,
துள்ளாடியிடி ... வாரும் - துண்டந்துண்டமாய்
சத்திரத்தாலறுப்புண்டு - தத்தித்தத்தியேபு... ....ருண்டு
சுற்றிச்சுற்றிவாய்வரண்டு - கத்திக்கத்திக்கூவிக்...... ...கோண்டு
தறிபடுஞ்சிரமநந்தம் - பனங்குலைபோல்
முறிபடுஞ்சிரமநந்தம் - குதிகுதித்துத்
தாண்டித்தாண்டிநொண்டியாடித்-தீண்டித்தீண்டிவிளையாடி
நீண்டிமீண்டித்துளையுண்டு -... ...நீண்டுபந்துபோலுருண்டு
தாவிவிழுஞ்சிரமநந்தம் - ஐயோவென்று
கூவிவிழுஞ்சிரமநந்தம் - ஒன்றோடொ

தட்டிமுட்டிலாரு கொண்டு - மொட்டைக்கடாபோலுருண்டு
சட்டிகள்போற்சித...றண்டு - நெட்டுநெட்டாகத்...திரண்டு
சண்டையிடுஞ்சிரமநந்தம் ... - மயிர்முடித்துக்
கொண்டையிடுஞ்சிரமதந்தம் - உருண்டுருண்டு
சற்றுதின்று...எப்பமிட்டு - வெற்றியுண்டென்றுகூப்பிட்டு
நெற்றிமார்புதனை பட்டு - மற்றதெல்லாங் ...கிழிபட்டுச்
சாரியோடுஞ்சிலகவந்தம் - நரம்பூசலில்
ஊரியாடுஞ்சிலகவந்தம் - பிரேதமெல்லாம்
சாலைபோல்நிறுத்தியிந்தப் - பாலமேறியந்தப்பக்கம்
வேலையினிற்பாய்வமென்று - காலையூன்றிக்கையைத்தூக்கித்
தாண்டுங்கவந்தமநந்தம் ... - தாண்டிவிருது
வேண்டுங்கவந்தமதந்தம் ... - தட்டிமுட்டியே
சச்சரவுசெய்து ... கொண்டு - மெச்சிமெச்சிக்காவு கொண்டு
கச்சைகட்டிவேஷங்...கொண்டு - உச்சிதமாயாடிக் ...கொண்டு
தாளமிடுஞ்சிலபேய்கள் ... - கெக்கலிகொட்டி
மீளவாடுஞ்சிலபேய்கள் ... - இரதங்களைச்
சத்திரமாகவேகட்டிச்- ....சுற்றத்தாரைத்தாவிக்கட்டி
மெத்தச்சாப்பாடுசெய்யென்று - சத்தமாகக்கூவிநின்று
தரிவிக்குஞ்...சிலபேய்கள் - போபோவென்று
கெருவிக்குஞ்சிலபேய்கள் - சூலத்தைநாட்டிச்
சாமியெனவுதிரத்தால் -நேமமொடுகுளிப்பாட்டி
வாமத்தந்திமணியாட்டி-எமசவத்தூபங்காட்டி
சாத்ரஞ்சொல்லுஞ் சிலநரிகள் -விவாகஞ்செய்து
கோத்ரஞ்சொல்லுஞ்சிலநரிகள் -ஆனைப்பிணமேல்
சம்ப்ரமாயேறிநடித்துப்... பம்பியேகுடைபிடித்து
வெம்புகுடல்மாலைபூண்டு - கெம்பீரவாள்கையிற்கொண்டோர்
தலமிருக்குஞ்சிலநரிகள்... ... கூட்டத்தைக்கூட்டிக்
கொலுவிருக்குஞ்சிலநரிகள் - இந்தப்படியாய்ச்
சத்துருமலைமன்படை-யத்தனையும்போயிறக்கச்
சத்தியினடியர்கண்டு - மெத்தவுமகிழ்ச்சிகொண்டு
தாயாங்காமாக்ஷியைப்பணிந்தார் - வெற்றிக்குரிய
தூயவாகைமாலையணிந்தார் ... ...தேவர்மகிழ்ந்து
சத்தியத்லைதிறத்திய - ...சத்தியத்தைத்தரத்திய
சித்தவீரர்காமாக்ஷியின் - பத்தியொனவாலின்று
தண்மலர்மாரியைப் பொழிந்தார் - அம்மையடியர்
உண்மகிழ்ந்து தன்பமொழிந்தார் - ஜெயந்தமக்குச்
சாலவும்-வரமலைமன்...... கால வும்-இராகவனைப்
போலவும்-சுப்ரமணியன்- போலவும்-சிலர்கள்செய்த(மலையா)()

தேசாதிபதிகள் தங்கள் தேசத்துக்கு வந்திருத்தல்.

(விருத்தம்.)

இந்தவணங்கச்சியவர்மலைமனனைச்செயித்தாங் ...*
கின்னலஞ்சேர்சிரோன்மணியாற்கன்மமுடித்தந்நா *
டந்தமங்கைக்கீய்ந்துசெங்கோற்றம்மதெனநாட்டி... *
யாவருக்குமுபகாரமாம்வணிகநடாத்திச் ... *
சொந்தமெனரக்ஷணைப்பட்டம்முழங்காற்கட்டிச் ... *
சோழமன்னுலதிகவெகுமதிகளெலாம்பெற்று ...*
வந்தவணிகருந்தேசாதிபருமுமையருளால் ... *
வாழ்ந்தனரொன்றியாழ்முநிவன்வாசவனுக்குரைத்தான்

வியாபாரகாண்டம்-முற்றிற்று.

விருத்தங்கள் - ௨௭ - கொச்சகங்கள் - ௨ ஆ - ௨௯

தருக்கள் - ௰௪ - திபதைகள் - ௰௧ ஆ - ௨௫ - ஆ ௱௪

உ

கருணாம்பிகைதுணை.

மூன்றாவது

பாண்டியன் காண்டம்.

நாரதன்,

பாண்டியன்கொலுவிருத்தல்கூறுதல்.

விருத்தம்.

மாமணஞ்சேர்தேசாதிபதியார்கச்சி ... ... *
மாநகரிற்பிரபலமாய்வாழுங்காலம் ... *
நேமமுடனடந்தசரித்திரத்தையன்பாய் ... *
நிகழ்த்துமெனத்தேவர்களுக்கரசன்கேட்ப ... *
விமமறும்பாண்டியன்மூலமதாய்க்கோத்ரம் ... *
விருதுகளும்பெற்றகதைவிவரிப்பேனென் ... *
ஞேமதிலுறபொருந்தியநாரதமுநீந்த்ரன் ... *
உன்னுவான்மநமகிழ்வாய்ப்பன்னுவானே ... *

தரு - இராகம் - தோடி - ஆதிதாளம்,

பல்லவி.

ஜெயவீரபாண்டியன்கொலுவிற் - சிறந்திருந்தானே *.

அநுபல்லவி.

நயம்பெருகியசொக்க - நாதரருளினாலே... (ஜெயவீர)

[சரணங்கள்.]

க; மாதமும்மாரிபெய்துவளம்... ... பிறக்க - வேதம்
ஓதுமறையோர்மஹ ாகுதி... ... சிறக்க
நீதந்தருமமூல ... கர்கள்... ...குறிக்க - தீமைப்
பாதகாநீதமென்பவைகள் ... ...பறக்க
எதிலார்வரனப்பிரத்தர் - நீதர்க்கன்னம் .. கொடுக்க

௨; அரனார்கிருபைதினங்கொடு ... மேலும் - ஆதி
பரதேவிமீனாக்ஷியின்அரு ... ...ளாலும்
பெரியோர்கூறியநீதிமுறை.........போலும் - தமது
பெரியோர்கிரியைவழாதொருக்.......காலும்
சுருதிநெறியாலாறி - லொருகடமையைக்கொண்டு
பரவுயிர்களைத்தன-திருகண்போலவே......கண்டு-(ஜெயவீ)

௩, மந்திரிமார்களுலகியல் ... ... கூற - வெகு
தந்திரிமார்களொருபுறம் ... ... வீற
பந்திபந்தியாப்படைஞர்கள் ... ... மீற - திறை
தந்துசமூகத்தரசர்கள் ... ...தேற
வந்துகுறையிரப்போர் - சிந்தைமிக மகிழ
எந்தவுலகத்தருஞ் - சந்தோஷமாய்ப் புகழ - (ஜெயவீ) (௬)

பாண்டிநாட்டுக்குற்றவாளிகள் கச்சிநாட்டரசனிடமுறையிடுதல்.

விருத்தம்.

கொலுவிருந்தமன்னனற்பாண்டியநாட்டிற்செங்கோன்மை
கொளுநாளந்தத் ... ... *
தலமதிற்குற்றஞ்செயிருபத்துநால்வரையோர்சிறைச் *
சாலைவைத்தான் ... ... *
அலமருமக்குற்றவாளிகள்சிறைச்சாலையைவிட்டே... *
யரியகச்சித் ... ... *
தலமதையாளரசனிடநிலைப்பட்டாரிடர்கூறத் ... *
தலைப்பட்டாரே ... ...(௨)

தரு - இராகம் - பைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

கிருபைசெய்தாள... வேண்டும் - தேசாதிபரே
கிருபைசெய்தாள... வேண்டும்

அநுபல்லவி.

பெருமைமிகுங்காமாக்ஷி- கிருபையுடையீர்...காக்ஷி
அருமைபெற்றீரத்தாக்ஷி- சரணமடைந்தோஞ்சாக்ஷி(கிருபை)

[சரணங்கள்]

க, அம்மன்வரப்ர... ... ...சாதரோ - ஏகாம்பரேசர்
தம்மன்புடைய ... ... நாதரோ
இம்மாநிலப்ரக் ... ... யாதரோ - பரோபகார
கைம்மாறுவேண்டா... ... ... நீதரோ
உம்மைக்கதியென்றெண்ணி நம்பினேந்தயை...பண்ணி
தம்மருள்விழி.....நண்ணி-எம்மைரக்ஷணை ...பண்ணி
ஏற்கவேணும்பயந் .... தீர்க்கவேணும் நயம்
பார்க்கவேணுஞ்ஜெயம்-காக்கவேணு மபயம் - (கிருபை)

உ, பிரிதிவீசன்வம்ஸ...... ...பாலரோ தயாநுக்ரக
பிரிதீகரங்கொள்.........,....சீலரோ
சரணென்போர்க்கநு........கூலரோ - சுத்தவீரரோ
கர்வித்தோர்கட்குக்........காலரோ
வரமுதியாகத் ... தோரோ - பிரியசிநேகத்தோரோ
பெரியவிவேகத் தோரோ - அரியசாகசத் தோரோ
வள்ளல்களே... யுங்கள் - பிள்ளைகளாம்...நாங்கள்
எள்ளளவெனு ...நீங்கள்-உள்ளம்வைத்தாளுங்கள் - (கிருபை)

ந, பாண்டியன்குற்றஞ்.....சாட்டினான் - எங்களைச்சிறைக்
கூண்டிலடைத்து..........வாட்டினான்
வேண்டித்துன்பங்கள்......பூட்டினான் - காவற்காரரைத்
தூண்டியவஸ்தைக்... ... மீட்டினான்
ஆண்டநில்நின்று நொந்தோம்- ஈண்டபயம் புகுந்தோம்
பூண்டதிங்குனை... ... தந்தோம்-ஆண்டுகொள்ளென்றுவந்
ஆளுமையாநல்ல - வேளையையாசொல்லக் [தோம்
கேளுமையாஅல்லல் - மீளுமையா...வல்ல - (கிருபை) (உ)

கச்சிராஜன்கேட்கமந்திரிமுதலியோர்

யோசனைகூறுதல்.

(விருத்தம்.)

சொல்லியவபயங்கேட்டிஃதெம்மைச்சூத்திரமென்றெணிநீதி ......*
சொல்லியமாற்றநடாத்திடச்சூதித்துத்தாயயூகத்தியலமைத்துச்...*

சொல்லியவாமாத்தியர்செட்டிக்கர்த்தர்தொல்விசாலாவதியவர்க்குச்.
சொல்லியோசனையைக்கச்சியான்கேட்கத்துயரிவ்வாய்மைகூறுவமே

தரு- இராகம்- நாதநாமக்கிரியை - அடதாளசாப்பு.

பல்லவி.

யோசித்தெதுவுஞ்செய்ய ... வேணும் - செய்தால்
ஒருதீங்குமில்லைநலம்பெருகிடுங் காணும்
யோசித்தெதுவுஞ்செய்ய... ...வேணும்

அநுபல்லவி.

ஊசிமுனைபோலுள்ள...... ...பேச்சு - அதை
யோசியாவிடிலாகுங்கடலுக்குள் நீச்சு
தூசுச்செய்கைசெய்தாலும்... ...ஏச்சு - அந்தத்
தூசும்ப்ராம்மாண்டமாயோசிக்கலாச்சு - (யோசித்)

சரணங்கள்.

௧, பகைஞர்களுருமாறி...........................வருவார் - வந்து
முகநட்பாயடைக்கலமெனும்வார்த்தை தருவார்
அகத்தில்வர்மங்கொண்டே,..................திரிவார் - சிலநாள்
மிகுத்தபின்சதிசெய்யஎத்தனம்,........புரிவார் - (யோசித்)

௨, முகக்குறிமொழிக்குறி............. ... நோக்கி- வந்தோன்
பகைத்தோனுறவோவென்றுபழமையைத்தூக்கி
அகக்குறிசெயற்குறி ... ... வீக்கி - முன்பின்
பகுத்தறியூகத்தைப்பண்பாயுண் ... ... டாக்கி -(யோசித்)

௩, செங்கோல்செலுத்தல்தந்த்ர..............யுத்தி - அதற்
கெங்கேயுந்தடைவராதியற்றலே.........சித்தி
இங்கடைக்கலங்காந்தல்................. பத்தி - எனினும்
பங்கோடறிந்துசெய்தாற்பண்பான......சுத்தி -(யோசித்)(௩)

கச்சியரசன்பந்துக்களுக்குநீதிபோதித்தல்

விருத்தம்.

செட்டிமையோர்மந்திரிமார்கழறுதல்கேட்டான்பாகச் ...*
செல்வியாத ... ...*

மட்டிலுளம்பூணுமடியவன்கச்சிநகரதிபன் ... *
மகிழ்ந்தாலோசித் ... ... *
திட்டமுடன்மறையாங்கங்கூறுதெறியோர்ந்தடைந்தோ ...*
ரிலிமைபூணப் ... ... *
பட்டதுதேர்ந்தறநெறியைக்காட்டுவானன்மையைப் ... *
பாராட்டுவானே ... ... (௪)

தரு - இராகம் - சாரங்கம்- ஆதிதாளம்.

பல்லவி.

மன்னர்மந்த்ரிசெட்டிமைமாரோ - யான் ... *
சொன்னவண்ணமேசெய்குவீரோ ... *

அநுபல்லவி.

அன்னைகாமாக்ஷிதன - தின்னருளு...........மிருக்க...*
முன்னிசன்தந்தவரம் - இன்னும் இன்னும்பெருக்க...*
அட்டியென்- னிட்டமாய்த்- தொட்டது- சட்டமாய்...*
தட்டணை - யிட்டதை - மட்டுடன் - கிட்டிமுன் ... *
பட்டமு - மங்காலில் - கட்டிய - திட்டமாம் ... *
எட்டுத்திக்-கொட்டுனை-இட்டிட-ஒட்டுவீர் ... (மன்னர்)

[சரணங்கள்.]

௧, அச்சுதன்யானைக்கிடர் ... ...கெடுத்தான் - சிவன்
மெச்சியன்பற்கெமனைத் ... தடுத்தான்
இட்சுவாகு அபயங் ... கொடுத்தான் - வந்த
பக்ஷிக்காயுடற்காப்பை ... விடுத்தான்
நிச்சயேந்திரன்மூறை ... யெடுத்தான் - தசரதன்
அச்சம்பரனையம்பாற் ... ..படுத்தான்
பக்ஷவிபீஷணன்வந் ... தடுத்தான் - ராமன்
இச்சைத்தம்பியாப்புகழத்......தொடுத்தான்
நச்சுஞ்சுக்ரீவனுக்கவ் - ராகவன்பயந் ... தீர்த்தான்
நனியிந்த்ரன்கேட்கக்கும்ப - முநிகடல்குடித்தார்த்தான்
பக்ஷிவேடனுக்கிதம் - பண்ணவவனும்... ... பார்த்தான்
பல்லூகம் ஓர்மநவை - எல்லெல்லாங்காக்க... நீத்தான்
பங்குட - னெங்கனு - மிங்கித - மங்கள
மூங்கொடு - தங்கிவ - ணங்கியி - ணங்கித

லங்களை - டுங்கதை - யெங்குமி - லங்கம்வ
இங்குள - ரங்குள - ரெங்குள ருங்கொண்டோம் (மன்னர்)

௨, அன்புவிஸ்வாசத்தில்து ... ... வண்டு - உலகில்
தன்போலெவ்வுயிர்கட்குங் ... கண்டு
இன்பாய்வற்தோரோடுண ... வுண்டு - மிருது
இன்பவாக்கியம்யார்க்கும் ... விண்டு
முன்பாசர்கீர்த்திக்கும் ... ... ரெண்டு - பங்காய்த்
தன்புத்திகொண்டுசெய்து ... பண்டு
வன்பசத்தியத்தண்டு .. மிண்டு - செய்யா
அன்பனாரக்ஷித்துக்கைக் ... ... கொண்டு
பின்பாராதடைந்தோர்க்குப் - பெரியவுறுதி ... தந்து
பிள்ளைகள்போலேகாத்துத் - தெள்ளிமைசெய்து கந்து
மின்போதேனுங்காமாக்ஷி - யன்பினையேநி ... னைந்து
மெச்சுஞ்செய்கையாண்டவள் - பக்ஷமதாய்ப்ப குந்து
வித்தக - பத்திகள் - எத்தனை - யத்தனை
நித்தந - டத்தியே - உத்தம - புத்தியி
னுத்தியாய் - மெத்தவும் - வைத்திடாப் - பித்தர்கள்
இத்தனை - மத்தியில் - செத்தவ - ரொத்துளர் (மன்னர்)

௩, காயமெடுப்பதுவோ ... ... நன்று - எடுத்
தேயதிகபுலமா ... ...யின்று
தூயவிவேகங்கொண்டு ... நின்று - நற்ச
காயமுதலெல்லாதன் ... றென்று
ஞாயமானவழியிற் ... சென்று - அறி
யாயமென்பவைகளை ... வென்று
தீயரானதுஷ்டனைக் ... கொன்று - நன்மை
யாயசிஷ்டனைரக்ஷித் ... தொன்றும்
தேயத்தையாண்டுகொண்டுந் - தேவியினரு .. ...ளாலே
ஜெயமென்றடைந்தோருக்கு-நயஞ்செய்யாதொரு காலே
ராயனுயிருந்ததில் - நலமென்னஅத ... ... னாலே
நாஜநதங்கொண்டதில் - பிரயோசனமாய் ... மேலே
நக்கனெனர் - பக்கமி - ருக்குஞ்சி - வைக்கழல்
சிக்கென - மிக்கதி - னக்கில - லக்கண்கள்
புக்கிடா - திக்கண - டைக்கல - ருக்கியல்
தக்கப - டிக்குக்கொ - டுக்கதி - னக்கிறேன் (மன்னர்) (௬)

அடைந்தோருக்கு அரசன் அபயமீதல்.

விருத்தம்.

என்றுரைத்துப்பூதவுடம்பழியுங்கண்டீர் ... *
எக்காலும்புகழுடம்போவழியாதிங்கே ... *
இன்றுநம்பாலடைக்கலம்வந்தோரைக்காக்கில் ...*
இகபரகீர்த்தியும்வருமென்றிறைதான்கூற ... *
நன்றுநன்றுமுடிமாராஜராஜே ... *
நயமொடடைந்தோர்க்கபயமீந்தாளென்ன ... *
அன்றுதம்பாலடைந்தவருக்கபயமீந்தே ... *
யாற்றுவானுறுதிமொழிசாற்றுவானே ...(௫)

தரு - இராகம் - அடாணா - அடதாளசாப்பு

பல்லவி.

பயம்விடுவீர் - பயம்விடுவீர் - பயம்விடுவீரோ...*

அநுபல்லவி:

செயமதாகநாம் - அபயங்காத்தோம் (பயம்விடுவீர்)

[சரணங்கள்]

௧, சக்திதாயின்கிருபை ... ... யுண்டு
மெச்சுமுநிவரமுங் ... ... கண்டு
பக்ஷமாய்நாஞ்சொல்வதுங் ...கொண்டு
அச்சஞ்செய்புள்ளபலம் ... விண்டு
இச்சையுடனே அம்மையைப் ... போற்றி
கொச்சைச்சத்ருக்கள்செய்கோட்டியை மாற்றி ... (பயம்)

௨, ஏதுவந்தபோதும் ... காப்போம்
தீதுவந்தாலக்கணமே ... தீர்ப்போம்
யாதுகாத்துப்பகையை ... நீப்போம்
ஈதுறுதியிருப்பீர் ... பார்ப்போம்
பேதகங்களைப்பேர்த்தே ... யரிந்து
ஆதரவுகொண்டமைவா ... யிருந்து ... (பயம்)

௩, கண்ணுக்குஇமையைப் ... போலே
எண்ணினேனும்பயமேன் ... மேலே
பண்ணைவேண்டாஞ்சிந்தையிப் ...பாலே
தண்ணுவீரோநலமெம் ... மாலே

திண்ணமாயுரைசெய்தனங் ... காண்பீர்
புண்ணியம்பெற்றீர்புஜபலம் ... பூண்பீர் (பயம்)(௫)

பாண்டிநாட்டுக்காவற்காரருக்கு விடைகொடுத்தல்.

(விருத்தம்.)

அடைக்கலம்வந்தோர்க்கபயங்கழறிக்கச்சி ... ... *
யாசனிருந்திடவிதனையறிந்ததென்னன் ... ... *
கடுத்துசிறைக்காவலரைக்கச்சிக்கேவக் ... ...*
காவற்காரருங்கச்சியிறைபாலுற்று ... ...*
அடைக்கலங்காத்தவரைவிடுமென்னவம்மைக் ... *
கடியனுங்கேட்டடைந்தோரையாண்டதற்பின் ... *
விடக்கூடாதெனவுரைக்கக்காவலாளர் ... ... *
விரும்பினர்தந்நகர்க்குத்திரும்பினரோ ... (௬)

பாண்டியனுக்கும்மும்முடியரசனுக்குஞ்சம்வாதம்.

விருத்தம்.

சாதுகாமாக்ஷியம்மன்வரப்ரசாதர் ... ... *
தாமுரைத்தவாக்கியங்கள்தன்னைக்கேட்ட ... ... *
தூதுவராங்காவலர்போய்ப்பாண்டியனுக்குச் ... *
சொல்லவவன்கேட்டெழுந்துதுரிதமாகத் ... *
தீதுபயில்குற்றமுடையவர்க்குக்கச்சித் ... *
தீக்ஷணமும்முடிமனுபகாரஞ்செய்த ... *
தேததனையதிவமென்றிவ்வரசன்முன்வந் ... ... *
திருந்திட்டான்சம்வாதம்புரிந்திட்டானே ... (௭)

திபதை- இராகம்- கமாசு- ஆதிதாளம்.

[கண்ணிகள்.]

(பாண்) சாதுகாமாக்ஷியம்மன் - ஓதுதல்வரப்பிரசாதா
மீதா ... ...மறை

யாநிநெறியைதத்வ-ருதனாயாதிபிரக்கி
யாதா ... விநோதா
தீதையடக்கியற- மேதினமுநடத்து
நீதா ... ... சூதாய்வந்து
ஓதுங்கள்ளர்க்கபயம்-ஏதுதந்தநுகச்சி
நாதா ... ஓதாய் ... (க)

(மும்) வேண்டும்புகழ்படைத்த - பாண்டியனுணமஹா
சீலா ... ... மேலாமதுரை
ஆண்டுமீனாட்சிபதம் - பூண்டன்புடையதவப்
பாலா ... ... லோலா
ஈண்டியடைந்தபேனா - ஆண்டாற்குறைவோ
அனுகூலா ... ...மாலாகவே
தூண்டிப்பரோபகாரம் - வேண்டார்மனிதராமோ
லீலா ... ... கோலா - (உ)

(பாண்) வந்தடைந்தோர்கள்குறி - இந்தவிதமெனவே
தெரிந்து ... பொருந்தும்வகை
எந்தவகையாகுமோ - அந்தவகைசெய்யலாம்
புரிந்து ... ... இருந்து
நந்தஞ்சிறையைவிட்டு - இந்தக்குற்றவாளிகள்
இரிந்து ... திரிந்துழன்று
வந்தவர்க்குத்திடத்தை - முந்தச்சொன்னதென்ன
பரிந்து ... ... திருந்து ... (ங)

(மும்) குற்றவாளிகள்முறிந் - தற்றுவரவும்விட
லாமா ... ...பூமாவந்தோர்க்குச்
சற்றுமிரங்காமல - கற்றிவிடுதல்நன்றோ
தாமா ... ... நேமா
உற்றவர்கள்பகைஞர் - மற்றவரென்றும்பாரோன்
வாமா ... ... காமாபயத்தால்
உற்றேயபயமென்றால் - எற்றுங்காவாமல்விடப்
போமா ... ... வீமா - (ச)

(பாண்) கள்ளர்கொலைபுலைகள் - உள்ளவர்க்குபகாரம்
பண்ணி ... ... புண்ணியத்தோர்கள்
எள்ளும்படியும்வகை - விள்ளும்படியுறுதி
நண்ணி ... ... உண்ணி
தெள்ளித்தெளிந்தன்றோனாத் - தள்ளிவிட்டுவிடாமல்
[illegible]

கொள்ளத்தருமமுண்டோ - விள்ளுவாய்திருஷ்டாந்த்ரம்
எண்ணி ... ... திர்ணி - (௫)

(மும்) ராமன்விபீஷணனை-க்ஷேமஞ்செய்தடைக்கலங்
கொடுத்தான் ... எடுத்தான்சுக்ரீவன்
தாமுன்வேண்டல்போல்வாலி-யாமவனைமடித்து
விடுத்தான் ... தொடுத்தான்
ஆமதுபோல்வந்தோரை-நாமாதரித்தோம்அந்தப்
படித்தான் ... அடுத்திடவே
மாமறைகள்பகர்ந்த - நேமநூல்களிலுள்ள
திடத்தான் ... ... தடத்தான் (௬)

(பாண்) அதுபோலடைந்தோர்களைப் - பதனமுடனேகாத்துப்
பின்னே ... என்னையும்வெல்ல
மதியில்நினைந்துமுழுச் - சதிசெய்யக்குணித்திரீ
தென்னே ... ... என்னே
இதுநாளும்விசுதமாய்- விதிகொண்டிருந்தோமேநாம்
முன்னே ... இந்நேரம்பகை
புதிதாச்செய்யவோஇந்த-ஸ்திதிசெய்தீர்நீவீர்அதைச்
சொன்னேன் ... சொன்னேன் (௭)

(மும்) உங்கள்சிறைநீங்கிப்பின்-இங்குவந்தடைந்தோரைப்
பிரியோம் ... பிரித்தேமிகு
துங்கநீதிமொழிகட்-கிங்கேதப்பிதஞ்செய்யத்
தெரியோம் ... தெரியோம்
தங்கள்நட்பினையிந்தச்-சங்கதியினால்விடோம்
உரியோம் ... பெரிதாய்நாஞ்செய்
வங்கணமறப்பகை-யுங்கொளோஞ்சமரது
புரியோம் ... ... புரியோம் (௮)

(பாண்) பிரிவதில்லெனில்வந்த-வரையிக்கணமேவிட்டு
விடுவீர் ... விடுவீரொந்தனுக்
குரியவராகிநலம்-பெருகியபுகழ்படைத்
திடுவீர் ... ... நடுவீர்
பெரியமறுவிக்யானந்-தெரிபவரெனச்சொல்லப்
படுவீர் ... தொடுவீரன்றேல்
தரியலரெனச்சொல்வ-துரிமையாகுந்தெரிந்
திடுவீர் ... ...தெரிந்திடுவீர் (௯)

(மும்) அடைந்தோரைவிடமாட்டோம்-தொடர்ந்ததற்குப்பிரதி
தொடுப்போம் ... தொடுத்திருபானுன்
குடன்படிக்கையர்க்கெங்கள்-தடஞ்சிரங்களாலுங்
கொடுப்போம் ... கொடுப்போம்
திடங்கொண்டெந்தக்கார்யத்து-மடங்காதிருக்குஞ்ஜெய
மெடுப்போம் ... எடுத்தால்விடோம்
நடஞ்செயுமுமையவ- ளிடஞ்சொல்வோமவள்துதி
படிப்போம் ... ... படிப்போம் (ய) (சு)

இருபத்துநான்குமவணயார் - காமாக்ஷியம்

மன் சந்நிதியிற் றுதித்தல்.

(விருத்தம்.)

தென்னளிதுகேட்டளவேபிரமித்தம்பாள்..............*
செயலெல்வணமோதெரிவோமெனஅவ்வாறே... ...*
சொன்னகுற்றவாளிகண்மூடிவெண்மருக்குத்..............*
தொனைதவளுச்சிரங்களை நீர்தருமினென்ன... ... ...*
மன்னவன்மும்முடியனுறவோர்க்குச்சீர்த்தி..............*
வரும்வகைகூறிடக்கேட்டுமகிழ்ந்தெல்லோருங் ... *
கன்னியுமைகாமாக்ஷியம்மன்முன்போய்க்...... ......*
காத்திட்டார்தோத்திரஞ்செய்தேத்திட்டாரோ ... (அ)

தரு - இராகம் - முகாரி - ஆதிதாளம்.

பல்லவி.

காமாக்ஷியெங்கட்கருள்செய்ய... வேணும் - கருணைபூணுங்
காமாக்ஷியெங்கட்கருள்செய்ய ... வேணும்

அநுபல்லவி.

மாமயில்குயில்வாழும் ...... பூமலர்ச்சோலைசூழும்
தெய்வொழிற்கச்சியாளும்- ஆம்பிகாஇதைக்கேளும்- (கா)

[சரணங்கள்]

க, எங்குநிறைந்திருந்தவ............... நீதி - அன்பருளத்திற்
றங்குங்கருணை .... நீதி - ஆநந்தவெள்ளம்

பொங்கும்பரஞாநவி .... ஜோதி - ஆத்மாநபூதி
அங்குங்கெனுமெஞ்சொல்கொள்...காதி
அரகரசிவ சிவி- குருபரிநமசிவி
வரமுமருளுதவி - திரநிலைதருபவி
ஆநந்தநடரிடப்பாகி...விவேகி - (காமாக்ஷி)

௨, தேவியெனநினைந்துன்னைக்...கோரி - 'சதாகாலமும்
மேவிப்பணிபவர்க்குப ....காரி - எங்கட்காதார
ஆவிக்காவியெனுஞ்சமு...... ...சாரி - பிரணவரூபி
சேவித்தனந்திருக்கண்பார்... ...வீரி
சித்தமும்வைத்திரு-பத்துநால்வரைத்தரு
முத்தமியுனதருள்-வைத்தநுதின மொரு
தீங்கணுகாவகை - யாங்கிர்பைதாராய் - (காமாக்ஷி)

௩, தென்னுடருக்கபயமுந்......தந்தோம் - பாண்டியன்பின்வந்
தென்னுவெனச்சபதத்திற்கியைந்தோம் - தலைகளீயச்
சந்திக்குமுன்னுமேலே ... ... வந்தோம்-இதோகொடுப்போம்
அன்னையுனதருள்கொண்டு கந்தோம்
அப்புறமுன் சித்தம் - எப்படியோ யுக்தம்
மெய்ப்புடனேவைத்தம் - இப்போதேயாள் நித்தம்
ஆண்டவளேயுன்னருள்-வேண்டினேம்வாவா(காமாக்ஷி) (எ)

இருபத்துநான்குமவனையார்-பாண்டியனுக்குத்தலைகள்கொடுத்தல்.

(விருத்தம்.)

என்றுரைத்துச்சத்தியவாக்கேடேறச்சுயசுத்தவீர ... *
ரெல்லாம் ... ... *
வென்றியர்க்கும்வீரருக்குமுதாரருக்குமுயிர்திரண... *
மென்னல்போலச் ... ... *
சென்றுலகோர்புகழ்ந்திடவானவர்களெல்லாமதிசயிப்பச்
செழியனுக்கு ... ... *
தன்றியுடன்சிரங்கட்டினைக்கொடுத்திட்டாரின்பமுட ... *
னடித்திட்டாரே ... ... (௧)

தரு- இராகம்-பைரவி-திரிபுடைதாளம்.

பல்லவி.

கொடுத்தாரேதலைகள் - பாண்டியனுக்குக் ... *
கொடுத்தாரேதலைகள் ... ... *

அநுபல்லவி.

கொற்றவரிரு - பத்துநான்மனையவர் ... *
வெற்றியாயொரு- மித்துமையருளினல்(கொடுத்)

[சரணங்கள்]

க, கைகூப்பியேவணங்கி - மெய்பானதில் இணங்கி
கட்டளையிடு - மட்டதுதவருமல்
சிட்டர்கள்மிக - இட்டமாய்நலமுடன் (கொடுத்)

உ, உலகமிகத்துதிக்க - இலகும்புகழ்கதிக்க
ஒப்புடனுமை - மெய்ப்பதம்பணிசெய்து
செப்பியசொல்லில் - தப்பிதம்வாராமல் (கொடுத்)

௩, பக்ஷிவேடனைக்காத்து-மெச்சுதல்போலச்சேர்த்து
பங்குடன் அப-யம்பகர்ந்தோர்களை
வங்கமைபூ! ன்-அங்ஙனம்ஆண்டிடக் (கொடுத்)(அ)

பரமேஸ்வரனமற்றதேவர்களுடன்கச்சிக் கெழுந்தருளுதல்.

விருத்தம்.

பண்பினரிங்ஙனஞ்சிரங்களீந்திடக்கண்டதிசயித்த ... *
பாண்டிமன்னன் ... ... *
கண்புதைத்துக்காமாக்ஷிதனைப்பணிந்தானுலகரிந்தக் *
காக்ஷிகண்டார் ... ... *
எண்புகலாவுவகையுடன்கைலையரனரியயன்மற் ... *
றிந்த்ரனேடும் ... ... *
நண்பொடதிசயங்கான எண்ணினர்கச்சியினில் *
நண்ணினரே ... ... (ய)

தரு - இராகம் - சுருட்டி - ரூபகதாளசாப்பு.

பல்லவி.

ஆதிபரமேஸ்வரன்-ஒருந்தேவர்களுடன்- பூதலந்தன்னில்வந்தானே

அநுபல்லவி.

சாதுகாமாக்ஷியடியரின்று - நீதிவழுவாநெறியினின்று ...*
தலங்கள்புகழ - நலங்கள்திகழ ... ... *
தலைகள்தந்ததுகண்டு - நிலைதந்திடுமருள்கொண்டு ...(ஆதி)

[சரணங்கள்.]

௧; அந்தரமொன்பவர்சகலபேர்களுஞ்
சந்தோஷமுடன் ... நடக்க - தேவ
இந்திரன்றனதயிராணியொடுந்
தந்திமேல்வந்தன்பு... ... தொடுக்க - வெகு
சுந்தரத்திருவுடனேவிஷ்ணுவுந்
தங்கருடன்மேல் ... நடிக்க - அர
விந்தமலரோன்சரஸ்வதியுடன்
சொந்த அம்சமே ... லடுக்க - வரச்
சிந்தைதெளிந்தமுநிகள் ... கூட்டம்
சிவகணங்களின்ஆட்ட... ...பாட்டம்
தந்தமையறிபுலவ ... ரோட்டம்
தபவியல்பெருரிஷிக... ...ளீட்டம்
சத்தக்கடலுங் குளிர
பத்துத்திசையும்ஒளிர
பத்தர்க்குயிர்வரவளரச்
சத்யத்துவமே...மிளிர - (ஆதி)

௨, சச்சியடியர்தலைகள்கொடுத்த
உச்சிதத்தைப் ... பாராட்டி - தயை
வைச்சங்கடைந்தோர்க்கபயங்கொடுத்த
ரக்ஷணத்வமு ... ..நாட்டி - மிக
மெச்சியுமையைப்போற்றும்அருமைப்
பக்ஷமீதென்று ... காட்டித் - தன்மேல்
இச்சையாயுள்ளபக்திமேலருள்
மிச்சமாக்குணங் ... கூட்டி - இதை
அச்சுதனுடன்வகுத்தங் ... குரைத்து
அவர்கள்பக்தியின்பெருமைவிரித்து

நிச்சயமுடனுயிரைத் ... தரித்து
 நேயஅன்பரையெழுப்பப் பருத்து
நிற்கும்வசுவிற் ருண்டியே
சற்பாக்யவரந் தாண்டியே
தற்காலமேலுற்றீண்டியே
நற்காரியமிக வேண்டியே ... (ஆதி)

௫. வாமபாகத்திற்பரமேஸ்வரி
கோமளத்துடன் ... இருக்க - வெகு
நேமமுடனேயிருபக்கத்திலுந்
தாமின்ஞரிகை ... விரிக்கத் - தனது
நாமதோத்திரம் அடியர்போற்றி
மாமகத்வங்க ... ளுரைக்கத் - தேவர்
தேமலர்மழைபொழிந்துபுகழ்ந்து
சாமரைவீசப் ... பெருக்க - முள்ள
சேமத்தும்புருநாரதர் ... பாட
 தேவரம்பையர்நடன ... மாட
தாமதம்இல்லாதடியர் ... நாட
 சத்தியடியர்க்கின்பங் ... கூடத்
தலமெங்கனுமே புகழ
தலவன்பர்களக... மகிழ
இலமென்பதெலாந்திகழ
இலகுஞ்சுபமே... நிகழ ... (ஆதி) (௬)

கலெக்டர்-ஈஸ்வரனுக்குநடந்த செய்திகூறுதல்.

விருத்தம்.

அரன்முதலோருமையுமராலயமுன்பாக ... *
 வடியர்சிரமீந்தவிடமதினின்றோங்கிப் ... *
பானுமையைநோக்கியெக்காரணத்தால்நந்தம் .. *
 பத்தர்களிங்ஙனஞ்செய்தார்பகரொன்றேத ... *
பரமசுபகல்யாணேஸ்வரிதன்னுதன் ... *
 பதம்பணிந்துமேனடக்கும்பகுப்பையெல்லாம்... *
பெருகலெக்கோட்டரையழைத்துமொழிவிரென்னப் *
 பிரிவிப்பாரவர்அசர்க்குத்தெரிவிப்பாரே ... (௧)

தரு- இராகம்- சஹானு - ஆதிதாளம்.

பல்லவி.

சங்கதி தேடும்........அடங்கனுநாடும் - (என்ன)

ரு, அம்மன்சந்நிதிக்குச்...சென்று-நம்மவரெல்லாமுன்...னின்று
இம்முயற்சிவந்ததென்று-செம்மையுடன்சொல்வோ...மின்று
உம்மதோசனை ... பாரீர் - நான்கூறியது
சம்மதிதானோ ... ...தேரீர் - ஈதல்லால்வேறு
நன்மையுண்டானால் ...நேரீர் - சீக்கிரமாக
எம்மோடுரைசெய்... வீர்நீர் - இதுவல்லாமல்
நம்மதுபடைவீரர்க்கெச்சரிக்கைகள்சொல்லிக்...கொள்ளும்
[அக்குருவிந்தன்.
தம்மனதறிந்திடத்தூதராலிதுசெய்திவிள்ளும் - அவனுடைய
சம்மதிதெரிந்துபின்னெம்முடனுரைத்ததையுள்ளும் - நமூந
[மூத்தால்.
அம்மொழிசிறிதெனவங்ஙனமேயதைத்தள்ளும் - இதனுக்கு
[ள்ள
வண்மையைத்தெரிந்துகூட்டி-உண்மைதனையேபாராட்டி
திண்மையுத்திகளை...நாட்டி-திண்மையாந்தந்த்ரங்கள்பூட்டி
அனைவருஞ்...சேர்ந்திது-இனிதொடு ... கூர்ந்தது
மநதினிற்றேர்ந்...தெது-நனிமிக......வோர்ந்தது-(என்) (ரு)

இருபத்துநாற்கோத்திரத்தோர்

காமாக்ஷியைமநுக்கேட்குதல்.

(விருத்தம்.)

மும்முடிமன்னிவைகூறவமைச்சரோர்ந்து ... *
மூடனெனுங்குருவிந்தன்றனக்குப்புத்தி ... *
சம்மதமாக்கூறியுங்கேளாதுமீண்டுஞ் ... *
சமர்புரிவேனெனக்கூறத்தாமுணர்ந்து ... *
இம்மொழியாமுமையிடத்திற்பகர்வோமென்றூண் .. *
டிராஜரமைச்சருந்தேசாதிபருமேகிப் ... *
பொம்மலுடன்பணிந்தெழுந்தர்ச்சனையியற்றிப் ... *
போற்றுவார்மநுவாக்குச்சாற்றுவாரே ... (க)

தரு-இராகம்- மாஞ்சி- அடதாளசாப்பு.

பல்லவி.

ஓம், ஆண்டவளேவாராய் - வந்தெங்களை
ஆண்டருட்கண்பாராய்.

அநுபல்லவி.

க, தாண்டவமேபுரி - யாண்டவனொடும்
வேண்டிநின் ... ... றுடுவளே - அன்று
தக்கன்றலைவீர - பத்திரனைக்கொடு
நிக்ரகங் ... ... கூடுவளே - (ஓம்ஆண்)

உ, திரிபுரத்தையுமதில்- வருகுரூரரையரனல்
தீயேற்றி ... ... விட்டவளே - வந்து
செறுத்தமன்மதனை- வெறுத்தெரிக்கவரற்குத்
தீவிழி ... ... யிட்டவளே - (ஓம்ஆண்)

ங, சரவணபவனுக்கு - அசுரனைவெல்ப[illegible]
சத்திவே ... ... வீந்தவளே - தீர்த்தத்
தடைசெய்யவருமகி-டனையொருஅணங்காலே
நொடியினிற் ... காய்ந்தவளே - (ஓம்ஆண்)

ச, மலையரசன்செய்யும்-அலைவையும்முடன்சொன்ன
மாத்திரம் ... வந்தவளே - வந்து
மந்த்ரவாளிகளுன் - தந்த்ரங்கொண்டுவெல்ல
வும்தயை ... தந்தவளே - (ஓம்ஆண்)

ரு, கன்னிநாடனுக்குச் - சொன்னபடிசிரங்கள்
தன்னைக்கொடுக்கச் ... செய்தவா - தேவர்
களிறுயர்வரமும் - ஒளிசேர்விருதுகளும்
வளமா[illegible] ... செய்தவா - (ஓம்ஆண்)

சா, சோழன்பெண்கேட்க[illegible] தாழ்வில்பாவைதந்தெங்கள்
சுற்றத்தைக் ... பண[illegible]வளே - உன்னைத்
துணையாநம்பியேதினம் -
தீர்த்தருக்கு[illegible]
துன்பத்தைத் ... [illegible] - (ஓ[illegible])

எ, குஞ்சலனுகிய - வஞ்சன்சமர்பொருத
மிஞ்சிநான் ... ... நாரணியே -
தஞ்சமென்றடைந்தோம் - அஞ்சிடாதுகாத்துத்
தயவுசெய் ... காரணியே - (ஓம்[illegible])

அ, ஆதலாலுன்னடிக் - கேதஞ்சங்கூறினேம்
ஆண்டவனே ... தாயே - இப்போ
தடியர்கள்சமர்பொரு - திடச்செல்கிறேங்கூட
ஆயிவரு ... ... வாயே - (ஒம்ஆண்) (௪)

கச்சிக்காரர்கள்மத்தியபூமிக்குவருதல்.

விருத்தம்.

துதிக்குமக்கட்களைமுனின்றுபகையைவெல்லத் ... *
துணைவருதும்போமினெனச்சோழநாட்டுப் ... *
பதிக்கறிவித்தவன்றருபூபாலருந்தம் ... *
படைகளுடன்பிரயாணப்பட்டுத்தாங்கள் ... *
மதிக்குமனைவியர்க்கசுவஞ்சிறப்பாய்வந்தால் ... *
மகிழ்ந்திருப்பீர்சிறப்பிலதாய்வந்தாற்கண்டத் ... *
ததிக்கனமிற்பாயுமென்றேயுறுதிவாக்குத் ... *
தந்திட்டார்போர்க்களத்திலவந்திட்டாரே ... (௫)

வண்ணத்திபதை - இராகம் - தோடி - ஆதிதாளம்.

[கண்ணிகள்.]

வந்தாரேயிருபத்துநாலு - மனைக்கதிபரொனுங்கணத்தே...சாதிபர்
தந்தார்பூபாலர்கள்சேனைகள் - தலங்கள்புகழ்கிறவலங்கை...யாதியர்
தருகரிபரிகளு - மிகுரதபடையுடல
வகைவகைவருகென - மிகைமன்னரேதிடக் - (௧)

சேனாபதிமார்களும்வீரரும் - திடத்தொடவரவர்படைக்குழா மொடு
நானாவிதவாயுதமதுகொடு நகைத்துமிகக்குதித்துகைத்துவரக்கண்டு
நகரியர்வயிரியர் - மிகவுறுதயிரியர்
வெருவெருதிடமொடப்பகல்வந்துகுழ் - (௨)
-ருந்தளநடக்கவென்...றுணா
கண்டாரேயரசர்களிருவரும் - கடந்தித்தவுக்கிரமொடுத்திடுகென
விண்டாரேவிண்டிடு... மிலிரதர்களும்
மிகுமா... மரதர் - டிவருகாலே
...முயருரமுடன் - (௩) [பூ
...மகமும் அதிர்ந்திட த்திசைபிதிர்ந்திடத்திக்
அண்டாண்டமுஞ்சிகளுங்குடைகளுந்தாவிவானமளாவிச் சூரிய
நண்டாமெனுஞ்சிட - இந்திராதிட
சந்திரருமெண - வந்ததேர்களும்
மர் ... (௪)

சாலாள்களும்மந்திரிமார்களும்- கரித்தளத்தவர்-பரித்தளத்தவர்[லர்
வேலாள்களும்வில்லுளாள்களும்-வெடிப்படைக்கலர்தடிப்படைக்க
விடும்விடுமெனவரு-துடிகடலுறுமென
கடகடவெனவரு-தொடரொலிப்பேரிகை - (௫)

டங்காபறைபூரிமத்தளம்-தவில்குடப்பறை-நவில்துடிப்பறை
மங்காநலசல்லரிமல்லரி - வாத்யம்வாரிதிகோஷீட்ட முற்றெழ
மலைகுவடுகள்கரி - நிலகெடத்துகள்வெளித்
தலமுகில்மதிகதிர்த்-தலமதைமேவ - (௬)

அறுநான்மனையார்களுமன்னரும்- ஆதியுள்ளதேசாதி... பதிகளும்
நிறைமாமுடிதரித்துமார்பினில்- நிறைத்தகவசமும்உரத்ததூணியும்
நிமிர்தருபுயபலர் - சமரினில்நிகரிலர்
அமரர்கள்புகழ்கிற - சமரச வீரர்கள் - (௭)

காமேவியதநுவொடுவாளிகள் - கச்சையும்இசைவச்சிராயுதம்
ஊமேவியவெற்றிமாலையும் - ஊதுசங்குடனேமுழங்கிட
ஒன்னலர்வெருவியே - பின்னிடமிகுதிறல்
துன்னியஅதிரண-மன்னர்வரக்......கண்டு - (௮)

இடமோடுவர்வலத்திலோடுவர் - ஈட்டிமுதலியதீட்டிவரு......பவர்
படைபேரணிபேரணியாகப்பகுத்துவருகையில்மிகுத்ததிறல்பெறு
பலபலவீரரும்- வலனுறுசூரரும்
நலனுறுதீரரும்-வலுமைகள்பேசி - (௯)

மலைமேலும்வாரிதிமேலும் - வாசிகளைவிடயேசல்...... ...கூடியே
நிலைமேலும்நின்றதுபோலவே-நீடுவார்சிலர்ஓடுவார்...........சிலர்
நிலைப்பருஞ்......சிலர் - மலைப்பருஞ்சிலர்
கெலிப்பருஞ்... சிலர் - சலிப்பிலாமலே - (௰)

இவ்வாறேமத்தியபூமிக்- கேகிமிக்குள்சா......
செவ்வானளவுற்றிடுடோா- சிறக்கவெங்கணுநிறைக்கவேகட்டி
செவிதுடனிகளுள - வவரவரவர்...தமக்
கவசியமுளவிடு-திகளினி......விருக்கக் - (௰௧)

சதிரோனுங்குடகடன்மேரித்-சரந்தனன்மதிசிறந்தனன்இவர்
சதிரோடுமாலையினியமம்-சந்திவந்தனமுங்கொடங்கணில்
சத்தியைவெகுநல - யுத்தியில்மிகுததி
பத்தியுடனேசெய்து - சுத்தியோடிருந்தார் - (௰௨) (௫)

———

குருவிந்தன்மத்தியபூமிக்குவருதல்.

விருத்தம்.

வேதமுதல்வியினடியர்மத்யபூமி ... ... *
வீற்றிருந்தாங்கொருதூதுவிளம்பக்கேட்ட ... *
காதகனங்குச்சரத்துக்கதிபன்மிக்க ... *
கரிபரிதேர்முதலானகாலாளோடும் ... *
கோதில்மழைகாலக்கார்போலவோங்கிக் ... *
குமுறவெகுபிரஜைகளைக்கூட்டங்கூட்டித் ... ... *
தாதையைக்கொன்றவனைவிடேனெனும்ப்ரமாணந்... *
தருகின்றான்மத்யநகர்வருகின்றானே ... *

வண்ணத்திபதை- இராகம்-சஹாநா- அடதாளசாப்பு.

கண்ணிகள்.

அறநான்மனையார்சமருக்குநிகருற்ற
திறமேதெனவேபகையைக்குறிகுறித்து
அவருக்கும்- தவருக்கும்- சிவருக்கும்- விவரிக்கும்
இவருக்கும்- எவருக்கும்- பயப்படமாட்டேன் -(௧)

எனும்வீரியமேமனதிற்றிடப்படுத்தி
மனவேகமதாம்பரிகட்டிரதமத்தில்
இகலுற்ற- பகழிக்கள்- மிகுவிற்கள்-தகைமிக்கு
வகைவகைக்கொண்- டகமெய்க்கச்- சடுதியிலேறி - (௨)

இரதம்கரியும்பரியும்படைஞர்க்கள்
அரையாநொடியில்வருகிற்கவெனவக்கண்
இரதத்தில்- வருகிற்பர்- கரிவெற்பில்- உறைகிற்பர்
[illegible] கூட்டமதாக - (௩)

வருவார்திரிவார்சரியாகவேமெச்சி
வரைமேலலைமேல்தலமீதினுமொய்த்து
மனுவுக்கள்- தனிமூற்று- மனமெய்க்கும் - வினையத்துக்
குனிவிற்கள்- தனில்வைத்த- சரமழையாக - (௪)

விடுவாரினியாரிவடத்தில்நிகர்செப்பும்
படியேதெனவெப்புகழித்துத்தமைமெச்சி
இருபக்கம்- வரமெத்த- நிருபர்க்கு- ளரசுற்று
இறைபெற்றுப்- பரிவுற்ற- குருவிந்தராஜன் - (௫)

நடுமாகளமேநிமிடத்தினிலேயுற்றுப்
படைபேரணியாய்ப்-பகைஞர்களெதிர்பெற்றுப்
பகைமுற்றும்- வகையொத்து-மிகையுற்ற-இகல்பெற்றுத்
தொகைமிக்கும்- தகையொத்த- சேனைகளோடும்
குஞ்சலனுங்குருவிந்தன்கூடினன் - - (௯)

கந்தவங்கரதேசாதிபதிக்கும் குருவிந்தனுக்குஞ்சம்வாதம்.

விருத்தம்.

தலத்தினிலுயர்ந்தகச்சிச்சாதுவம்மிசருந்திட்ட ... *
நலத்தினன்குச்சரத்துநரபதிமுதலோரிப்பாற் ... *
பலத்துடனிருக்கக்கந்தவங்க்ரதேசாதிபர்க்கும் ... *
வலுத்திடுகுருவிந்தற்கும்வாதம்வந்துற்றதன்றே... (அ)

திபதை- இராகம்- முகாரி-ரூபகதாளம்.

[கண்ணிகள்.]

(கந்த)என்னகாண்குருவிந்தனே - உன்னினைவிலுற்றபடி
எப்படியென்னுமலிந்தத் - தப்பிதஞ்செய்தாய்
(குரு) தப்பிதமெவர்கள்மேலே - செப்புகிறாய்தேசாதிபா
சட்டமாயென்தந்தைதலை - வெட்டினவரார் - (௧)

(கந்த)வெட்டுவதற்கட்டியென்ன- துட்டனுக்கலகஞ்செய்தால்
கட்டியுருட்டியவனை - வெட்டவேணுமே
(குரு)கட்டிவெட்டலாமென்றுவீண்- அட்டகாசம்பேசுகிறாய்
விட்டுவிடுவேனோஇதோ - வெட்டுகிறேன்பார் - (௨)

(கந்த)வெட்டுவேனென்றாய்ச் சிம்மத்தோ-டெட்டிவந்துபுலிபாய்ந்
வெற்றிகொண்டுபோவதற்குச் - சற்றுமாகுமோ [து
(குரு)சற்றுமாவதும்ஆகாதும்- இற்றைக்குள்ளேதெரியலாம்
சண்டையிற்பின்னிடப்போரீர் - கண்டுகொள்ளுவீர் (௩)

(கந்த)காணலாகுமென்றுவெறும் - வீணுரைகளாடுகிறாய்
கச்சிநகரிற்கலகம்-வச்சிடலாமா
(குரு)வைத்துத்தருவித்தேனும்மை - யுத்தகளத்தென்பழியை
வாங்குதற்குளதுவான - பாங்குடையதாய் - (௪)

(கந்த) பாங்குடன்கெடுதியுனக் - கிங்குவந்துவிட்டதனுற்
பகைவாங்கவந்தேனென்று - மிகைபேசினுய்
(குரு) வந்ததிற்சந்தேகமென்ன - இந்தநிமிஷித்திலுங்கள்
வல்லபடையெல்லாம்போக்கி-இல்லையாக்குவேன் - (ரு)

(கந்த) ஆக்குதற்குமுன்னமம்பு - தாக்கியுன்சிரத்தைவெட்டி
அந்தரஞ்செய்துன்படையைச் - சிந்தச்செய்விப்போம் [டிச்
(குரு) செய்துவைப்போமென்றநாவைக்-கொய்துகைகளையும்வெட்
சிந்தியுன்படையைக்கொய்து - பந்தியிடுவேன் - (சு)

(கந்த) பந்தியாவீரரைக்கொய்து - விந்தைசெய்துவைத்துப்பின்னு
பத்தினிமார்களைச்சிறை - மெத்தஎடுப்போம் [ன்
(குரு) இந்தவீரத்தினிலேத - விர்த்திளைத்துப்போனுலதற்
கென்னபந்தயம்வைப்பது - பன்னவேணுமே - (எ)

(கந்த) பந்தயங்கேள்வெற்றிபெற்ற - சொந்தவிருதுகளெல்லாம்
பண்புடன்கொடுத்துநீசொல்- லும்படிகேட்போம் [ள்ள
(குரு) இந்தப்படியென்னைவென்றால் - எந்தன்தேசத்தைக்கைக்கொ
எதுதடைகளுமில்லை -யோதினேன்காணும் - (அ) (எ)

இருபடைகளுமெதிர்த்தல்.

(கலிவிருத்தம்)

தெண்டிரைக்கடல்தேசாதிகாரியுங் ... *
கொண்டல்பெய்வளக்குச்சரநாடனுந் ... *
திண்டிறற்றார்க்கருஞ்செய்துமுடிந்ததைக் ... *
மண்டிடுசேனையுஞ்சூழ்ந்துபோரெதிர்த்தே ... (கூ)

திபதை- இராகம்- மத்தியமாவதி- அடதாளசாப்பு.

கண்ணிகள்.

திருவுறையுங்கச்சி - பெருவிசாலாவதிச்
சேனைகளுக்கிஜ - மானுனதளபதி
குருவிந்தராஜன்-பெருந்தளமேற்சேனைக்
கூட்டம்......விடுத்தானே - பெருஞ்சண்டை
மூட்டத்...தொடுத்தானே - - (க)

குச்சரதேசபன்ப-டைத்தலைவன்றன்
கொழுத்தகாலாளை-முழுக்கவேயேவிட

வச்சிரம்வேலாழி-பிண்டிவாலமழு
வாங்கி ... யடுத்தாரோ - கச்சிச்சேனை
யேங்க ... விடுத்தாரோ - - (௨)

சண்டப்ரசண்டவுத் - தண்டக்காற்றுற்பஞ்சு
தத்தளிக்கின்றதை - யொத்துப்படைஞரைக்
கண்டுவிண்மீதேற்றிக் - கொண்டுபந்தெறிதல்போற்
கண்டித் ... தரிந்தாரோ - பூபாலகர்
சண்டை ... புரிந்தாரோ - - - (௩)

வெற்றிகொண்டாரென்று - சற்றியாங்காரமாய்
வில்லம்புங்கையிற்கொண் - டெல்லையில்லாமலே
சுத்தவீரம்பேசி - மெத்தக்குச்சரர்சரச்
சோனைமாரி ...சொரிந்தார் - சரக்கூடந்
தானுங்கட்டி... ...விரிந்தார் - (௪)

உக்கிரமேகத்தைப் - பக்கென்றுடைத்ததை
யுலகெங்குஞ்சிதறச்செய் - பலமானகாற்றைப்போல்
நிக்ரகமாகச்ச-ரக்கூடந்தன்னையும்
நீங்க ...வறுத்தாரோ - கச்சிக்காரர்
ஓங்கிச் செறுத்தாரோ - - (௫)

ஊழிக்கனல்போல - வாளிசொரிந்திந்த
ஒன்னலர்சேனையைச் - சின்னஞ்செய்புமென்ன
நாழிகைக்குட்டரு - வாளிகட்குறைசெய்ய
நாடித்...தொடர்ந்தாரோ - பெண்மையென்மர்
கூடிப் ... படர்ந்தாரோ - - - (௬)

காளிகொடுத்திடும்-வாளிகளும்வலுக்
கண்டகோடாலிமழுவாழிகொண்டேயந்
நாளிலாழியுற்றகும்பகர்னன்றலைபோல்
நறுக்கிக்...குறைத்தாரோ - குச்சரரைக்
குறுக்கி... யிறைத்தாரோ - - - (௭)

மிகுத்தமலைகளைக்கேண் - டெடுத்திருபத்துநாலு
வீரர்படைபொடியாத் - தீரென்னக்குருவிந்தன்
பகுத்தமல்லயுத்தர் - தொகுப்பாகக்கூடியே
பருத்தமலைகள்...கொட்டினர் - கொட்டியிடித்து
சிரித்துத்துடைகள் தட்டினர் - - (௮)

காலாலுங்கையாலும் - வேலாலும்வில்லாலுங்
கண்டகர்விடுமலைகள் - பிண்டுசில்லுகளாய்ப்போக
வேலும்வச்ராயுதத் - தாலுங்கந்தனிந்த்ரன்
மிகத்துளைத்தறுத்தல்... போலே - வலங்கையார்
செருத்தெறிந்தனர் ... மேலே - (௯)

கச்சியாரிவ்வகை - குச்சரன்சேனையைக்
காற்றிலிலவின்பஞ்சாத் - தூற்றிவிட்டதைக்கண்டு
குச்சரனுங்காரங் - கொண்டுநால்வகைச்சேனை
கொள்ளையா ...யேவிடவே - அச்சேனைகள்
வெள்ளம்போல் மேவிடவே - - (௰)

யானைகளாகிய - பூனைக்குப்புலிபோலும்
சேனைகளாஞ்சித்ர - பானுக்குநீர்போலும்
சோனையாப்பரித்தாளுக் - கேனையபடையெல்லாந்
துடைத்...தெரித்தாரோ - பூபாலகர்
புடைத் ...திருத்தாரோ - - - (௰௧)

கரிதன்னைக்கரிதன்னாற் - பரிதன்னைப்பரிதன்னாற்
காலாளைக்காலாளால் - வேலாளைவேலாளால்
சரிக்கட்டிமுடிந்திடத்-திருக்கிட்டுமாய்த்தனர்
தங்கத்துக்குயிர்...கொடுத்தோர் - தீமையென்னுஞ்
சங்கத்தைத்தூட் ... படுத்தோர் - (௰௨)

இதுகண்டகுச்சரன் - கொதிகொண்டுபலசேனை
ஏகமாகக்கூட்டி - மேகம்போல்விடுத்திட
அதுவந்துபூபாலர் - சிதையும்படியடிக்க
அரண்டோடிப்போனாரோ - முல்லைவனத்திற்
றிரண்டொளிய லானாரோ - (௰௩)

தேடிப்பூபாலமார் - ஓடியதைக்கண்ட
தேசாதிபதிசோழ - ராஜர்க்குத்தெரிவிக்க
நாடில்லாத்தொண்டைமான் - கூடச்சேனாதிபத்யம்
நயந்தன்னோனனுப்பினனே - தேசாதிபர்க்
காத்துணைதினைப் பினனே - (௰௪)

தொண்டைமால்வந்ததைக் - கண்டதேசாதிபர்
சூடுண்டபூனைபோ - லோடிமுன்னோச்சேர்த்துக்
கண்டகக்குருவிந்தன் - திண்டிறற்சேனைமேற்
கலந்துத்தஞ்செய்தாரோ - பகைஞர்கள்
உலர்ந்திடச்சொய்தாரோ : (௰௫)

உடலற்றுங்குடலற்றும் - இடையற்றுந்துடை யற்றும்
உரமற்றுந்திறமற்றுங்-கரமற்றுஞ்சிர......மற்றும்
உலைவுற்றுங்குலை வுற்றும்-நலிவுற்றும்மெலி...வுற்றும்
உருண்டுகிடந்......ததுவே - குச்சான்சேனை
புரண்டுமடிந்.......ததுவே - (௰௬)

ஆதிநாரணிதன் - பாதமறவாத
அன்பர்சேனுதிபர் - வன்பாற்குஞ்சலன்ப
தாதிகள்போய்மாண்ட - தேதஞ்சொன்னகுடி
தாழ்தல்போற்றேய்ந்ததுவே - வெட்டுமரம்
வீழ்தல்போற்சாய்ந் ததுவே - (௰எ)(அ)

குருவிந்தன்போர்க்கோலத்துடன்யுத்தஞ்செய்யவருதல்.

விருத்தம்.

ஊழியழவுட்படும்ப்ரபஞ்சம்போலும் ... *
உறுமிக்கிரிகடறிக்குமுாகர்போலும் ... *
நூழிலடைந்திறந்ததனையறிந்திங்கேயோர் ... *
நொடியினென்னுருயிர்குடிப்பேனென்னக்கொர்ச்சித்
தாழிமழுவேல்முதலாயுதங்கொண்டோங்கும் ... *
யானைமுதற்பேரணியோடசுரேசன்போன் ... *
மூழியொலிவாத்யமுடன்குருவிந்தன்முன் ... *
அணைந்திட்டான்சமர்செய்யத்துணிந்திட்டானே (௰)

மும்முடியரசன் போர்க்கோலங்கொண்டு சமர்செய்தல்.

சந்தவிருத்தம்.

கதிர்விடுமணியணிதுாணிவலயமுயர் ... ... *
கவசமுமறைவரிகழல்பூட்டிக் ... ... *
கடலொலிமுகிலொலியிதுவெனத்திசையுள ... ...*
கடகரிகளுங்கிடுகிடுகிடெனக் ... ... *

கொதிமுரசொடுபலவிதகருவிகள்மதிக் ... ... *
குடையரிக்கொடிமுதல்விருதுகளும் ... ... *
கொடுவரவடையலர்படைபடவிருபுடை ... ...*
குமுறியெவரச்சதுர்ப்படைகளுடன் ... *
நதிமுடியவரிடமமர்பவளருள்படை ... ... *
நலதநுவுகளிருகையின்மேவி ... ...*
நரபதிகளினுரமருவியபுகழ்பெறு ... ... *
நயவிசாலாவதியரசுடனே ... ...*
அதிகொடுமுகிலெனவரையெனவருகிற ... ... *
அரகதமருவியரதமேறித் ... ... *
துங்கனதிகரணசிங்கமும்முடிமன்னன் ... ... *
தோற்றினன்சரமழைதூற்றினனே ... ... (௰௧)

தரு- இராகம்- தோடி- அடதாளசாப்பு.

பல்லவி.

மும்முடிராஜனுக்கும் - குருவிந்தராஜனுக்கும்
மூண்டதேசண்டைநீண்டதே

அநுபல்லவி.

அம்மையின்பலமுங்கச்சி - யின்மனஞ்பலமுங்... கண்டு
அறியவந்தகுச்சர - வெறியனோடமர் ......கொண்டு
சிம்மக்கொடிபடைத்த - மும்முடியனுஞ்... சொற்ற
திருப்பலம்பெற்ற - வீரரும்வர...........முற்ற
செந்தீவாளிக - ளூந்திவிட... ...விட
மூந்துகணைகுரு - விந்தனுந் .. தொட
திண்ணமாகவே - விண்ணும்...பாதலம்
மண்ணுளோர்களு - மூண்ணடுங்...கிட(மும்முடி)

சரணங்கள்.

௧ குச்சரன்சேனைக்கூட்டத்தைக் ... கூட்டினன்
கூட்டிப்பேரணிபோரணியாய் ... ... நாட்டினன்
உச்சிதச்சர்ப்பவியூகத்தை ... ... வகுத்திட்டான்
உம்பரும்வெருவும்படி ... மிகுத்திட்டான்
மெச்சிதூறுமாபூட்டுந்தேரில் ... ...தாவினன்
வில்லுமம்புங்கொண்டொல்லையினில் ... மேவினன்
வைச்சுவாளிபெய்துணிதோளித் ... ரூங்கினன்
வகுத்தவியூகத்தில்மிகுத்திட ... வோங்கினன்

கச்சியான்கண்டுகருடயூகம் ... ...வகுத்தனன்
கண்டனைத்தேயுக்கணையாலே ... செகுத்தனன்
கச்சியான்மேலேகுச்சரன்கணைக ... ... ளெய்தான்
கணத்திலேயதைப்பொடிப்பொடியாச்... செய்தான்

கடல்களும்கடல்களும்பொங்கித்-திடுதிடென்றெகொதித்தாற்போல்
கனகமேருவும்வெள்ளிமேருவும்-சினமுடனேயெதிர்த்தாற்போல்
இடிகளும்இடிகளும்கெர்ச்சித்-தெதிர்த்துப்போர்தொடுத்தாற்போ
எக்கியேமேகமும்மேகமும்-முக்யமாக்கடுகடுத்... தாற்போல்[ல்
வெடிகளும்குண்டுகளுங்கொண்-டிடனுடனே........கெர்ச்சிப்பார்
வேகமாகவேயோடியோடித்-தாகமாகியே........மூர்ச்சிப்பார்
படிகளும்கெடிகளும்அதிரத்-தடிகளோடம் ... .பேவுவார்
பாதலம்பூமியும்வானமும்-பீதிகொண்டிடத்..............தாவுவார்
பந்தையங்கள்கூறிச் - சிந்தைவெம்... பிடுவார்
வந்துவந்துமோதிப் - பிந்திக்கணை ..தொடுவார்
குந்தம்வேலுஞ்சூலம் - முந்திமுந்தி.., விடுவார்
ஐந்திலைவேல்கோடாலி - யுத்திடமாய் நடுவார்[ப்பர்கள்
குதிகுதிப்பர்கள்-மிதிமிதிப்பர்கள்-பதைபதைப்பர்கள்-விதிர்விதிர்
கொதிகொதிப்பர்கள் - மதிமதிப்பர்கள் - சிதைசிதைத்திடவதை
[வதைப்பர்கள்
குருதிவெளமது-பெருவடிகணை-புருவிவிடவிட-குருவிந்தனைவிட
பெரியகரிபரி-யிரதமனுவுகள்-பரியவவருடல்-நெரியநெரிபட(மு)

உ, குருவிந்தன்பத்துப்பதினைந்துகணை... ...தொட்டான்
குமரியன்பனும்பதினைந்தாலறுத் ... ...திட்டான்
குருவிந்தன் நூறு நூறுவாளிகள் ... ... பெய்தான்
குமரியன்பனுஞ்சிறிச்சீறிக் ... ... கொய்தான்
குருவிந்தன்ஆயிரம்ஆயிரம்பகழி... விட்டான்
குமரியன்பனுந்தீயெனும்வாளியாற் ... சுட்டான்
குருவிந்தன் நூறு நூறுயிரத்தைத்துளித் ... திட்டான்
குமரியன்பனும்தாறுமாறுத்துளைத் ... திட்டான்
குருவிந்தன்கோடாகோடியைத் ... ... தூற்றினன்
குமரியன்பனும்ஈடாடி ... ... மாற்றினன்
குருவிந்தன்மந்த்ரபாணம்பிரயோ ... கித்தான்
குமரியன்பன்றின்றறுத்துநிர்வா ... கித்தான்
கோவலனுந்தந்தவக்ரனு - மெவிப்போர் ... தொடுத்தாலென
கோளரிக்கும்கனகனுக்கும் - நீளப்போர் ... அடுத்தாலென
மாவலியுந்தேவேந்த்ரனும் - ஒவில்சண்டை ... ...பிடித்தாலென
வானைராமனும்ராவணனுமன் - றேகயுத்த ,., முடித்தாலென

தேவர்கட்கும்அசுரர்கட்குந் - தாவிற்போர்........ நேர்ந்தாலென்ன
செயனுக்குஞ்சூரனுக்கும் - மாய்விற்போர்... ...சேர்ந்தாலென்ன
தீவுகளுங்கடல்களுங்கிரிகளும் - வாவிச்சிதறியே ... ... அதிர
திசையெழுகண்கள்புகைமண்டி - யேயுதிர்த்துகோப........முதிர

தெற்குமேற்குவடக் - குக்கிழக்கும் ...போவார்
திக்குத்திசையுஞ்சாலூ-தெக்கித்திகைத்துப்பாய்வார்
மக்கிமலைத்திடரிற் - சிக்கித்தேர்களை ... யீவார்
அக்குத்தொக்குமில்லாப் - பக்கம்போவாராவார் [ந்துய
திடுதிடெனவிடு-படைகள்படைகளும்-மடமடெனவது-ஓடியொடி
ரிடிகளெனவிரு- படைநெருக்கியே-கடலிரைலிசெய்து-புடையில
[மர்செய
இரதமிரதமுங் - கரிகள்கரிகளும்- பரிகள்பரிகளும்-துரிதத்தடரவே
ஒருவர்க்கொருவர்கள்- பெருமைபேசியே- சரிசரியாயமர்- புரியத்
[தொடரவே(மும்முடி)

ஹ, தெரிந்துகுச்சரன்சூலத்தை ... ... விடுதிட
தேவியன்பன்தன்சூலத்தாற் ... றடுத்திட
தெரிந்துகுச்சரன்மழுவாயுதம் ... போட
தேவியன்பனுமழுவாலேயதைச் ... சாட
தெரிந்துகுச்சரன்மோகனாஸ்திரம் ... ஏவ
தேவியன்பனுஞ்ஞானாஸ்திரத்தாற் ... றுவ
தெரிந்துகுச்சரன்வாயுவாஸ்திரம் ... புடைக்க
தேவியன்பன்நாகாஸ்திரத்தாற் ... குடிக்க
தெரிந்துகுச்சரன்கச்சித்திரன் தேரைப்போக்க
தேவியன்பனவன்தேரைத் ... தூளியாக்க
தெரிந்துகுச்சரன்கச்சித்திரன்வில் லொடித்திட
தேவியன்பனவன்சிலைதன்னைப் பொடித்திட

சேடனெனுஞ்செஞ்சரத்தைக்குச்சரன்வில்லிற் ... பூட்டினான்
சிரகத்தாரனுங்கருடாஸ்திரத்தாலே ... ...வாட்டினான்
ஆடியேயக்கினியாஸ்திரங்குச்சரத்தான்பெய் ... திட்டான்
அம்மையன்பன்வருணாஸ்த்ரத்தாலுடனேகொய் ... திட்டான்
தேடியோர்பிர்ம்மாஸ்திரங்குச்சரத்தான்செறித் ... ...திட்டான்
சிரகத்தாரன்விஷ்ணுவாஸ்திரத்தாலேயறுத் ... திட்டான்
ஓடுதேர்கொடிகவசத்தைமும்முடியன்துண் ... ... டித்தான்
உக்ரனுஞ்சலன்மறுதேரிற்பக்கென்றேறிக்கண் ... ... டித்தான்
ஊத்துக்காய்கைவில்லைத்- திரத்துக்கச்சியான்...கொய்ய
ஆத்தாஞ்சக்கரஞ்சூலம் - பரித்துக்குச்சரன் ... ...எய்ய

சிரித்துரும்முடியனும் - அரைத்துப்பொடியாச்செய்ய
கருத்திற்குச்சரன்அத்தைச் - சுருக்கிற்றெரிந்து பைய்ய
மேவுந்தனதிட-ஆவித்துணைவேலை- நீவிச்செபஞ்செய்து- ஏவிவிடு
[த்திட
வாவிவராமுன்னந்- தேவியன்பனுந்-தாவிப்பொடிசெய்து- பாவின
[திரியின்
வீரவுரங்கெட-நேரிலுமைதந்த- தீரவேலெடுத்-தோரச்குருவிந்தன்
பாரச்சிரமறுத்- தார்வஞ்செய்துகொல்ல - பேர்கொளும்பூர்மலர்-
[மாரிதூவஇங்வன் (மும்மு) (க)

சாதுவஞ்சர்குச்சரதேயங்கைக்கொண்
டிருத்தல்.

விருத்தம்.

சங்குசிங்கக்கொடிபடைத்தசமயநராதிபர்கள் … … *
சத்துருவைச்ஜெயித்துமிகுவெற்றிகொண்டபலத்தால் … *
பங்கையன்மால்பரவுமுமைதனைமறந்துதர்க்கம் … … *
பண்ணுதல்போற்குச்சரமங்கையர்சிறைகைக்கொண்டு … *
மங்குல்பொழியத்தேயங்கொடிக்கட்டிவெற்றி … *
வாகையணிந்தரசுபுரிந்தொன்னலரைச்ஜெயித்து … *
அங்கணிருந்தாரதன்மேற்கச்சிதனில்நடந்த … … *
தறிவிப்பேனெனமுநிவன்நிறைவிப்பான்றுனே … (௰௨)

சாதுக்களின்குமாரவர்க்கங்கள் தேவதேவி
பூசைசெய்தல்.

சந்த விருத்தம்,

சிலர்கள்குச்சரதேயமதுறவவர்சேயர்தந்தாயர்களுந்தம்வகை... *
நாலுணர்தாதையரானவர்மேவிடுநோன்புடனும்பிகைபூசைசெய *
மாலுடனடர்மாமேவியவனமதில்மாநதிதனிலெழு வெண்சிலையால்
ஆலமதருசிவரூபிதன்வடிவுசெய்தன்புடன்புதல்வர்கள் சிந்திப்பார்*

திபதை- இராகம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்.

[கண்ணிகள்.]

கன்னலாற்பந்த-லுன்னதஞ்செய்து
சொர்ன்னக்கும்பம் ... ... நாட்டினார்
  கன்னிநூலாற்-பின்னியழகாத்
  துன்னுங்கங்கணம் ... ... பூட்டினார்
செந்நெல்மாவிலை - தன்னினுயர்வாய்
வன்னத்தோரணம் ... ... நீட்டினார்
  திரள்பச்சைக்கும்பத் - துறைபால்சொரிந்து
  நிறைபொங்கல்கள்செய் ... ஊட்டினார்
இன்னட்பையலை - உன்னுந்திடமாய்
அன்னைக்குப்பலி ... ... விட்டினார்
  திறந்துவயிற்குள் - நிறைந்தசுரலாற்
  சிறந்தகோர்வை ... ... கூட்டினார்
மின்னுமணிகள் - பொன்னின்வகைகள்
இன்னும்வேணது ... ... சூட்டினார்
  மிகுத்தகனிகள் - தொகுத்துக்கொணர்ந்து
  வருத்துக் ... ... காட்டினார்களே(க)

வெற்றிலைபாக்கு - நற்பழந்தெங்கின்காய்
பொற்புறுதூபங்கற் ... ... பூரமும்
  வெள்ளைமாத்தேன் - தெள்ளமுதுகண்டு
  கொள்ளுஞ்சுவைப்பல ... ... காரமும்
பத்தரைமாற்றுச்-சித்திரப்பணிகள்
கொத்துப்பொன்னோலை ... யாரமும்
  பாதசரந்தண்டை - யோதுங்கண்மலர்
  மீதாம்பொன்னின்பொட்டு ... நாரமும்
சித்ரக்கலைமஞ்சள் - மொய்த்தகந்தம்குங்குமம்
பத்திரபுட்பத்தின் ... ... ஆரமும்
  தெங்குவாழை - யுங்கொண்டியற்றுந்
  துங்கப்பந்தல்விஸ் ... ... தாரமும்
முத்தாரத்தவளை- சுத்தக்கருமணி
யெய்த்திடும்செவ்வோலை ... வாரமும்
  முக்கணாண்டவ - னுக்குத்தக்கதாய்
  மிக்கஅலங்கரித் ... ... தார்களே-(உ)

திரிபுரந்தனை - எரிசெய்நாயகி
பரமதேவி ... ... பூரணி

தீனரக்ஷகி - மோனளக்ஷணி
ஞானசிங்கார ... ... நாரணி
அரியயற்குயர் - வுரியதொழில்கள்
நிருமிதஞ்செய்த ... ... காரணி
அ உ நமசி ஒ ஓம்சிவாவெனு
மூக்யாக்ஷரப்பொரு ... ... ளாரணி
பெரியகாமாக்ஷி - வருநம்மீனாக்ஷி
ஒருபிரணவச் ... ... சீர்அணி.
பிஞ்ஞகன்மிடற்-றின்விடத்தினை
முன்னமுதுசெய் ... ... பாரணி
பிரியமுடன்யாம் - திருவைப்பெறவே
கிருபைசெய்யுமு ... ... தாரணி
ஸ்ரீதாக்கனுமிப்-போதேவந்திடப்
பாதேகாத்தருள் ... தாருமே-(௬)

அடியர்தங்களை - மிடிவருத்தாத
திடந்தந்தின்புசெய் ... ... போதகி
அடியரன்றிய - கொடியரைச்செகுத்
திடும்பலங்கொண்ட ... காதகி
நொடியதன்முன்ன - ரடியர்வேண்டிய
படியறிந்தரு ... ... ணீதகி
நுணுக்கயுக்திநேர் - குணக்கில்ஞானிகள்
பிணக்கையகற்று ... ... மோதகி
கெடிதலம்புகழ் - வடிதிருக்கச்சி
குடிகொண்டருளும் ... ஸ்ரீதகி
இளர்மதியணிந் - துளபெரியவர்க்
குளமகிழ்வுசெய் ... ... சாதகி
வடிவருணர்போல் - அடைவுடன்திகழ்
வடிவுகொண்டிடு ... ... நாதகி
வ்வெம்முன்னரு - ளால்நினைத்தது
தாசமயமமம் ... ... மாதியே-(௭) (௰)

௨௪- மனையோர்-தேவதேவிதரிசனைக்கு வருதல்.

(விருத்தம்.)

இன்புளநன் னூற்றெரிந்தவ்வியற்கையினூற்புவிபுரக்கு*
மிராஜர்சேய்கள் ... ... *

அன்புளசின்மயதேவியைப்போற்றவவளருளால் ... *
அறுநால்வோரும் ... ... *
பின்புதமதுடையநகர்க்கேகவென்றன்னிப்படையின் *
பெருக்கஞ்சூழ ... ... *
வன்புதலவர்பூசைசெய்யுந்தலம்வந்தார்சந்நிதியை ... *
வலம்வந்தாரே ... ... (௰௬)

தரு- இராகம் - மோகனம் - அடதாளசாப்பு.

பல்லவி.

வந்தனர்தெலுங்கு ... ராஜர்கள் - உலகத் ... *
திந்த்ரனொன்றுமஹா ராஜர்கள் ... ... *

அநுபல்லவி.

அந்தரிசுந்தரி தந்தரி மந்தரி ... *
ஆக்ஷிமீனாக்ஷிகாமாக்ஷியருளினால் ... * -(வந்த)

சரணங்கள்.

குஞ்சலனைவெட்டி ... ... மடித்துச் - சிறை
கொண்டுசபதத்தை ... முடித்து
மிஞ்சும்பகைஞரைப் ... ... பிடித்து - அவர்
மிண்டடங்கத்தண்டித் ... தடித்து
விஞ்சும்விசாலையுங் - கஞ்சியுந்திருக்கோட்டை
குஞ்சலன்குச்சர - முஞ்சேர்த்தரசாண்டு
தஞ்சமென்றோருக்கு - அஞ்சலென்றேமிகு
தருமங்கொடுப்பவர் - கருமம்விடுப்பவர் - (வந்த)

சேனைத்தளங்களைக் ... ... கூட்டிக் - கச்சித்
தேசவழியைப்பா ... ராட்டி
யானைகள்மேற்பொதி ... பூட்டி - குஞ்சலன்
ஆஸ்திகளெல்லாமும் ... கூட்டி
கானவள்ளிநாதன் - ஆனவற்கம்மானென்
றானவன்மைத்துன - ரானவர்போலவே
சேனைக்கர்த்தருமத - லானவரும்வரத்
திக்குவிஜயங்கண்டு - மிக்கமகிழ்வுகொண்டு - (வந்த)

அம்மையைத்தோத்திரம் ... பண்ணி - மனைவி
யாருக்குச்சொன்னதை ... யெண்ணி

தம்பினைத்தவமெல்லாந் ... றிஸ்ணி - தாகத்
 தடத்திற்கிசுக்கள்பால் ... நண்ணி
எம்மன்னரும்புகழ்- மும்முடிசூடியே
செம்மையாயலகாளும் - இம்மன்னர்க்கொப்பன்றேன்
திம்மாநிலம்புகழ் - நன்மைநரேந்திரர்
ஏகவிலாசர்கள் - யோகவுலாசர்கள் - (வந்த) (௰௧)

உ௪-மவணயோர்தேவதேவியைத்தோத்தரித்தல்.

விருத்தம்.

முதலவாரந்தேசாதிபதிகள்தம்மை ... *
 முல்லைவனத்தாம்பிகைபூசனைபுரிந்த ... *
சுதர்கள்பணிந்தொன்னலைாவீட்டிவெற்றி ... *
 சூடிவந்தஜெயந்துதிப்பமக்காள்நீரிப் ... *
புதர்பெறுகாணுற்றதென்னென்றரசர்கேட்பப் ... *
 புதல்வரன்னைமார்சுகநீர்பொருந்திச்சேரத் ... *
துதியுமைக்குச்செயச்சொலவிங்குற்றேமென்னத் ... *
 தூண்டினார்இவருமையைவேண்டினாரோ ... (௰௫)

தரு- இராகம்- நாதநாமக்கிரியை- அடதாளசாப்பு,

பல்லவி,

தேவதேவிநமஸ் ... ... காரம் - திவ்ய
சீர்த்திமேவுந்திரி- மூர்த்தத்தாதாரம்
தேவதேவிநமஸ் ... காரம்

அநுபல்லவி.

பாவரூபர்கட்குத் ... ... தாரம் - அமுத
 பாரணைசெய்பவர்க்கின்பசு ... ரீரம்
ஆலநுநீயென்னுந் ... ...! தீரம் - வந்தோர்க்
 கானந்தந்தருளாயிஇந் ... நேரம் - (தேவ)

[சரணங்கள்.]

௧, ஐவகைப்பூதபௌ ... ... தீகம் - செய்
 யதாத்மநிவர்த்திகண்டால்மாயா ... மோகம்
பொய்யென்றணரும்ஐ ... தீகம்- வந்து
 பூரணசைதன்யந்தோனும்லை ... தீகம்

பூண்டுகோஷியைக்-கீண்டரிந் ... ...திடலாம் - ஞானச்சுடர்
தூண்டுங்குருவடி-யாண்டுதெரிந் ...திடலாம் - நிருவிகற்பம்
வேண்டிநூல்குணந்-தாண்டிப் ...புரிந்திடலாம் - சகசநிட்டைக்
கூண்டினின்றுடல்-மீண்டும்பொருந்...திடலாம் - வேதாந்தத்திற்
கூடியனுபவம்-நாடிச்சுகமது-தேடிமனமகன்-றோடிடாவழி
கொண்டுபிர்ம்மத்தைக்- கண்டுசுகவமு-துண்டுறங்கென - விண்ட
[ருள்செய்த (தேவ)

உ, மூலக்கனல்தன்னை ... ...மூட்டிக் - காணும்
மும்மண்டலத்துறும்பிர்ம்மையை ஒட்டி
நாலிரண்டசங்களைச் ... ... சூட்டி - விந்து
நாதத்தோடோங்காரஞ்சுழிமுனையிலநாட்டி
நாலொட்டெட்டெனுங்-காலினைக் ... .கட்டி - அதற்குப்பின்
மூலெழும்பிடு-மூலமதை ... வெட்டி - மதிக்கலை
மேலுருவகை-யாலதைத் ... ... தட்டிப் - பானுக்கனு
கூலமாஞ்செயல்-போலுடன் ... ... ஒட்டி - ரோசகஞ்செய்து
கும்பித்ததைமேலே- தம்பித்துயர்மதி- பிம்பத்தலம்வை - நிரம்
[பப்பால்வரும்
குமரியவிடத்தி- லமர்வள் அறிமினென்-றமலமுநிபகர்- உமைநீத
[ரிசித்தோம்(தேவ)

௩, சின்மயபூரண ... ... வாவி - சர்வ
தேஜோமயானந்தஸ்வரூபமாம் ஆவி
தன்மயரூபர்பால் ... ...மேவி - ஆறு
சமயக்கோட்பாடறுத்திடுமரன் தேவி
சகலபுவனத்தின்-வகைக்குக் ... காரணமே - நிராலம்பி
பகலிரவுமிலாச்-சுகநி ... ..ரூபணமே - சர்வமிர்த
மொகுமொகெனநலம்-புகலும்......ஆரணமே - நிராதாரி
நிகிலமாய்வளர்-அகில ... ...பூரணமே - கருணானந்த
நேமியகமுக-வாமிமிகுநய-காமிமனமகிழ்-சோமிதிகழெழில்
நீலிபிரமக-பாலிமங்கள-சூலியெங்கும்வி-சாலியருள்தரும்(தேவ)

உச-மவுனியார்தேவிமார்கள்குதிரைவரக்கண்டுபுலம்பல்.

சந்தவிருத்தம்.

இந்தவகைசுந்தரியள்சிந்தனையிலங்கணி ... ... *
விருந்தனர்தெனுங்கரிவர்கள் ... ...*

தந்தசதுரங்கமொடிருந்தபரியந்தரிசெய் ... *
தந்திரநியந்தனையினால் ... ... *
வந்தவதையறிந்திறைவர்முந்தவுரைதந்தபடி ... *
மங்கையர்தெரிந்தபஜெயம் ... ... *
எந்தவகைவந்ததெனநொந்துளமறந்துபி ... *
ணிருந்திதையறைந்தலறுவார் ... ...(௰௬)

திபதை- இராகம்-காம்போதி- ஆதிதாளம்.

கண்ணிகள்.

என்னசெய்வோம் ஏதுசெய்வோம் - மன்னுமிவ்வநியாயத்தை
எவரிடத்திலேயுரைப்போம் ... மன்னவரோ-இன்னம்
என்னென்னகாரியங்கள் - தன்னில்பாக்கியிருக்க
இறக்கக்காரணமேது ... மன்னவரோ - (௧)

உயிர்க்குயிராயிருந்தீர் - தியக்காநீங்கள்போனாலிவ்
வுலகிலிருந்தென்பயன் ... மன்னவரோ- எள்ளில்
தயிலம்போலும்புட்பத்தி - லுயர்மணம்போலுநீங்காத்
தாயெங்கேபோனீரையா ... மன்னவரோ - (௨)

திருக்கோட்டையைக்கைக்கொண்டு-வளமன்னனையும்வென்று
ஜெயங்கொண்டசுத்தவீர ... மன்னவரோ - இந்தக்
குருவிந்தன்றன்னைக்கொல்லும் - உரமதில்லாமற்போன
கூத்தென்னநேத்தியையா ... மன்னவரோ - (௩)

பாண்டியநாட்டார்வந்து - வேண்டியபயஞ்சொல்லப்
பாதுகாத்தாண்டதர்ம ... ... மன்னவரோ - நீங்கள்
ஈண்டுகுருவிந்தனைக் - கீண்டியெறிந் [illegible]
இகலற்றுப்[illegible]யோ ... மன்னவரோ - (௪)

சோழனுக்குத்தங்கப்பெண்-வாழக்கொடுத்தன்றேன்செய்
சூதையும்வெற்றிகொண்டீர் ...மன்னவரோ - இந்நாள்
சூழல்செய்குஞ்சலனைப் - பாழ்செய்துவெற்றிமாலை
சூடத்திறமில்லையோ ... ... மன்னவரோ - (௫)

மன்னுயிரெல்லாம்யோனி - தன்னிலுதிக்கவுங்கள்
வம்சம்யாகம்வந்ததே ... ...மன்னவரோ - கச்சி
அன்னைவரமும்முநி- தன்னருளுள்ளவுங்கட்
கபஜெயம்வந்ததேதோ ... மன்னவரோ - (௬)

உங்கள்வீரங்களெல்லாம் - எங்கேபோய்விட்டதந்த
உமைசெயலிவ்வளவோ ... மன்னவரோ - எங்கள்

மங்கிலியவலுவால் - உங்கட்குத்துன்பம்வர
மாட்டாதுநிச்சயமே ... மன்னவரே - (எ)

மறையோர்பெரியோர்கற்றோர்-அறிவோர்குருதெய்வத்தை
வைதிகழ்ச்சிசெய்தோமோ ... மன்னவரே-இரக்கும்
வறியோரைஞானத்தோரை - நெறியோரைப்பக்தியோரை
மனவருத்தஞ்செய்தோமோ ... மன்னவரே - (அ)

அன்னமிட்டுதவிசெய் - நன்மைமறந்துகிரக
ஆச்சிரமந்தப்பினோமோ ... மன்னவரே - தீமை
கன்னங்களவுசூது - பின்னம்பொய்வாதிதெல்லாங்
கற்றோரைச்சிநேகித்தோமோ...மன்னவரே - (௯)

ஐயமிட்டறஞ்செய்யா - வெய்யற்குக்கதியீதென்
றறிந்துக்கொள்ளும்பொருட்டாய் மன்னவரே - சிருஷ்டி
செய்யுஞ்சதுர்முகன்றன்- கையைக்குறுக்கிவரை
செல்வமிம்மட்டுத்தானே ... மன்னவரே - (௰)

சொன்னபடியசுவந்-தன்னந்தனியேவந்த
ஞதென்னமோஅறியோம் ... மன்னவரே - கச்சி
அல்லிமருமக்களாய்- மன்காந்தர்வர்மக்களாய்
அன்பாயும்முடன்வாழ்ந்தோம்...மன்னவரே - (௰௧)

பாவிக்குச்சரணிங்கே - மேவாததற்குமுன்னே
—[illegible]...கெளெல்லாம் ....மன்னவரே - அனல்
தாவும்அக்கினிக்குண்டம் - பாய[illegible]அநீர்சொன்ன
சத்யவாக்யம்போற்செய்வோம் மன்னவரே - (௰௨)(௰௩)

தேவியர்கள் அக்கினிக்குண்டம் பாய்தல்

(விருத்தம்)

தேவியர்புலம்பிச்சோம்பித்தியங்கிக்கலங்கிப்பேங்கி ... ... *
யாவிபோய்மீண்டுந்தேறியவேவருமொருபாற்கூடி ... *
மேவியக்கினிவளர்த்துவிமலியார்க்கபயங்கூறித் ... . *
தாவியக்கினியிற்பாய்த்தலைப்பட்டார்திலைப்பட்டாரே ... (௰௭)

திபதை- இராகம்- பந்துவராளி - அடதாளசாப்பு.

[கண்ணிகள்.]

தேவிமாரெல்லோரும்-மேவிக்காமாக்ஷியைச்சேவித்தாரோ - ஆதி
திரிலோகநாயகி-பரிபூரணியைஉள்ளிற்... பாவித்தாரோ
ஆவியைஅம்மைபால்-ஏவிமெய்துரும்பாக எண்ணினாரோ- எண்ணி
அக்நியைக்குழிதன்னில்-முக்யமாவளர்த்தியே நண்ணினாரோ... (க)

குண்டத்தைவலமாகக்-கொண்டுபத்நிகளெல்லாம்வந்திட்டாரோ-என் [றுங்
குணதெய்வமாந்தங்கள் - கணவர்கட்கபயந்தந் திட்டாரோ
அண்டரும்முநிவருங் - கண்டதிசயமாகப்... பார்த்திட்டாரே-உலகத்
தாண்பெண்யாவருமிந்த- மாண்புகாணவந்துகாத்திட்டாரோ (உ)

அக்கிநியாந்தேவ - னுக்கபயஞ்சொல்லிப்... பாய்ந்திட்டாரோ-தேவி
ஆயினருட்பக்கம் - போயங்கடைக்கலஞ்சேர்ந் திட்டாரோ
கெக்கலியாய்வானோர் - திக்கிற்பல்லாண்டுகள் ... கூறினாரோ - சிவ
கௌரிகாமாக்ஷியின் - கௌரவகீர்த்தியைத் ... தூறினாரோ (௩)

நகரியரெல்லோரும்-அகநைந்துகண்பொத்தித்-துடித்திட்டாரோ-க [ண்ட
நங்கைமார்தலைவிரித்- தங்கத்தறைந்துகண்ணீர் வடித்திட்டாரோ
நிகரில்லாக்கன்னியர்க்- கிஃதுபிரார்த்தமென்றுஞ்சொல்லுவாரோ - க [ருணை
நீலிகாமாக்ஷியின் - ஜாலமென்றுபயம்... வெல்லுவாரோ(௪)(௰௪)

சாதுவம்சர்தேவிமார்கள்அக்கினியிற்பிரவேசமானதையறிந்து

காமாக்ஷியம்மன்சந்நிதியில்முறை

கூறுதல்.

(சந்தவிருத்தம்.)

மங்கையர்களிக்ஙன்வெஞ்செந்தணல்படிந்தார் ...*
மைந்தர்தந்தையர்கள்சுந்தரியைப்பணிந்தே ...*
சிங்கநிகரொன்றுனைசெய்கின்றபலதுங்கர் ...*
சென்றவண்நடந்ததையறிந்துளமயங்கி ...*

எங்குணமிம்மங்கையரிறந்தனர்களென்று ... *
எண்ணியுமைசெய்தசெயலெல்லைமனநண்ணி ... *
கங்கைநதிதங்கிவளமெங்கணுமியைந்த ... ...*
கச்சியுமைநற்சநிதியுற்றிதறைகின்றார் ... (௰அ)

தரு- இராகம்- முகாரி- ரூபகதாளம்.

பல்லவி.

என்னகாரணத்தாலேயம்மா - கன்னியரைக்கொல்றாய்நீசும்மா ...*
அம்மம்மா - சொல்லம்மா - ஆ- ஆ- நல்லது ... ... *
எத்தனை துயர்பற்றிவரினுஞ்சித்தமலதிங்குற்றிடுமா ... *

அநுபல்லவி,

௧, எல்லைகுற்றங்களை - முன்னிச்செய்தோமென்று *
கன்னிமாரைத்தீயில் - மன்னிவிழச்செய்தாய் ... *
உன்னை உன்னை உன்னை - அன்னை அன்னை அன்னை ...*
உண்டுண்டென்றுநம்பத் - திண்டுண்டாடச்செய்தாய் (என்ன)

சரணங்கள்.

முன்னம்முன்னம்மலை - மன்னன்மன்னன்றாலே
என்னஎன்ன அலை - வுன்னிவரச்செய்து
பின்னைப்பின்னையவன் - றன்னைமுன்னிச்சாகத்
தன்னதின்னருளாற் - சின்னபின்னஞ்செய்து
சத்யத்தைநி-லைக்கச்செய்த-சத்யத்தைவி-லக்கச்செயும்
வெற்றித்திறல்-மெத்தப்பணி-பத்தர்க்கருள்-வைத்திருந்தபின்,

௨, பாண்டிப்பாண்டிநாட்டோர் - வேண்டிவேண்டிக்கேட்க
ஆண்டாண்டடைக்கலந் - தூண்டித்தரச்செய்து
ஈண்டியீண்டிப்பாண்டியன்- மீண்டுமீண்டுங்கேட்கக்
கேண்டிக்கீண்டித்தலைகளை - ஆண்டவளேதந்து [யி
பின்னுந்தலை-தன்னின்தலை-மன்னும்படி-யந்நாள்செய்தா
அன்னேயதின்-பின்னேநாங்கள்- என்னேசெய்தோம்- இன்
[னேரத்தில் (என்ன)

௩, மெத்தமெத்தச்சோழன் - வைத்தவைத்ததீதைச்
சுத்தஞ்சுத்தஞ்செய்ய - அத்தையத்தைக்கண்டு
சுற்றிச்சுற்றியோர்பெண்- பற்றிப்பற்றிக்கேட்கப்
பத்துமாற்றுத்தங்கச் - சித்ரச்சித்ரமீந்து
நித்யப்பிர-திக்னைப்படி-சுத்தத்தைநி-றுத்தித்தலைய
வைத்தன்புசெய்-பத்தர்க்கரு-ளுத்துத்தரும்-சத்யத்வமே
(என்ன)

௪, கொஞ்சங்கொஞ்சமேனும் - நெஞ்சுட்டஞ்சமற்ற
வஞ்சர்வஞ்சரின்று - மிஞ்சிமிஞ்சிச்செய்த
செஞ்செஞ்சமரினிற் - குஞ்சலன்குஞ்சலனோடே
பஞ்சபாதகரைப் - பஞ்சுபஞ்சாச்செய்து
துற்செய்கையி-னுற்பத்திகள்-அற்பப்பட-பஸ்மஞ்செய்து
நற்செய்கையி-னுற்பத்திகள்-நிற்பச்செயும்-தற்பூரணி(என்)

கலிபுக்கோட்டருக்குக் கோலவதேசாதிபதி நடந்தசெய்திகூறுதல்.

விருத்தம்.

தடங்கருணையாழியெனநிறைந்தகிர்பா ... *
சௌந்தரியாளடிக்கபயஞ்சாற்றக்கேட்டு ... *
மடங்கலனார்மூன்றோன்றிக்கலிமுநியைக்கூவி ... *
மாற்றலர்மங்கையர்கள்சிறைகொணர்ந்தமாற்றந் ... *
திடங்கொளக்கேளெனவவருமிவனைக்கேட்பச் ... *
சீலரிருபத்துநால்வரிற்சிறந்தோன் ... ... *
மடங்கலையுங்கோலவதேசாதிபன்றான் ... ... *
வணங்கினான்இதுசொல்லஇணங்கினானே ... (௰௩)

தரு- இராகம்- தன்னியாசி- ஆதிதாளம்,

பல்லவி,

குலகுருநாதா - கூறக்கேள்தாதா ... *
குலகுருநாதா ... ... *

அநுபல்லவி;

கலையுணர் ... போதா - கலிக்யான ... நீதா ... *
நலியாவி ... நோதா - மலியோக வேதா - (குல)

சரணங்கள்,

௧, குருவிந்தன் ... மேலே - பொருது ... மூன்றாலே
உளாதர்க்கம் ... போலே - தெரிவையர்கொண்டாலே (குல)

௨, தப்பாமென் ... நீது - செப்பவொண் ... ணாது
ஒப்பினி ... மீது - இப்பொழு ... தோது (குல)

௬, எத்தனை ... கோலம் - வைத்திருந்தா... ...ஜாலம்
சத்திசெய் ... சீலம் - நித்யானு ... கூலம் (குல)

௭, சமயத்தில் ...நேற்று - உமைசெய்த ... மாற்று
தலைமயெண்ணிச் சாற்று - எமதுளந் ... தேற்று (குல)()

தேசாதிபதிகளுக்குக்காமாக்ஷியம்மனுங்க ஸ்பகோட்டரும்விவாகஞ்செய்தல்.

விருத்தம்.

நற்சுபஞ்சோடியரிவ்வாறறையவின்பாய் ... *
நாலிருயோகத்தவனும்நளினமின்மார் ... *
பிற்பொலியுக்கேசவனுக்கநுஷியுங்கேட் ... *
டிதையமகிழத்தொன்னலர்மங்கையனைநீத்து ... *
உற்பவமாயக்தியில்வீழ்ந்தோரையெல்லாம் ... *
உடனெழுப்பியானந்தச்சுபவிவாகம் ... *
பொற்புறச்செய்திடிருமெனஅன்பர்க்குப் ...*
பூட்டுவார்மணமாலைசூட்டுவாரோ ... (உ௰)

பட்டணலங்காரம்.

திபதை - இராகம்- சங்கராபரணம்- ஆதிதாளம்,

கண்ணிகள்.

பட்டணம்நன்றாச்சோடனை ... செய்யப்
பார்வதிமூதியும்அருள் ... பெய்ய
இட்டமாகளல்லோர்களுங் ... கூடி
இன்பமானசந்தோஷத்தை ... நாடி - (௧)

மாடகூடங்கள்சோடனை ... செய்தார்
மண்டபஞ்சிலருண்டாகச் ... செய்தார்
மேடைமாளிகைமேல்வர்னந் ... தீட்டி
வீதியெங்குஞ்சிங்காரங்கள் ... பூட்டி - (உ)

தென்னைகமுகுகன்னல்கள் ... நாட்டி
தெருவெல்லாம்புட்பத்தோரணஞ் ... சூட்டி
கன்னிவாழைகள்செந்நெல்கள் ... கட்டி
கஸ்தூரிபுனுகுசவ்வாதுங் ... கொட்டி - (௩)

சிங்காரமாகப்பந்தல் ... சமைத்துச்
சித்ரச்சாவடியெங்கு ... ... மமைத்து
பொங்காரவண்ணக்கோலங்கள் ... தீட்டி
புகைகள்வாசனைவகைகளுங் ... ... காட்டி- (௪)

யானைதேர்பரிக்கூட்டம் ... ... இருத்தி
ஆகாயத்தெல்லைகொடிகள் ... பொருத்தி
மாநிலங்களெங்கெங்குங்கொண் ... டாட
மங்களம்யாருங்கண்டின்பங் ... ... கூட (௫)

மனைகள்தோறுஞ்சிங்காரம ... ... தாக
வாசவன்உலகேஒப்ப ... ... தாக
கனமுடன்அலங்காரஞ்செய் ... ... கின்றார்
கலியாணமண்டபஞ்சோடிக் ... ... கின்றார்(௬)(௰ள)

கலியாணமண்டபாலங்காரம்,
இராகம் - மோகனம் - அடதாளசாப்பு,
கண்ணிகள்

கலியாணமண்டபம் ... ... நிர்ணித்தார் - பவளக்
கால்களால்தூண்களால் ... ... வர்ணித்தார்
வலிமைவயிரத்துலாம் ... ... பூட்டினார் - திவ்ய
வைடூரியப்போதிகை ... கூட்டினார் - (௧)

புட்பராகச்சுவர் ... ... வைத்திட்டார் - மேலே
பொன்னின்தகடுகளால் ... தைத்திட்டார்
திட்பவர்ணவகை ... ... தழுவினார் - எழில்
சித்ரப்பதுமைக ... ...ளெழுதினார் - (௨)

கோமேதப்பலகைகள் ... நீட்டினார் - அதன்
கோடெங்கும்ரத்நங்கள் ... மாட்டினார்
மாமுத்துச்சரங்களைக் ... கோத்தார் - சுப
மாணிக்கமங்கக்கு ... ... சேர்த்தார் - (௩)

தூணுக்குத்தூணுகள் ... கூட்டினார் - சுப
தூபதீபங்களுங் ... காட்டினார்
சாணுக்குச்சாண்மாலை ... தூக்கினார் - முடியில்
தங்கக்கலசங்களுண்... ... ... டாக்கினார் - (௪)

தூண்டாவிளக்குகள் ... ... ஏற்றினார் - எங்குஞ்
சொர்ணப்பொடிகளைத் ... ...தூற்றினார்
தீண்டாதமேற்கட்டு ... ... கட்டினார் - எந்தத்
தேசரும்வரப்பேரி ... கொட்டினார் - (௫)

தங்கம்வெள்ளிமுதல் ... ... நிறைத்தார் - சொர்ணச்
சபையிற்பன்னிரத்த ... ... நிறைத்தார்
எங்குமில்லாச்சிறப் ... ... பூட்டினர் - விஷ்ணு
இலங்கும்லோகம்போலக் ... காட்டினர் - (௬)

ஸ்ரீ புருஷாளலங்காரம்.

பொன்பாவைநிகராமங் ... ... கையர்களைக் - கச்சிப்
பூரணிநீராட்டி ... ... யவர்களை
அன்பாயணிகளாற்சிங் ... ... காரித்தாள் - செம்பொன்
ஆடைசாத்திமிகப் ... ... பூரித்தாள் - (௭)

கொந்தளவோலையுந் ... ... தோள்வளை - சம்புக்
குழல்நகைவிரல்நகை ... ...கைவளை
சந்திரபவழகாசு ... ... மோகன - மாலை
தண்டைசிலம்பணிந் ... தேகன - (௮)

மாகஅம்மனலங் ... ... காரிக்க - கலைக்கோட்
டதிரியடியருள்ளம் ... ... பாரிக்க
வாகுடன்சிங்காரம் .. பண்ணினர் - சொர்ண
மணவனாதன்னின்மேல் ... நண்ணினர் - (௯)

கலியாணலங்காரம்.

மத்தளமல்லரி ... ... பேரிகை - பஞ்ச
வாத்தியம்நரகெஜம் ... பூரிகை
திந்திபுள்ளாங்குழல் ... ... காகளம் எங்குஞ்
செவிடுபடுமேஅண்ட ... பூகோளம் - (௰)

சங்குதவன்டைகர்ண ... ... எக்காளம் - சின்னம்
தவிலும்நாச்சுரமொடு ... கைத்தாளம்
டங்காகுடமுழாத ... ... டாரி - ஆகுளி
தாளவிராணந்துத் ... ... தாரி - (௰௧)

வாத்தியகோஷிடங்க ... ளடிக்க - வேதியர்
மங்களாசிர்வாதம் ... ...படிக்க
பார்த்திபர்முதலானோர் ... ... கூடப்- பெண்கள்
பரதமாடிக்தேம் ... ... பாட - (௰௨)

பூரணகும்பதீ ... ... ராட்டிச்- சீர்கள்
பொருந்தியதெல்லாம்பா ... ... ராட்டி
காரணநலங்கூசல் ... அறமனை - பிர்ம
கங்கணம்மஞ்சனம் ... அம்மனை - (௰௩)

அம்மிமதித்தர ... ... சாணி - வலம்
ஆகவந்தின்பாக்ஷிக் ... காணி
நன்மையிந்தருந்ததி ... ... பார்க்கச் - செய்து
நல்வசந்தம்ஆடு ... மார்க்கப் - (௰௪)

பூரணமாய்ஆட்டி ... மகிழ்ந்தார் - சுகம்
பொருந்திவாழ்கவென்று ... புகழ்ந்தார்
ஆரணவிதியாவும் ... முடித்தார் - பெண்கள்
ஆலத்திமுதலெல்லாம் ... ... எடுத்தார் - (௰௫)

தேவர்கள்யாவருங் ... ...கூடினர் - சுப
ஜெயஞ்சொல்லியாசிகள் ... ... பாடினர்
ஒவில்புட்பமாரி ... ... தூவினர் - முநிக்கும்
உமைக்குந்துதிகூறி -- மேவினர் - (௰௬)

தேவப்பெண்கள் முதலானோர் சோபனங்கள் பாடுதல்.

விருத்தம்.

புத்திவித்தைபத்திமுதல்மெத்தக்கற்றுப் ... *
பொறைபெருமையறிவடக்கம்புநிதஞ்செல்வம் ...*
இத்தனைமேல்மிகப்பெருகிக்குபேரதேவேந் ... *
திரர்போலவாழ்கவெனவெவரும்வாழ்த்தச் ... *
சுத்தியுடன்இருபத்துநாற்கோத்ரத்தோர் ... *
சுகம்பொருந்திவாழ்கவென்றுசுபஜெயஞ்சேர்.....*
பத்தியுடனரம்பையர்கள்சோபனங்கள் ... *
பாடுவார்இன்பநலங்கூடுவாரோ ... ... *

தரு-இராகம்-சுருட்டி- அடதாளசாப்பு.

பல்லவி,

சோபனம்சோபனம் - ஜெயசுப- சோபனம்சோபனம்.

அநுபல்லவி.

பூ புரக்குஞ்சாதுவம்சப்-புண்ணியர்களெல்லவர்க்கும்(சோப)

சரணங்கள்,

௧, சத்திவரப்பிர ... ... சாதருக்கு
பத்திபெறும்ஞான ... ... போதருக்கு

286

நித்தியமாம்நெறி ... ...நீதருக்கு
எத்தனைபுகழுப்பிரக் ... ... யாதருக்கு
புத்திமிகுத்தோருக்கு... ...புத்திபடைத்தோருக்கு
சித்தியுடையோருக்கு ... முத்திநடையோருக்கு
அத்தன்பிருதிவீசன்... ... அருளுஞ்சந்ததியருக்கு(சோப)

௨, கலைக்கோட்டுரிஷிமகப் ... ... பாலருக்கு
கலைக்யானங்களைத்தேர்ந்த .. ... சீலருக்கு
நிலையானதருமாறு .. ... கூலருக்கு
இலையென்றுநீந்திடுந் ... தூலருக்கு
சிலைதேறும்நூலர்க்குத் ... தலைமைச்செங்கோலர்க்கு
குல்கோத்ரலீலர்க்கு... ... நலமேவும்லோலர்க்கு
பலமேவும்ஈசனருட்... ... பண்புபெறுநண்பருக்கு(சோப)

௩, கச்சியில்வாழுங்கு ... ... பேருக்கு
மெச்சுவிசாலைவாழ் ... ... வீரருக்கு
குச்சரங்கொடிக்கட்டுஞ் ... சூரருக்குப்
மிச்சத்திருக்கோட்டையாள் ... தீரருக்கு
உச்சிதமாரர்க்குப்... ... ... பக்ஷாபகாரர்க்கு
நிச்சயசீரர்க்கு ... ... மெச்சுமுதாரர்க்கு
நச்சியபேர்களையாளும் ... ராஜாதிராஜருக்கு (சோப)

௪, வளைமன்னன்றனைக்கொன்ற ... காண்டீபர்க்கு
திரமாகத்தலையீந்த ... ... திண்டிறர்க்கு
உறையூரர்க்குப்பொற்பெண் ...வேண்டினர்க்கு
வருபல்லாளனைவென்ற ... பாண்டியர்க்கு
குருவிந்தனைவென்றோர்க்கு- பெருவணிகஞ்செய்தோர்க்கு
அரசினிலுயர்ந்தோர்க்கு... ...வரிசைப்பிரபுமார்க்கு
தரையினுயர்செல்வர்களாய்த்-தான்வாழுஞ்சத்யருக்கு(சோப)

௫, மதுவமுதாக்கிய ... ... வாசருக்கு
பதிகளானமஹா ... ... ராஜருக்கு
துதிபெறுஞ்செட்டிமை ... ... நேசருக்கு
மதிமந்திரிமுதலாம்விஸ் ... வாசருக்கு
இதமாம்விசேஷர்க்கு ... ... துதியுமைதாசர்க்கு
நிதியின்விலாசர்க்கு ... ...அதிகவுலாசர்க்கு
இதையமதிற்காமாக்ஷி ..... இணையடிபூசிப்போர்க்கு(சோப)

௬, பாசிலைகாமாக்ஷித் ... ... தாயாருக்கு
வரமருள்தேவதேவி ... ... யாருக்கு

வரதராயருக்கு - ஒருகலைக்...........கோட்டர்க்கு
பிருதிவீஸ்வரனுக்கு - நிரையாந்... தேவர்களுக்கு
இருபத்துநான்மனைஇபல்தேசாதி...பருக்கு(சோப)(ங்கூ)

அப்ஸரகணங்கள்மங்களஞ்சொல்லுதல்.

விருத்தம்,

உம்பர்மலர்மாரிபொழிந்தின்பாய்வாழ்த்த ... *
வுயர்திரிமூர்த்திகள்கிருபாதிருஷ்டிவைத்து ... *
இம்பர்களிலுயர்தேசாதிபனொஞ்ஞான்றும் ... ... *
இந்த்ரசுபவைபவத்தோடெழில்சேர்செல்வக் ... *
கும்பலொடுசந்ததிபெற்றிலங்கிவாழக் ... *
குறைவற்றுசீர்வாதங்கூறக்கண்டு ... ... *
வம்புளவப்ஸரகணங்கள்மகிழ்வாய்த்திவ்ய ... *
வளஞ்சொல்வார்பூரணமங்களஞ்சொல்வாரே (உஉ)

மங்களம்.

தரு-இராகம்-கலியாணி- ஆதிதாளம்.

பல்லவி,

சந்ததந்தேசாதிபர்க்குச்... செயமங்களம் - சுப
சாதுவம்சர்களுக்குச்,...... ...சுபமங்களம்

அநுபல்லவி,

சொந்தகாமாக்ஷியன்பர்க்கு - தூயசெல்வத்தின்இன்பர்க்கு
எந்தநீதிக்கும் முன்பர்க்கு - இவ்வுலகத்... ... திந்திரர்க்கு (சந்த

(சரணங்கள்)

க, சத்தியசம்......பன்னருக்கு மன்னருக்கு.........மங்களம்
தர்மவிஸ்......வாசருக்கு நேச ருக்கு.........மங்களம்
சித்தியை எடுத்தோருக்குப்-பத்தியைத்தொடுத்தோருக்குச்
சத்தியை... உடுத்தோருக்கு- யுத்தியை ...அடுத்தோருக்கு
முத்தியின்தடைது ... ... டைத்தோருக்கு
மெத்தநற்புகழ்ப ... ... டைத்தோருக்குச்(சந்த)

உ, இருபத்துநாற்கோத்திரர்சற் பாத்திரர்க்கு...... மங்களம்
ஐஸ்வரபத்தியருக்கு நித்தியர்க்கு ... ... மங்களம்
பிருதிவீலன் ... வம்சருக்கு - பிரமரூபி......யம்சருக்கு
கருவர்களுக்........கிம்சருக்கு - தரியலலாத்...தும்சருக்கு
பெரியயோகமது ... ...பெற்றோருக்கு
உரியசம்பிரமம் ... ... உற்றோருக்கு (சந்த)

௩, புண்ணியபா...லனருக்குத்......தனருக்கு......மங்களம்
போதநெறி...நீதருக்கு.....நாதருக்கு... ...மங்களம்
கெண்டிதொடை.யாளருக்கு...மண்ணையாள்மணவாளருக்கு
திண்ணியவீ......ராளருக்கு - தண்ணுமின்ற...தோளருக்கு
வல்லமைபெற்றவளர் ... ... மஹாராஜர்க்கு
திண்மையுற்றசுப ... ... சுகபோஜர்க்கு (ச)(உய)

தேசாதிபதிகள் அரசாக்ஷியில்வாழ்ந்திருந்தார்களென்றுநாரதன்சொல்லத்

தேவேந்திரன்கேட்டுச் சந்தோஷித்தல்.

விருத்தம்.

மங்கையர்சோபனம்பாடத்தேவர்பல்லாண்டிசைப்ப *
வங்கரிஷிகள்ஞானிகளந்தணர்வாழிபாட ... *
இங்கிதகாமாக்ஷிதேவதேவிபட்டத்தரசி ... *
எனவிளங்குமீஸ்வரியுமுதியும்வரங்கொடுத்துக் ... *
கொங்கலர்கச்சிக்கொன்றுதிருக்கோட்டைக்கொன்று *
ஓச்சரத்துக்கொன்றுமும்முடிசூடிவாழ்த்தத் ... *
அங்கதேசாதிபர்சுகமாய்வாழ்ந்திருந்தாரென்று ... *
சொல்லியநாரதனேயிந்திரன் அதிக் அமகிழ்ந்தானே (உ௩)

வாழிவிருத்தம் - ௰௩ அடி.

மல்ரயபெருட்டரியாளு பிந்திரர்களும்வாழி ... *
மதிகதிருபிக்கவ்வாழி ... ... *
வாணிலத்துபிபுணமகமேலைசன்கத்தன்வாழி ... *
வல்லமைபெதப்பானேவாழி ... ... *
மன்னுவசேவசர்சண்டேசர்ஞானியர்வாழி ... *
மாதவர்கள்யோகர்வாழி ... ... *

209

வளர்சித்தர்காந்தருவர்வித்தியாதரர்வாழி ... *
மாநிலந்திசைகள்வாழி ... ... *
கலைகளுணர்காளிமுதல்சப்தமாதர்கள்வாழி ... *
கலைமுநிவர்முநிவர்வாழி ... ... *
கயிலையரனடியாருடத்தழைவர்கள்வாழி ... *
கனஞானநால்வர்வாழி ... ... *
கடவுளுணர்நீதிநெறிதருமபுண்ணியம்வாழி ... *
கதியுடன்பக்திவாழி ... ... *
கடலினொடுபுடவிவளமுகிலினங்களும்வாழி ... *
கற்பகமொடாவும்வாழி ... ... *
பலமறைபுராணஞானாகமங்களும்வாழி ... *
பாவலரொடறிஞர்வாழி ... ... *
பரமேஸ்வரிக்கடிமைபூண்டநல்லோர்வாழி ... *
பஞ்சாக்ஷரங்கள்வாழி ... ... *
பகர்சைவமுங்குருலிங்கசங்கமம்வாழி ... *
பரமபிரணவமும்வாழி ... ... *
பண்புமிகுதேசாதிபதிகளொடுமிவர்வாழி ... *
பரவுநாற்சாதிவாழி ... ... *
நலமொடிதுகற்றுப்பிரசங்கித்தபேர்வாழி ... *
நாடிவினவுவர்கள்வாழி ... ... *
நன்மைதருகாமாக்ஷிதேவதேவியும்வாழி ... *
நம்புகுருவருளும்வாழி ... ... *
நல்லகல்விக்களஞ்சியவச்சுக்கூடமும் ... ... *
நாள்வேட்டல்வருகவாழி ... ... *
நளினமலருறைதிருவெனொடுகூடிவாழவெந் ... *
நாளும்நல்வாழிமாதோ ... ... (௨௪)

காமாக்ஷிதுணை.

குருவிந்தனைஜெயித்தகாண்டம்.

முற்றிற்று.

பாயிரத்தில்- விருத்தங்கள் - எ - வெண்பா - க-அ

தருக்கள்-௯- தோடையம் - க - எ- ஆக-௰௫.

உற்பத்திகாண்டத்தில்

விருத்தங்கள் - ௯௬-கலித்துறை-க-உம்.

தருக்கள்-௯௯-திபதைகள்-௫-௯௯-ஆக-௱௯,

வியாபாரஞ்செய்காண்டத்தில்

விருத்தங்கள்- ௨௭-கொச்சகங்கள்- ௨-௨௯.

தருக்கள்-௰௪-திபதைகள்-௰௧-௨௫- ஆக-௫௪.

பாண்டியன்காண்டத்தில்

விருத்தங்கள்-௰௪-தருக்கள்-௰-திபதைகள்-௨- ஆக-௨௬.

சோழனுக்குப்பெண்கொடுத்தகாண்டத்தில்

விருத்தங்கள்-௰௯-தருக்கள்-௮-திபதைகள்-௬- ஆக-௩௩.

குருவிந்தனைச்ஜெயித்தகாண்டத்தில்

விருத்தங்கள்- ௨௪- தருக்கள்- ௰௧- திபதைகள்- ௯ - ஆக-௪௪

ஆக காண்டம்-௫-க்கு-கூடிய- விருத்தங்கள்-௱௯-கொச்சகங்கள்-௨.

கலித்துறை - ௧-வெண்பா - ௧- ஆக-௱௰.

தருக்கள்- ௫௯- திபதைகள்- ௩௩- ஆக-௯௨.

ஆக கூடிய - விருத்தங்கள்-தருக்கள்-௨௱௨.

கருணாம்பிகையேநம;